
NMK
50
17 JAN 1950



# காந்தி

## பா மாலை

ராய. சொக்கலிங்கன்

# காந்தி பா மாலை

ராய. சொக்கலிங்கன்

விற்பனை உரிமையாளர்:

தமிழ்ப் புத்தகாலயம்

மயிலாப்பூர் சென்னை 4.

விலை ரூபாய் மூன்று.

# காந்தி பா மாலை

## நூல் முகம்

நூலுக்கு முகமாக அமைந்திருப்பது நூல்முகம்.

முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம் புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம் என்பன ஒரு பொருட் சொற்கள்.

"காந்தி பா மாலை" என்று பெயர் சூட்டப்பெற்ற இந் நூல், நீண்டநாட்கட்குமுன் பாடப்பெற்ற காந்தி பிள்ளைத் தமிழ், வேலூர்ச் சிறையுறை நாட்களில் செய்யப்பெற்ற காந்தி பதினெண்பா, புதுமைப் பாக்கள், காந்தி கலித்துறை யந்தாதி காந்தி நான்மணிமாலை யாகிய இரண்டும் சேர்ந்த காந்தி இருபா ஆகிய நூல்களின் தொகுப்பேயாம்.

இவற்றுள் காந்தி பிள்ளைத் தமிழ் பல பதிப்புகள் வெளிவந்துவிட்டன. எஞ்சியவையும் தனித்தனி நூல்களாக நிறையச் செலவழிந்திருக்கின்றன. மீதமுள்ள சொற்பப் பிரதிகள் ஒரு கோவையாக இணைந்து, மயிலை தமிழ்ப் புத்தகாலயத்தார் விருப்பத்திற்கிணங்கப் புத்துருப் பெற்று இக் "காந்தி பா மாலை" தோன்றுகிறது. இம் முயற்சி மேற்கொண்ட அப் புத்தகாலய அன்பர்கட்கு என் நன்றி.

காந்தி பிள்ளைத் தமிழ், காந்தி பதினெண்பா, காந்தி இருபா ஆகிய நூல்கள் முழுதும் காந்திமீதெழுந்த பாக்களே. புதுமைப்பாக்கள் என்னும் நூல் தனியாகக் காந்தியைக் குறித்துப் பாடப்படவில்லையானாலும்,

அந் நூலினும் பெரும் பகுதி காந்தி சம்பந்தப்பட்ட பொருள்கள் மலிந்து கிடத்தலால் காந்தி பாமாலையுள் அந்நூல் அடங்கும் தகுதியுடையதே.

உலகில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒருவருக்கு என் ஆசை காரணமாக அணியும் பாமாலையே இது. இந் நூலின் தராதரத்தைப்பற்றி நான் எதுவும் பேசுதல் தகாது.

“புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழில் ஏற்றும்
கவியரசர் தமிழ்நாட்டிற்கு இல்லையெனும்
வசையென்னால் கழிந்த தன்றே”

என்று மகாகவி பாரதி பேசலாம். மற்றவர் அவ் உரிமையைக்கொண்டால் நாடு பழிக்கும். நிற்க, நூலின் தராதரத்திற்கு நூலே சான்று தந்து நிற்குமல்லவா? நூலினுள்புகும் அறிஞர் அதன் இயல்பைக் கண்டுணர்வது தேற்றம்.

இப் பா மாலையுள் அடங்கிய நூல்களைப் பற்றிய விளக்கவுரைகள், அவ் அந் நூல்களோடு இணைந்துள்ள முகவுரைகளால் அறியத்தக்கவை. எனவே இந் நூன் முகத்தை விரிக்காது விடுக்கின்றேன்.

இப் பா மாலையைத் தமிழ்ப் பெருமக்கள், கரங்கொண்டு தூக்கித் தலைகொண்டு தாழ்த்தி உளங்கொண்டு உருகி, வாய்கொண்டு வாழ்த்தி காந்தி திருவடிப் போதில் அணிந்து களிக்கத் திருவருள் நல்குவதாக!

அமராவதிபுதூர்,
12—12—1946.

ராய. சொ.

# பதிப்புரை.

தமிழ்ப் பெரு மக்களே !

காந்தியடிகள் மீது முதல் முதல் நான் பாடியது இக் காந்திபிள்ளைத் தமிழ். இதன் இரண்டு பதிப்புக்கள் செலவாகி விட்டன. இது மூன்றும் பதிப்பு. முதல் பதிப்பினின்றும் பாக்களில் சிற்சில திருத்தங்கள் செய்திருக்கிறேன். முந்திய பதிப்பைவிட இரண்டு மூன்றும் பதிப்புக்கள் திருந்திய முறையில் அச்சிடப்பெற்றிருக்கின்றன. எனது புதிய நூல்களோடு கோவையாகத் தமிழர் கரங்களில் இப் பிள்ளைத் தமிழும் விளங்குவதாக!

சென்னை,
யுவ-பங்குனி-௧௦௨

ஊழியன்,
ராய. சொக்கலிங்கன்.

# உள்ளுறை.


| தொடர் எண். | பெயர் | பக்க எண். |
| --- | --- | --- |
| க | முகவுரை | க |
| உ | பாயிரச் செய்யுள் | ரு |
| ௩ | அவை யடக்கச் செய்யுள் | அ |

## நூல்

| | | |
| --- | --- | --- |
| ச | காப்புப் பருவம் | கக |
| ரு | செங்கீரைப் பருவம் | க௯ |
| சா | தாலப் பருவம் | உசா |
| எ | சப்பாணிப் பருவம் | ௩௩ |
| அ | முத்தப் பருவம் | ச0 |
| ௯ | வருகைப் பருவம் | சஎ |
| க0 | அம்புலிப் பருவம் | ருச |
| கக | சிற்றிற் பருவம் | சாக |
| கஉ | சிறுபறைப் பருவம் | சாஅ |
| க௩ | சிறுதேர்ப் பருவம் | எரு |
| கச | வாழிப் பாட்டு | அ௩ |
| கரு | செய்யுள் முதற்குறிப்பு | அரு |

# முகவுரை

---

பேரன்புடைய சகோதரர்களே !

பிள்ளைத் தமிழ் முன்னோர் வகுத்த தமிழ்ப் பிரபந்தங்களில் ஒன்று என்பது தமிழறிஞர் அறிந்தது. பல்வேறு உருவில் மக்கள் பார்க்கும் இறைவனை அவ்வவர் கொண்ட வடிவத்தில் அமைத்துக் குழந்தையாக்கியும், அவனருள் பெற்ற பெரியார்களைக் குழவியாக்கியும் தமிழ் பாடி இன்புறும் கவி பிள்ளைக் கவி யெனப் பெயர் பெறுகிறது. அதற்கு நமது கன்னித் தண்டமிழ் நாட்டில், கடவுளர்கட்கும் பெரியார்கட்கும் பிள்ளைக் கவிகள் பலப்பல மலிந்து கிடத்தல் போதிய சான்றாம். கவிகளு ளெல்லாம் பாடுதற்கு மிக இனிமை தருவது பிள்ளைக்கவி என்பது அநுபவத்திற் கண்ட உண்மை. அதனாலேயே, எளியேனை ஆட்கொண்ட எம்பெருமான் காந்தியடிகளார்க்கு, ஏழை, பிறந்த தமிழ் மொழியில் ஒரு பிரபந்தம் ஆக்கவேண்டு மென்ற நசை யெழ, அது பிள்ளைக் கவியாகவே பிறங்கவேண்டு மென்ற முடிவிற்கு வந்தேன். அன்றியும், சிறியேன் ஒரு புலவனல்லேன்; பிள்ளைத்தன்மை யுடையவனே யாதலின், பிள்ளைக்கவி பாடுதலே எற்குப் பொருத்த முடைத்து. யான் தமிழ் பாட வல்ல ஒரு தமிழ்ப் புலவன் அல்லேன் என்பதை என்னை யறிந்த எவர்க்கும் யான் கூறவேண்டுவ தின்று. யான் இக் கவி பாட முந்தியமைக்குக் காரணம் காந்தியடிகள் மீது கொண்ட காதலையன்றிப் பிறிதன்று என்பது பலகாலும்

சாதம். எனவே, ஏழை கவியில் பிழை பல மலிந்து கிடக்குமென்பது தேற்றம். அவற்றைப் பொறுத்தருளி, இத்தமிழ் எழுந்தது உலகம் போற்றும் ஒருவன் மேல் என்பதை நன்றாக உளங்கொண்டு மகிழ வேண்டுவதே உயர் தமிழ்வாணர் கடன்.

பண்டு பிறந்தருளிய பல பெரியார்க்குத் தமிழ்நாட்டில் புராணங்களும் பிரபந்தங்களும் பற்பல இருக்கின்றன. என்றாலும், அப்பிரபந்தத்திற்குரிய பெரியார் இப்பூவுலகில் உலவுங் காலத்திலேயே அவைகள் ஆக்கப்பெற்றனவா என்று ஆராயின், சிறியேன் அறிந்தவரை இல்லை யென்றே எண்ணுகின்றேன். எனது தமிழ்க்குரிய இப்பெரியாரிற் பெரியார்க்கு, இவர் ஈண்டுலவும் இற்றை நாளிலேயே புராணம் எழுந்துவிட்டது; பிள்ளைக்கவியும் பிறந்து விட்டது. எனவே, இப்பெரியார் பெருமையைப் பற்றிப் பேசவே வேண்டுவதின்று. அன்றி, அடிகள் பெருமையை முற்றும் பேசும் ஆற்றல் அடியேனுக்குச் சிறிதுமில்லை யென்பதும் ஒருதலை. நிற்க,

இப்பிள்ளைத் தமிழில் முதற் பருவமாகிய காப்புப் பருவத்தை, பண்டு பல்லோர் கொண்ட முறை விடுத்துப் புதிய முறையில் ஆக்கியிருப்பது, இந்து மதத்தின்பாற் பட்டாரேயன்றி, அடிகளைத் தம் குருவாகக் கொள்ளும் ஏனைத் தமிழரும் அடிகள் புகழை அன்புடன் பாடி மகிழவேண்டு மென்ற பெரு நோக்காலேயே. ஆகலின், விரிந்த நோக்குடை, எவ்வறிஞரும் இப்புதிய துறையை வெறுக்கார் என்று உறுதியாக நம்புகிறேன். அல்லாமலும் ஒரு சமயச் சார்பு பற்றிய இறைவனின் ஒரு பெயரைப் பாடுதலைக் காட்டினும் அவ்

விறைவனின் குணஞ் செயல்களையே கூறிச் செல்லுதல் சிறப்புடைத்தென்றே நடுநிலையாளர் கொள்வர். திருக்குறள் அருளிய புலவர் பெருமான் அவ்வாறே அருளியிருத்தல் காண்க.

தமிழ் நாட்டின் இற்றைநாள் நிலை நோக்கியே இப் பிள்ளைக் கவியில் கடும் பதங்களைப் பெய்யாமல் சிறியேனால் இயன்றவரையும் சீர்தூக்கி எளிய மொழிகளாலேயே இத் தமிழைப் புனைந்திருக்கின்றேன். எனவே, இன்றைத் தமிழர் எல்லோர்க்கும் இந்நூல் பயன்படுமென்றே கருதுகின்றேன். எளிய பதங்களையே இத்தமிழ் கொண்டிருத்தலால் அரும்பதவுரைகூட வேண்டாமென்றே எண்ணி விடுத்தேன். ஒரோவிடத்துச் சில சொல் அரிதாக அன்பர்கட்குத் தோன்றுமானால் அவர்கள் மன்னிப்பாராக. பெரும் புலவோர் சாதாரணமாக எண்ணித் தள்ளிவிடாது அடிகளை எண்ணி ஏற்பாராக.

இத்தமிழுக்குப் பிறரிடம் முகவுரை வாங்க வேண்டாமென எண்ணி அடியேனே வரைந்து விட்டேன். அது எனது ஆணவத்தானும் பிறவானும் அன்று. சிறியேன் முன்னுரை கேட்டால், என் தமிழ் எவ்வாறிருப்பினும், நூலுடைப் பெரியோனை எண்ணி, தமிழ்நாட்டில் எவ்வெவர் பெரியாராகக் கொள்ளப் படுகின்றாரோ அவ்வவரனைவரும் தந்தருளுவார் என்பதைச் சிறியேன் நன்கு அறிவேன். ஆனால், முகவுரை பிறரிடம் கேட்டுப் பெற்று மகிழும் முறை தள்ளத்தக்க ஒன்று என்பது ஏழை எண்ணம். ஏன்? நூல் பாடும் ஒருவர் அதனைப் பிறரிடம் கொடுத்து இதைப்பற்றி நீங்கள் நல்லுரை வழங்க வேண்டுமென்று

கேட்டு வாங்கித் தம்மைப் பற்றி அவர்கள் கூறும் உரைகளை யும் சேர்த்து அச்சாக்கி வெளிப்படுத்தல் சரியன்று. ஆத லின், ஏழை கொண்ட இப்புல்லிய எண்ணங் காரணமாகவே அம்முறையை விடுத்தேன். இது கொண்டு அம்முறை கொள்ளும் அன்பர்கள் என்னைக் காயாதிருப்பாராக. அவர் களை இழிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணத்தால் யான் இவ்வாறு செய்யவில்லை யென்ப துறுதி. அம்முறை கொள் ளத்தக்கதா தள்ளத்தக்கதா என்பதை அறிஞர்கள் ஆராய் வாராக.

இவ்வளவோடு சிறியேன் உரைகளை முடிக்கின்றேன் பிழைபொறுத்தல் பெரியோர் கடன்.

யாவும் நன்றேயாக.

காரைக்குடி,
இரக், மார்கழி அ-உ

ஊழியன்,
ராய. சொக்கலிங்கன்.

## பாயிரம்

---

### நூலாசிரியன் பாடியவை

பேர்படைத்த இவ்வுலகில் எவன்பெரியோன்
எனஎங்கும் பெரிதும் ஆய்ந்து
சீர்படைத்த தன்மையினால் தெரிந்தெடுக்கப்
பெற்றஉயர் திருவார் செல்வன்
ஊர்படைத்த நற்றவன்பூ நலம்படைக்கப்
பிறந்தருளும் நல்லோன் ஞானி
கார்படைத்த காதலத்துக் கஸ்தூரி
காதலெழில் கணவன் காந்தி. க

செயல்கண்டும் அவனொழுகும் நெறிகண்டும்
அப்பெரியோன் சிந்தை கண்டும்
மயல்கொண்ட இவ்வுலக வாழ்வைமதி
யாதன்னான் வாய்மை கொள்ளப்
புயல்கண்டு மனமகிழ எதிர்நோக்கும்
மயிலேபோல் பொழுது பார்க்கும்
செயல்கொண்டார் எண்ணற்றோர் இப்புதுமை
உலகிலின்று தெரிகின்றேமால். உ

இன்னபுகழ் செய்கைகுணம் இனிதுடையான்
எவ்வுலகும் இன்றும் அன்றும்
நன்னர்நிரல் ஆய்ந்திடினும் என்றுமிலை
நம்பிபொரு நல்லோன் என்று
மன்னுமுயர் அறிஞரெலாம் மனமகிழ்ந்து
பெருமிதமாய் வாய்ம ணக்கச்
சொன்னமொழி ஆயிரமா யிரமென்றால்
அவன்தூய்மை சொல்லல் ஆமோ! ௩

அப்பெரியோன் அடிமுடியில் அணிந்துவகை
யோடன்னான் அறத்தை ஆற்றிச்
செப்பரிய துன்பமடை திறமையுளார்
பலமக்கள் செயலோன் றின்றி
மைப்படிந்தோன் ஆனாலும் அவன்புகழை
வாயார வாழ்த்து வானேல்
ஒப்பரிய உயர்பதத்தை உறுவனெனும்
ஓரெண்ணம் உள்ளங் கொண்டும், ௪

பாருள்ள மொழியிலெலாம் சிறந்தமொழி
என்றுமொழி பலவும் கண்ட
சீருள்ள பெரும்புலவோர் செப்பியதீந்
தமிழ்மொழிதேர் திருநா டுற்ற
நாருள்ள மக்களெலாம் நற்றவத்தோன்
புகழ்தமிழில் நயந்து பாட
ஏருள்ள இனியதமிழ் எம்பெருமான்
புகழ்தாங்கி இன்னும் ஓங்க, ௫

வேண்டுமெனும் நசைகொண்டும் மெய்யன்றி
வேறறியா விமலன் ஆன
ஆண்டகைஎர்க் காந்தியெனும் அண்ணலவன்
திருப்புகழை ஊறத்தா றுக
றூண்டபெருங் காதலொடு முன்மொழிந்த
தமிழறிஞர் முறையைப் பற்றிக்
காண்டகுசீர் உடையான்மேல் காந்திபிள்ளைக்
கவியெனுமிக் கவினூர் நூலை, ௬

ஏராரும் வளப்பாண்டி மண்டலத்தில்
இயற்கைவளம் இனிதின் ஈண்டிச்
சீராரும் மலையருவி தினம்வீழும்
சீதளமார் திருக்குற் றாலக்
காராரும் பதிதன்னில் காற்றருவி
யொடுபருவ காலம் துய்த்து
நாராரும் உயிர்க்கினிய நண்பரொடு
வாழ்ந்த உயர் நன்னாள் தன்னில், எ

எய்துசகம் ஆயிரத்தெண் ணூற்றுநாற்
பத்தேழாம் எழிலார் ஆண்டில்
செய்யஇரத் தாட்சிதனில் சேராடி
தனிலிறைவன் அருளே கூட்ட
மெய்யறங்கள் மிகமலிந்து மேன்மையொடு
விளங்குதமிழ் விருத்தப் பாவால்
செய்தவன்சீர்க் காரைநகர் ராயசொக்க
லிங்கனெனும் சிறியோன் அம்மா! அ

# அவையடக்கம்

கற்றுணர்ந்த பல்பெரிய கவிவாணர்
வாழ்ந்திடுமிக் கவினர் நாட்டில்
முற்றறிவு படைத்தமுனி முனிவறியா
மேதகவோன் மொழிபொய் யாதான்
நற்றவன்சீர்க் காந்தியெனும் நல்லோனின்
புகழ்பாட நயந்த இந்தச்
சிற்றறிஞன் செயல்கண்டு சிரித்திடுமிவ்
வுலகமெனும் திறங்கொள் ளாமல், க

தமிழ்பாட எழுந்தஎன தறியாமை
தனைப்பொருளாத் தாங்கி யீதை
உமிழாமல் உத்தமன்பேர் ஓங்குபுகழ்
கொண்டதெனும் ஒன்று கொண்டே
அமிழ்தான உரைபகரும் அண்ணலவன்
தனையுளத்தில் அழுந்த ஏற்றுத்
தமிழ்வாணர் பொறுத்தருளல் சாலுமெனச்
சாற்றிடவும் வேண்டுங் கொல்லோ. உ

# காந்தி பிள்ளைத் தமிழ்

காப்பு.

சாந்தம் பொறைகருணை தண்மை புனிதநிறை
காந்திக்குப் பிள்ளைக் கவிபுகல—மாந்தர்
நினைத்தவடி வோடெவர்க்கும் நேர்ந்தவா ஈயுந்
தனித்தபொருள் தாளே சரண்.

காப்புப் பருவம்.

நீபடைத்த உயிர்காத்தல் நின்னியல்பே !
அதினுமுயர் நெறியே பற்றி
நேர்மைதனில் எட்டுணையும் நீங்காமல்
அறம்வளர்க்கும் நேயம் மிக்க
தாய்படைத்த உயிரனைத்தும் தனிபுரக்கும்
தண்ணளியைத் தரும வாழ்வைச்
சாந்தநிறை பெருங்கடலைச் சத்தியத்தின்
தனியுருவைச் சமம்வே றில்லா

ஆய்படைத்த அருமணியை அருட்காந்திப்
பெருமானை அடைவே காத்தல்
ஐயமில்லை ; ஆனாலும் என்னுசை
யாலுரைத்தேன் ஐயனைக்காத் தருள்கவே !
பூபடைத்து விண்படைத்துப் புங்கமுறும்
எரிபடைத்துப் பொருகாற் றேடு
புனல்படைத்துப் பிறபொருளெ லாம்படைத்துப்
புரக்கின்ற புனித மூர்த்தி ! க

புகழ்சேர்சுக் கிலவாண்டுப் புரட்டாதித்
திங்கள்பதி னெட்டாம் நாளில்
புண்ணியநந் திருநாட்டைப் பிடித்தசனி
யகன்றோடச் சனிவா ரத்தில்
மகிழ்கூர மக்களெலாம் மகம்வந்த
பெரியோனை மகித லத்தில்
மற்றொருவர் ஒப்பில்லா மாண்டகுணம்
வாய்ந்தானை வள்ளல் தன்னை
இகழ்செய்கை எள்ளளவும் இல்லானை
என்னெளிய இதயந் தன்னில்
என்றுமுள எம்மானை எழிற்காந்திப்
பெம்மானை இனிது காக்க !
செகமனைத்தும் ஆக்கியளித் தழித்துமறைத்
தருளைந்து செயலும் வல்ல
திண்மையனே சீலமுளார் திருமனத்தில்
தினமுறையுந் தேவ தேவே ! உ

அகழ்வாரைத் தாங்குகின்ற அம்புவிபோல்
அவமதிக்கும் அவர்ப் பொறுக்கும்
அறிவுடையார் தலையாயார் ஆவரென
அறமுரைத்தோன் அறைந்த வாபோல்
இகழ்வாரைப் பொறுத்தவர்க்கும் இன்மொழியால்
உய்யவழி இயம்பு மேலாம்
ஏழையரைத் தோழமைகொள் எங்காந்திப்
பெருமானை என்றுங் காக்க!

திகழுமுல குயிர்தொறுமவ் வுயிர்க்குயிராய்
உள்ளுறைந்து திண்மை கொண்டு
செய்கைமுழு வதுநடத்திச் சிக்கெனவே
பிடித்தவன்பர் சிந்தை நன்றாய்
நெகிழ்கூர என்றென்றும் அவருள்ளங்
குடிகொண்ட நேய வாழ்வே!
நித்தியமே! நின்மலமே! நிர்க்குணமே!
என்னிதயம் நிற்குங்கோவே!

பூதலத்தில் அறம்பொலிய மறந்தொலையப்
பிறந்தருளும் புனிதன் புண்ய
பூமியெனும் பாரதநந் திருநாட்டிற்
போர்ப்பந்தர் பிறங்க வந்தோன்
காதலற வேயறுத்தான் கலங்காதான்
கடமையே கருத்துட் கொண்டான்
கருணையே உருவான எம்பெருமான்
காந்திதனைக் காக்க! காக்க!

மாதலத்து வாழ்மக்கள் வீடடைய
வருத்தசம யங்கட் கெல்லாம்
வழித்துணையாய் அண்டமெலாம் வகுத்துலகில்
வாழுமுயிர் ஆக்கிக் காத்துச்
சாதலுற வேயழித்துச் சங்கையறச்
சாற்றரிய விளையாட் டார்ந்து
சராசரமாய்ப் பிறபலவாய்த் தத்துவங்கள்
கடந்தபரம் பொருளாம் ஈசன்! ச

நின்மக்கள் தம்முள்ளே ஒருசாரார்
மற்றவரை நேய மோடு
நெருங்கியுற வாடாமல் நிகழ்பிறப்பின்
தன்மைகொடு நிந்தை கூறித்
தன்மநெறி சாராமல் சான்றாண்மை
நோக்காமல் சாதி தன்னில்
தாழ்ந்தவரே நீரென்னச் சாற்றுமநி
யாயத்தைச் சகிக்க லாற்றா
தன்னபிழை தனையகற்ற அகங்கொண்டா
வனபுரியும் அம்மான் ஐயன்
அருள்வடிவ மாயுதித்த அறக்காந்திப்
பெருமானை அன்பாற் காக்க!
பன்னரிய பல்லுலகும் பல்லுயிரும்
பல்பொருளும் பகலும் அல்லும்
பல்லுருவும் பல்பெயரும் பல்வேறு
சமயமுமாம் பரம நாத!

அமைச்சனென அவனிமுறை அரசாண்ட
அறந்திறம்பா அறிஞன் அந்நாள்
அரசற்கும் அஞ்சாத ஆற்றல்படைத்
துயர்ச்சிபெறும் அண்ண லான
சமர்த்தனுத் தமசந்த்ரன் மகன்மகனைத்
தந்தைதொழில் தன்னைத் தாங்கித்
தந்தையினுஞ் சதமடங்கு தநயனெனும்
புகழ்கொண்டம் மன்னன் தந்த
அமைப்புடைய பெருநிலத்தை அடையமறுத்
திட்டகாம் சந்த்ரன் ஈந்த
அருமகனைத் திருமகனை அவனிக்கே
ஒருமகனைக் காந்தி யென்னும்
எமைப்புரக்கும் பெருமகனை எல்லாமாய்
அல்லதுமாய் இணையில் லாத
இன்பமதாய்த் துன்பமதாய் இருந்திடுமோர்
இறையவனர் இனிது காக்க.

மத்தெறிந்த தயிர்போல வல்லடிமை
வலியழிய மறங்கள் மாள
வந்தமகாத் மாவென்னும் மாதவனை
மணிவயிறு வாய்த்த மங்கை
நத்தியயல் நாடுசெலும் நன்மகற்கந்
நாட்டார்கொள் கள்ளுன் நங்கை
நசைசயிவற்றை நண்ணுது நல்லொழுக்கம்
நாட்டிவர நவின்ற நன்மைப்

புத்திரியாய் அருமந்த புத்திரனைக்
காந்திதனைப் புவிக்குத் தோன்றாப்
புகழ்த்துணையா விருந்தாட்டும் பொருளாகிப்
பழமையாய்ப் புதுமையாகிச்
சத்துவமாய்ப் பிறகுணமாய்க் குணங்கடந்த
தத்துவமாய் மறைதா னாகித்
தமிழாகி இசையாகிச் சமயங்கள்
ஆனபரன் சார்ந்து காக்க! ஏ

வள்ளுவர்சீர் மனைவியெனும் வாசுகிநேர்
மாண்கற்பு மடந்தை மாற்றம்
மறுத்துரைக்க மாட்டாதாள் வள்ளுவர்சொல்
மனைமாட்சி வாய்த்தமங்கை
எள்ளுகுணம் இறையுமிலாள் எழிற்கணவன்
இன்பதுன்பம் எல்லாம் ஏற்பாள்
இதயந்தான் இனையாமல் எந்நாளும்
ஏவல்செய்யும் ஏதம் இல்லாள்
கள்ளுலவு கருங்கூந்தற் கஸ்தூரி
காதலெழிற் கணவன் கார்நேர்
காந்தியெனும் கன்னியனைக் கடலாகிக்
கல்லாகிக் கருவாய்க் காலாய்த்
தள்ளரிய தரையாகித் தனிவிண்ணாய்த்
தழலாகித் தண்ணீர் தானாய்ச்
சான்றோர்கள் தம்மனத்தே சார்ந்துறையுந்
தனிப்பெரிய தலைவன் காக்க! அ

தகப்பனைப்பெற் றவர்களிலே தரணிமுழு
தீடில்லா தவரே என்னச்
சாற்றுமரி லால்மணிலால் சாருமிராம்
தாசோடு தந்தை சொன்ன
செகம்புகழும் தேவதாஸ் எனுமிவரின்
தந்தைதனைச் சீர்த்தி மிக்க
திருவணிகர் மரபென்றந் நாள்வகுத்த
குலத்துதித்தந் திருமால் சீலம்
அகங்கொண்ட அன்பர்களின் வழிவந்தும்
அவ்வளவோ டமைந்திடாமல்
அவனியுறை பெருமக்கள் அனைவருங்கொண்
டாடுசெயற் காந்தி தன்னை
அகரமுதல் எழுத்தாகி அவைசேர்ந்த
சொல்லாகி அச்சொல் தன்னால்
ஆனபொருள் முதலான அனைத்துமாம்
அண்ணலவன் அடைவே காக்க! க

வேறு.

தென்னாப் பிரிக்கா எனுநாட்டிற்
சீல நிறையு மனைவியொடும்
சிறந்த மைந்தன் தன்னோடுஞ்
சிறைவாழ் வேற்றந் நியர்செய்த
இன்னா ஒன்றோ அம்மம்ம
எண்ணின் இதயம் ஊடுருவும்
எல்லாம் பொறுத்தின் செயல்புரியும்
எம்மான் காந்தி தனைப்புரக்க!

மன்னு அணுவுக் கணுவாகி
மலையிற் பெரிய மலையாகி
மண்ணும் விண்ணும் பாதலமும்
மதியும் ரவியும் தானாகித்
தன்னேர் இன்றி எல்லாமாய்த்
தாணி புகழ எங்குநிறை
தரும வடிவ மாய்த்திகழுந்
தண்மை மிக்க பழம்பொருளே! க0

# 2. செங்கீரைப் பருவம்

போர்ப்பந்தர் தனிற்பிறந்து புவனமெலாம்
புகழ்படைத்துப் பொறுமை யோடு
பொல்லாத மறங்கொன்று அறமோம்பிப்
பாந்தபெரும் பூமி முற்றும்
நார்ப்பந்தர் இட்டவற்றுள் நண்ணிடுவார்
தமைக்கூட்டி நண்ணு தாரால்
நலிவுபல வந்துறினும் நாட்டமதிற்
செலுத்தாது நன்றே நாடி
வார்ப்பந்த மக்கள்மனை மாண்பொருளை
யாந்துறந்து மக்கட் கெல்லாம்
மன்னறஞ்சத் யாக்கிரகம் மற்றபல
அறங்களெலாம் வகுத்துச் சொற்றுச்
சீர்ப்பந்த ஏர்வாடாச் சிறைவாழ்வே!
செங்கீரை யாடி யருளே!
செயற்கரிய செயல்வல்ல சேவகனே!
செங்கீரை யாடி யருளே! க

தீஞ்சாலி விளைபழனத் திருநாட்டின்
ஓர்பகுப்பாய்த் திகழும் பண்டு
திருமலிய வாசுபுரி திண்ணமுறு
பாண்டவர்சீர்ச் செல்வத் தேவி

பாஞ்சாலி யெனுமரிய பதிவிரதை
தனையீன்ற பண்பு மிக்க
பஞ்சநதம் பாவிநலம் படிக்கியும்
பாங்கான பான்மை கொண்ட
பாஞ்சால மெனுநாட்டிற் பகாரிய
பாழான பாத கங்கள்
பலசெய்த வாசாங்கத் தொத்துழையா
மைபூண்டு பண்பால் அன்று
தேஞ்சாலும் மொழிபகர்ந்து சிறைமேயாய்!
செங்கீரை யாடி யருளே!
செயற்கரிய செயல்வல்ல சேவகனே!
செங்கீரை யாடி யருளே! உ

மந்திரியின் வழிவழியில் வந்துதித்தும்
அவ்வாழ்வை மதியா திந்த
மண்ணாசை முதலான மாயையெலாம்
ஒழித்திறைவன் வகுத்து னக்குத்
தந்தபெரும் பொருளையெலாந் தாரணியின்
வாழ்விற்கே தந்த செல்வா!
சத்தியமே கமழ்வாயுந் தண்ணளியே
சார்மனமுந் தாங்கும் ஐயா!
இந்திரிய வயப்பட்டே ஈடேற
வகையறியார்க் கினிய கூறி
எல்லோரும் உயர்நிலையை எய்தவுப
தேசமருள் எழிலார் எந்தாய்!

செந்தாள நந்தினுஞ் செய்காட!
செங்கீரை யாடி யருளே!
செயற்கரிய செயல்வல்ல சேவகனே!
செங்கீரை யாடி யருளே! ரு

எல்லாமாய் அல்லதுமாய் எங்குநிறை
யிறைபடைப்பில் ஏற்றத் தாழ்வாம்
என்றுபல கற்பித்தே இவ்வுலகச்
செல்வத்தால் இறுமாப்புற்றுப்
பொல்லாத நெறிபற்றிப் புண்ணியமென்
பதைமறந்து புன்மை கொண்டு
புவிப்பொறையாத் திரிகின்றார் பலமக்கள்
வேறுபலர் புந்தி யின்றி
நில்லாத உடல்கொண்டு நான்பெரியன்
சாதியினில் நீகீழ் என்ன
நிலையறியா துழல்கின்றார் ஈதென்ன
உலகியற்கை என்ன மற்றோர்
செல்லாத பெருந்துறைசொல் சீராளா!
செங்கீரை யாடி யருளே!
செயற்கரிய செயல்வல்ல சேவகனே!
செங்கீரை யாடி யருளே! சு

வேறு.

ஞாலம் பெறினும் நடுநிலை தவறா
நல்லோய்! நாயேனை
நஞ்சாம் உலகத் தீநெறி யதனுள்
நண்ணா தாட்கொண்ட

சீல! அறத்தை வாயாற் கூவிச்
செய்கை மாறுபட்ட
சிறியோர் தமக்கும் வீண்பேச் சுவையீர்
செய்து காட்டுமென
ஏல வுரைத்தே யுயர்நெறி பற்றி
இருஞ்சிறை புக்கருளி
இன்னல் அனைத்தும் இன்பம் எனக்கொள்
எந்தாய் மோகனனே!
ஆலனை யார்க்கும் அருள்தரும் அமுதே!
ஆடுக செங்கீரை!
அருள்வடி வங்கொண் டவனியில் வந்தவ!
ஆடுக செங்கீரை! ௬

இருநில மதனில் இருந்துயிர் வாழ்தல்
விருந்திட என்றெவரும்
இணையிலை எனுமா றிசைபெறு புலவன்
எந்திரு வள்ளுவனன்
றுரைசெயு மொழியைச் சிரமிசை யேற்றே
ஒருபகலும் வீறு
ஒழியா துற்ற விருந்து புரந்து
வருவிருந் தெதிர்நோக்கும்
பெருமைகள் நிறையுந் திருமலி மக்கட்
பெற்றுயர் புகழ்கொண்ட
பேசின் ஞாலத் தெங்கா டும்நிகர்
பெறுமோ எனத்தக்க

அருமைகள் மிகமலி திருநா டுடையாய்!
ஆடுக செங்கீரை!
அருள்வடி வங்கொண் டவனியில் வந்தவ!
ஆடுக செங்கீரை! ௬

மாநில மதின்வரு மக்கள் பிறப்பின்
மாண்பயன் உணர்ந்தழியா
மன்பெரு வீடடை வழியை வகுத்த
வல்லுநர் பலரெனினும்
வானவர் மண்ணவர் மற்றவ ருந்தொழ
வான்செயல் பலசெய்த
வண்டமிழ் கன்னி வளர்த்த செழுந்தமிழ்
வரம்பமை தித்திக்கும்
தேன்சொரி தெய்வத் தீந்தமிழ் மொழியிற்
றிறம்பா அறமுரைத்த
தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்
திறமெவ ருக்குவரும்
ஆன்றவர் உரைவழி செயல்புரி அறவோய்!
ஆடுக செங்கீரை!
அருள்வடி வங்கொண் டவனியில் வந்தவ!
ஆடுக செங்கீரை! ௭

உலகவர் அவரவர் மதமத குருகுரு
வெனவென உன்னரிய
உயரிய ஒருதனி உறுசெயல் ஒண்புகழ்
ஒளியெனும் உன்னமம்

பலபல படிசொலி அனுதின மும்மகிழ்
பரிசெவர் அறியாதார்
படிதனில் அனைவரும் ஒருபடி எனவுணர்
படிறில் பெருந்தகையே!
கலகல வெளவெறும் உரைபல மொழிகுநர்
மிகமலி காசினியில்
கருதிய தெதுவெஃது அதுவது புரியெங்
காந்திப் பெருமானே!
அலைபுனை நிலமகள் துயர்களை அந்தண
ஆடுக செங்கீரை!
அருள்வடி வங்கொண் டவனியில் வந்தவ!
ஆடுக செங்கீரை

பிறப்பினில் எல்லா உயிர்களு நிகரெனப்
பேசிய பேரறிஞன்
பெரியோன் வள்ளுவன் நல்லுரை மறந்து
பேணத் தக்கவுயர்
சிறப்பெது மிலராய்த் தக்க தகாதன
சீர்தூக் கறிவின்றித்
தீமை புரிந்து நல்லன கனவினுஞ்
சிந்தனை செய்யாத
மறத்தொழி லவரும் பிறப்பினி லுயர்வென
மனத்தெணி மற்றதனால்
மாண்பின ரேனு மிழிவுப டுத்தும்
மதியில் கொடுஞ்செயலை

அறக்களோர் தருள அவதரித் தவனே!
ஆடுக செங்கீரை!
அருள்வடி வங்கொண் டவனியில் வந்தவ!
ஆடுக செங்கீரை! க

இன்னு செய்தார் நாண நன்னயம்
இயற்ற வேண்டுமென
இணையில் புலவன் இயம்பிய இன்னுரை
ஏட்டள வோடின்றித்
தென்னுப் பிரிக்கா ஆகிய இடங்களில்
செய்து காட்டியநின்
கீர்த்தி யுரைக்க வல்லவன் இந்தச்
சிறுமதி யுடையேனே?
கொன்னே அந்தோ முன்னற் கரிய
கொடுமையிற் பல்லுயிரைக்
கோறல் புரிந்த டயரும் வருந்தின்
கூர்வல் உதவியெனுஞ்
செந்நா வுடையாய்! செய்கையும் வல்லாய்!
செங்கோ செங்கீரை!
திருமகள் உறையுந் திருநா டுடையாய்!
செங்கோ செங்கீரை! கo

ஆகச் செய்யுள் உ0-

# 3. தாலப் பருவம்

அன்பா லுலகை வயப்படுத்தி
யாருஞ் செய்தற் கரியசெயல்
ஆற்றி அருளை யறத்தையுயர்
ஆண்மை தன்னை அகலாத
இன்ப வாழ்வை எஞ்ஞான்றும்
இன்றி யமையாத் தைரியத்தை
எல்லா உயிருஞ் சமமென்னும்
இனிய கருத்தை ஏதுமிலா
என்போற் சிறிய ஏழையரின்
இதயம் பதித்த தன்றியென்றும்
எளியேன் உள்ளங் கோவில்கொண்
டிருக்குங் கருணை இருங்கடலே!
வன்பா தகர்க்குங் கதியளிக்கும்
வள்ளால்! தாலோ தாலேலோ!
மக்கள் உய்ய அவதரித்த
மகாத்மா! தாலோ தாலேலோ! க

கன்னல் கண்டு சருக்கரைதேன்
கனியின் அமுதங் கரும்பட்ட
கட்டிச் சுவையுங் கசப்பென்னக்
கழறு மாறு கனிந்தபெருக்

தன்னொப் பில்லாத் தனிமுதல்வன்
தலைமை யிருக்க அவனடிக்கீழ்ச்
சங்கம் இருந்து வளர்ந்தபசுந்
தனிய இனிய தமிழ்க்கோமான்
தென்னன் சோழன் சேரனுயர்
செனகன் ராமன் தருமனெனும்
செங்கோல் வேந்தர் அரசாண்ட
திறம்பா முறையைத் தீநெறிகள்
மன்னும் உலகில் நிலைநாட்ட
வந்தாய்! தாலோ தாலேலோ!
மக்கள் உய்ய அவதரித்த
மகாத்ம! தாலோ தாலேலோ! உ

ஈசன் எந்தை இணையடியை
இதயம் பதித்தே அவனருளால்
இடற விட்ட கரிபணிய
இணைத்த நீற்றின் அறையினிய
மாசில் வீணை மாலைவரு
மதிய மோடு மகிழ்காற்ருய்
வசந்த கால மாய்த்திகழ்
மடித்தற் பொருட்டு வரிந்தசிலை
தூசில் உயர்ந்த தெப்பமதாய்த்
துலங்க ஆழிக் கரைகண்ட
தூயோன் நடைய ருத்துறவி
துன்னு சக்தி யாக்கிரக

வாச மலிசீர் நாவரையன்
வரவே! தாலோ தாலேலோ!
மக்கள் உய்ய அவதரித்த
மகாத்ம! தாலோ தாலேலோ! ௫

இந்நாள் இந்தி யாவிலுளார்
இன்றி அமையாத் தாய்மொழியை
இளமை தன்னிற் பயிலாமே
ஏதி லாரின் ஆங்கிலத்தைப்
பன்னாள் பயின்றும் அமையாமல்
பரநா டணுகிப் படித்தங்கு
பட்டந் தாங்கி வரவேகும்
பலர்போல் நீயும் பண்பின்றி
இன்னா நல்கும் பாதகங்கள்
இயையு மேற்கு நாடுபுகுந்
திருந்தாய்! எனினும் அந்நாட்டார்
இன்பம் எனக்கொள் பாதகத்துள்
மன்னா தன்னை பால்மொழிந்த
மாற்றம் பரந்தோய்! தாலேலோ!
மக்கள் உய்ய அவதரித்த
மகாத்ம! தாலோ தாலேலோ! ௬

முன்னம் நமது திருநாட்டில்
முதிர்ந்த அறிவும் பலர்புகழும்
மொய்ம்பும் படைத்து உலகுய்ய
மொழியும் பெருக்கி முனிவகற்றிப்

பன்னற் கரிய பலபணிகள்
பண்பாய் ஆற்றிச் சமயமெனும்
பாட்டை வகுத்துப் பற்றறுத்துப்
பரம கருணா நிதியாகி
இன்னல் எய்தின் தாமேற்று
இனிய அனைத்தும் படிக்கீந்தோர்
எண்ணற் றோர்கள் எனினுமுனை
ஏய்ப்பார் ஞாலத் தெவரையா?
வன்னம் நிறையும் பாரதத்தாய்
மைந்தா! தாலோ தாலேலோ!
மக்கள் உய்ய அவதரித்த
மகாத்ம! தாலோ தாலேலோ! ௭

வேறு

மெய்த்திரு வரினும் வெந்துயர் வரினும்
விருப்பு வெறுப்பின்றி
மேனாள் ஆன விதிவழி யன்றி
மேவா தியார்க்குமென
ஒத்த மனம்பெற் றுயர்வழி பற்றி
ஒழுகும் உரவோனே!
உண்மைக் கொருவ! திண்மைப் பெரிய!
உறுதிக் குறையுளே!
ஒத்துழை யாமைத் தத்துவ மதனை
உலகறி யச்செய்த
உத்தம! மோகன் தாசன் எனும்பேர்
உறுதவ! என்னுயிரே!

தத்தனை வேலைத் தாணி விளக்கே!
தாலோ தாலேலோ!
தண்ணளி உடையெம் காந்திப் பெரும!
தாலோ தாலேலோ! ௬

மக்கட் குள்ளே பாகு படுத்தின்
மாண்செயல் குணமாதி
வான்வழி பற்றி வகுக்கும் அதுவே
மாபாம்! அஃதன்றித்
தொக்க உடலின் தோற்றங் கொண்டு
சொல்லுதல் அறியாமை!
தோன்றிய யாவும் ஒக்கும் பிறப்பில்
தொழிலொவ் வாதெனவே
பொக்கம் மிக்கவர் புந்தி அழுந்தப்
பொய்யில் பெரும்புலவன்
புகலற மொழியைப் பூவறி யச்செய்
புண்ணியன் நீயன்றோ?
தக்கோர் போற்றுந் தாணிப் பெரியோய்!
தாலோ தாலேலோ!
தண்ணளி உடையெம் காந்திப் பெரும!
தாலோ தாலேலோ! ௭

செல்வம் கல்வி தொழிலதி காரம்
திண்மை முதலான
திருவுடன் இந்நாள் செகத்தனில் வாழும்
தேசத் தறிஞருமே

மல்லல் மிக்க மாநிலம் அதனில்
யார்பெரி யாரென்ன
வகுத்து வகுத்து வானளவோட
வண்புகழ் கொண்டந்நாள்
அல்லல் கடலுள் இன்று கிடக்கும்
அறமலி திருநாட்டில்
அவதரித் தருளுங் காந்தியே பெரியார்
அவனியில் என்னநிறுத்
தல்லறி யாதார் தாணியில் உளரோ?
தாலோ தாலேலோ!
தண்ணளி உடையெம் காந்திப் பெரும!
தாலோ தாலேலோ! அ

அந்தணர் என்போர் அறவோர் என்றே
அறமுறை வள்ளுவனார்
அணிபெற அருளிய அருமையின் உயர்வை
அறியா இந்நாளில்
தந்திர மாகச் சாதிசா தியெனச்
சாற்றிப் பொருளின்றித்
தாந்தாம் அந்தணர் எனப்பல பேசுந்
தகுதியி லாமாக்கள்
சிந்தை நாணச் செயல்செய் தந்தணச்
சீர்த்தியைத் தனிகொள்ளும்
சீல! உனைப்போல் யாருளர் பண்டு
சீர்பெற் றிருந்தவரிச்

சந்திரன் எனவே வாய்மை புரப்போய்!
தாலோ தாலேலோ!
தண்ணளி உடையெம் காந்திப் பெரும!
தாலோ தாலேலோ! ௯

தன்னர சளிப்பது ராட்டினம் ஆகும்
தரித்தத னோக்கையால்
தாழாக்கொடியுஞ் சுழற்றுக வென்னச்
சாற்றிய பெருமானே!
மன்னவர் ஆயினும் வானவர் ஆயினும்
மற்றவர் ஆனாலும்
வழிதடு மாறி மறம்புரி வாரேல்
மதியா தவர்பிழையை
என்வரி னும்மதற் கிறையும் அஞ்சா
தியம்பும் உரவோனே!
என்னிரு கண்ணே! கண்ணுறு மணியே!
என்னார் இன்னுயிரே!
தன்னிகர் இல்லாத் தரணிப் பெரியோய்!
தாலோ தாலேலோ!
தண்ணளி உடையெம் காந்திப் பெரும!
தாலோ தாலேலோ! ௧௦

ஆகச் செய்யுள் ௩௦.

# 4. சப்பாணிப் பருவம்

இனிப்பிறவி எடுக்கும்போ தெம்பெருமான்
உன்குணத்தை இறைவிடாதெல் லாங்கொ டிந்த
இரும்புவியில் இனிமைசெறி என்னருமைத்
தமிழ்நாட்டில் எளியேன்பி றக்க வேண்டும்
கனித்தமொழிக் காரிகையைக் கடிகொள்வ
தானால்நின் காதலிகஸ் தூரி யொத்த
கவினமனை யறம்வளர்க்குங் காதலியைப்
பெற்றடியேன் கடைத்தேற அருள வேண்டும்
மனக்கினிய மகவுளவேல் வள்ளால்நின்
மக்களைப்போல் அதிற்றேவ தாச னைப்போல்
மகவுபல வேண்டுமையா! மாட்சிபெற
இத்துணையும் வாய்த்தநீ பாக்ய வானே
தனிப்பெரியன் இருமுலகுக் கென்னநிலை
சார்ந்தவனே! சப்பாணி கொட்டி யருளே!
தருமநெறி வாழவரு காந்திப்பெ
ருந்தகையே! சாப்பாணி கொட்டி யருளே! க

பிறர்குற்றம் பாராட்டாப் பெருந்தகையை
உலகம்நனி பிறங்கிடவே பேசு மானால்
பிறர்குற்றம் அத்துணையுந் தங்குற்ற
மாக்கொள்ளும் பெருமைபெறு நின்கு ணத்தின்

முறைமுறைகொண் டுன்செயல்கள் மொழியுமா
றறிகில்லேன் முழுமுட னென்செ யவலேன்
மொழியுமறந் தனையாற்ற முடியாமற்
பிறசெய்யும் மொய்ம்பில்லார் தம்மை நோக்கி
இறையுமவர்ச் சினந்துரையா தெற்கில்லைத்
திறமையென இயம்புமுன திணையி லாத
எழிலாரும் திருமொழியை எம்மொழியான்
எடுத்துரைப்பே னிந்தியர்கள் வாழ வந்தோய்!
தறையுய்ய உயர்சாந்தம் தரும்புமுறை
பகரொந்தாய்! சப்பாணி கொட்டி யருளே!
தருமநெறி வாழவரு காந்திப்பெ
ருந்தகையே! சப்பாணி கொட்டி யருளே! உ

தீண்டாமை ஒழிகவெனத் திருவாயால்
மொழிந்திடுவார்! செயல்புரிய அஞ்சி யந்தோ
தெருவழியே அவர்வரினுஞ் செல்லப்பால்
நில்லாதே சீச்சீபோ என்று ரைப்பார்!
தீண்டாமை ஒழிவதற்கு மொழிபுகல்தல்
அமைந்திடுமோ? செயலின்றி மேடை யேறிச்
செகநடுங்கக் கலகலெனப் பலபலசொற்
புகலுவதால் பயனுண்டோ? செய்து காட்ட
வேண்டாமோ? அதுகாட்ட அக்குலத்திற்
பிறந்ததிரு மாமகள்பேர் மேவு பெண்ணை
விரும்பிவளர்த் தெடுக்குமருள் பழுத்தொழுகு
மேதகவோய்! மேன்மையுறு நீதி தன்னைத்

தாண்டாத தண்ணளியே! தனியாடைப்
பெருமானே! சப்பாணி கொட்டி யருளே!
தருமநெறி வாழவரு காந்திப்பெ
ருந்தகையே! சப்பாணி கொட்டி யருளே! ௩

எதிர்கால வாழ்விற்குப் பொருள்தேடா
நன்றன்று கிடைப்பனவையுண் டினிய செய்தே
இரும்புவியின் நலம்நாடி அறம்புரியும்
பெரியோரே எவ்வுயிரும் ஒப்ப நோக்கும்
கதிகாணும் அந்தணராம்! எனமேலோர்
உரைத்தபடி காசினியில் எவ்வி டத்துங்
காண்பாரார் உனையன்றி அந்தணரை!
இதுசரதம்! கனத்தநில் துடைமையெல்லாம்
மதியாமல் அறவழியில் வாரிவிட்டே
இன்றுலக மக்களற வழியி னிற்க
மாதவமே செய்கின்ற நின்குணத்தை
ஒண்புகழை மகிமையுடத் தேவ நாட்டுஞ்
சதியாதார் செய்ந்நன்றி கொன்றாரே
சங்கையிலே சப்பாணி கொட்டி யருளே!
தருமநெறி வாழவரு காந்திப்பெ
ருந்தகையே! சப்பாணி கொட்டி யருளே! ௪

கொன்னேநம் இந்தியரைக் கூலியெனப்
பெயர்தந்து கொடியவுடல் நிறம்பி ரித்துக்
கொண்டுகுணஞ் செயலாதி கூர்ந்தாயா
திறமாந்து கூசாமல் இழித்து ரைத்த

அன்னியர்கள் செய்கொடுமை அறிந்தவுடன்
ஆற்றுதே அவரன்பிற் கெளிய ஞகி
அங்குற்றன் னியர்செயலுக் கிலக்காகி
அடியும்பட் டங்தோவென் சொல்வ னந்தத்
தென்னுப்பி ரிக்காவில் திருமகள்நேர்
மனைவியொடு சிறைப்பட்டு நீகி டந்த
செயலுரைத்தற் கெளிதாமோ? இதுசெய்தார்
பெரியரெனச் செப்புவதற் கய்ய மென்னே?
தன்னேரில் லாதவனே! என்னிதயம்
உள்ளவனே! சப்பாணி கொட்டி யருளே!
தருமநெறி வாழவரு காந்திப்பெ
ருந்தகையே! சப்பாணி கொட்டி யருளே!

வேறு

இனிமை செறிந்திடு தமிழ்மொழி அதனை
ஏற்கா தம்மக்கள்
இருநிலம் அறிய இழித்தாங் கிலமொழி
ஏற்றுத் திரிவதுபோல்
தனிமொழி ஆகிய தாய்மொழி பேணுந்
தன்னறி வில்லார்க்குத்
தாரகம் ஆவது தாய்மொழி யேயெனத்
தாட்டிக முடன்கூறும்
கனிவு பொருந்தச் சோதரர் யாரையுங்
கட்டித் தழுவாதே
கண்டிடிற் றீண்டத் தகாதவ ரென்னக்
காவத வழியோடும்

குனிவுறு மாந்தர் கோளரி அனையாய்!
கொட்டுக சப்பாணி!
கோதறு குணமுள கூர்ஜர நாட!
கொட்டுக சப்பாணி ௬

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யேல் தான்பிறி
தின்னுயிர் நீக்குவினை
தன்னையென் றந்த வள்ளுவ ரன்று
சாற்றிய உரைப்படியே
பன்னற் கரியநின் சபர்மதி யாச்ரமப்
பாங்குறை பாம்புகளைப்
பாறிட வேண்டிய பக்தரைத் தடுத்துப்
பரமனெவ் வுயிர்களினும்
மன்னுதல் கண்டும் மரபல கோறல்
மாற்றுக இக்கருத்தை
மாசுகம் பாலிலை எனில்நமைச் செய்வதென்?
மற்றவை இன்னுயிரைக்
கொன்னே போக்குதல் அவமென உரைத்தவ!
கொட்டுக சப்பாணி!
கோதறு குணமுள கூர்ஜர நாட!
கொட்டுக சப்பாணி! ௭

ஏழைப்பங் காளன் எம்மான் நீயென
இயம்புதல் என்குற்றம்
ஏழையர் பொருட்டா எந்தைநீ செய்த
இருஞ்செயல் யார் வல்லார்?

காருடன் அந்நாள் ஆலையின் தொழிலோர்
கருதிய கூலிபெறக்
கருமம் விடுத்துப் பட்டினி கிடந்த
காலத் தவர்க்காக
வாழியெம் பெருமான்! உணவுகொள் ளாமல்
வருந்திச் சின்னுளில்
மகிழுவ வர்க்கருள் மாண்செயல் ஏழை
வகுக்குந் தாமாமோ?
கோழை தவிர்க்கப் பிறந்தருள் குருவே!
கொட்டுக சப்பாணி!
கோதறு குணமுள கூர்ஜா நாட!
கொட்டுக சப்பாணி! அ

மேனாட் செய்த வினைவழி இந்த
மேதினி தனிலிறைவன்
மிகுபொருள் சிறுபொருள் அவரவர்க் கேற்ப
மேவிடத் தருமென்றும்
ஆனவப் பொருளில் பிறர்பொருள் ஒருவன்
வெளவுதல் களவென்றும்
அறமுறை நூலும் பிறபெரி யோரும்
அறையக் கேட்டனமால்
கானமர் மொழிசேர் காந்திப் பெரும!
கடல்சூழ் காசினியில்
காரியம் ஆற்றத் தகுபொருள் தவிரக்
களவே மற்றதெனக்

கோனே! நின்பால் அன்றிக் கேட்டிலம்
கொட்டுக சப்பாணி!
கோதறு குணமுள கூர்ஜா நாட
கொட்டுக சப்பாணி! ௯

வேறு.

இத்தரை செழிக்க இன்றே
இணையிலா ராட்டை எடுத்தே
எழில்மிகு பஞ்சைக் கதிரில்
ஏற்றியே நூற்ற நூலைக்
கைத்தறி கொண்டு நெய்வீர்!
கடைத்தே றுமார்க்கம் இதுவே!
கண்ணிய மின்றி வீணே
கனதனப் பட்டந் தாங்கிப்
பித்தரைப் போலலைந் தந்தோ!
பேசுவதிற் பயன் என்னே!
பேச்சைச் சுருக்கி இன்றே
பெருக்குக செய்கையை என்று
சத்திய உரையருள் சான்றோய்!
சப்பா ணிகொட்டி யருளே!
சற்குரு மணியே காந்தி!
சப்பா ணிகொட்டி யருளே! ௰

ஆகச் செய்யுள் ௬௦.

# 5. முத்தப் பருவம்.

சிந்தை இனிக்கும்! செவியினிக்கும்!
 தேகம் புளகாங் கிதமெய்தும்!
திருவாய் இனிக்கும்! கண்களிக்கும்!
 தெவிட்டா இன்பஞ் சேர்ந்திடும்! பின்
முந்தை வினைகள் முறிந்தோடும்!
 முனிவிங் கிடமே தினியென்று
மூதுகு காட்டும்! மொழி நன்றாம்!
 முத்தி கிடைக்கும்! பெருங்கருணை
வந்துபொருந்தும்! காந்தியெனும்
 வள்ளால்! நினது திருப்பெயரை
மனத்திற் பதிக்கச் செவிமடுக்க
 வழுத்தக் காணப் பெறுவார்க்குச்
சிந்துஞ் சாந்தக் கனிவாயால்
 தேவா முத்தந் தருகவே!
செல்வா நின்றன் மெய்ம்மணக்குந்
 திருவாய் முத்தந் தருகவே! ௧

இகத்திற் பரத்தில் உறுமின்பம்
 யாவும் நல்கும்! இருவினையை
இல்லா தழிக்கும்! இணையில்லாய்!
 என்றும் உலாவப் பேரின்பம்

அகத்துண் டாக்கும்! ஆணவத்தை
அறவே அகற்றும்! அறிவளிக்கும்
அழியாப் புகழை ஆக்கிடும்!பின்
ஆன்ம ஞானம் அமைவியும்!
முகத்திற் றிருமான் நடமாக்கும்!
முடிவில் புகழான் மூதறிஞன்
முனிவொன் றுண்டென் றறியாத
மோகன் தாச காந்தியெனும்
செகத்தில் உயர்ந்த பாரதத்தாய்ச்
சேயே முத்தந் தருகவே!
செல்வா நின்றன் மெய்ம்மணக்குந்
திருவாய் முத்தந் தருகவே! ௨

மரணம் வரினும் பிறவரினும்
மதியா தவற்றை மயிர்நீப்பின்
வாழாக் கவரி மானென்ன
மானம் புரந்து மாற்றார்பால்
சரணம் புகுந்தே மற்றவரின்
தயவை நாடி இரந்துண்ணும்
தன்மை கொண்ட தேசிய
சபையைச் சகத்தார் யாவருமித்
தருணம் மதிக்க நிறுத்தியதிற்
சத்யம் பொறுமை கருணையெனும்
தக்க பொருள்கள் தமைவிரவித்
தாணி இன்ப வாழ்வதனைத்

திரணம் எனவே கொள்காக்தித்
தீரா! முத்தந் தருகவே!
செல்வா நின்றன் மெய்ம்மணக்குத்
திருவாய் முத்தந் தருகவே! ௩

செங்கோல் செலுத்தும் முறைதிறம்பின்
செய்யத் தக்க திறவென்னும்
செம்மை யறத்தை யுலகிற்குச்
செப்பி அதனாற் சிறைக்கோட்டம்
துங்க முறநீ புகுந்துறைநாள்
தொழுதுன் அருளைப் பெறவந்த
தூய நின்றன் நல்வாழ்க்கைத்
துணைவி துரிசில் திருமனத்தாள்
எங்கள் அன்னை கஸ்தூரி
இனிய முகத்தை நோக்கிநீ
இன்னுஞ் சிறையேன் ஏகவில்லை
என்ன மொழிந்த கனிவாயால்
தெங்கு மலியும் திருநாட்டுத்
திருவே முத்தந் தருகவே!
செல்வா நின்றன் மெய்ம்மணக்குந்
திருவாய் முத்தந் தருகவே! ௪

தேனார் மொழிசேர் பாஞ்சாலச்
சீரார் செல்வப் பாவையரைச்
செய்யா தனசெய் தவமதித்துச்
சிறுவர் பெரியோர் பல்லோரை

வானு டேற்றி எக்காளும்
மறக்க முடியாப் பழிகொண்ட
வண்ணங் கண்டும் அவர்ச்சினந்து
மாற்றம் ஒன்றும் உரையாது
தானே அரசு வந்தெய்தும்
சத்யாக் கிரக நெறிபிடித்தால்
சாதம் இதுவே என்றுரைத்த
தண்மைக் காந்தி! சாந்தமெனுந்
தேனே ஒழுகு செம்பவளத்
திருவாய் முத்தந் தருகவே!
செல்வா நின்றன் மெய்ம்மணக்குந்
திருவாய் முத்தந் தருகவே! ரு

பாரார் புகழ்சேர் பார்த்தனபி
மன்னன் வீமன் பகல்மைந்தன்
பண்பு மிக்க ராமனவன்
இளவல் ஆதி பலவரசர்
சீரார் வலியோ டந்நாளில்
சீர்த்தி நாட்ட இனிதிருந்த
செல்வத் திருநா டின்றேழைத்
தேச மாகிச் செயலிழந்து
ஆரார் வரினும் அரசுமுதல்
அனைத்துங் கொடுத்தே அவர்வாய்பார்த்
தண்ணாந் திரங்கி அழியுமதற்
காற்று துரிமைப் போராடும்

தீரா! காந்தி! செம்பவளத்
திருவாய் முத்தந் தருகவே!
செல்வா நின்றன் மெய்ம்மணக்குந்
திருவாய் முத்தந் தருகவே

வேறு.

இறைமனம் இன்புற அறம்புரி நின்னை
இப்புவி மக்கள்சிலர்
எங்கிருந் தோவந் திங்குசெய் சட்டம்
கடந்தனை எனச்சொல்லி
சிறைசெய்து நீதி மன்றத் தேற்றிச்
செப்புக மொழியென்னச்
சீலநீ அரங்கத் தன்று மொழிந்த
திண்மைகொள் திருமொழியைத்
தறைமதி இரவி தாமுள வரையும்
தங்கத் தேடுசெய்து
சாலப் பதித்தே அருநிதி மும்மது
சாற்றற் கரியதகு
முறையுள தண்ணல்! அத்திரு வாயால்
முத்தம் அளித்தருளே!
மொழிவழி உறையும் மோகன தாச!
முத்தம் அளித்தருளே!

நின்வழக் கதனில் தீர்ப்புரை அதிபர்
நின்வய மேயாகி
நிலவிய ஆங்கிலச் சட்டப் படியே
நினைச்சிறை புகல்வதற்குத்

தன்மனத் தெணியுன் தகுதியை நோக்கிச்
சஞ்சல மிகவுற்றுச்
சாலப் பலப்பல மாற்றம் உரைத்துத்
தண்டிக் கும்பொழுதும்
என்னினும் மிக்க இருங்களிப் புடையார்
எவரும் இரார் நீங்கள்
எழில்பெற விடுதலை யேற்றால் என அன்
றியம்பிய இன்னுரையை
முன்னி மகிழ்ந்தேன் முனிவறி யாதாய்!
முத்தம் அளித்தருளே!
மொழிவழி உரையும் மோகன தாச!
முத்தம் அளித்தருளே! அ

இந்தியர் ஆருயிர் நீயென இயம்பல்
இம்மியும் மிகையில்லை
இத்தகை உயிர்உடல் நீங்கிடு மோவென்
றெண்ணத் தக்கதில்லை
வந்த பெரும்பிணி யாலன் றுன்னுடல்
வாள்கொண் டறுக்குமுன்னர்
மருங்கமர் ஒருவர் நாட்டிற் கென்ன
மாற்றமை யாவென்னச்
சிந்தைகொண் டேதும் செப்ப மறுத்துச்
சிறையாள் ஆகும்நான்
செய்தி உரைத்தல் தகாதென மொழிந்த
செய்கையை என்னென்பேன்!

முந்தி விரைந்தம் மொழிபகர் வாயால்
முத்தம் அளித்தருளே !
மொழிவழி உறையும் மோகன தாச !
முத்தம் அளித்தருளே ! ௯

இருமூன் றாண்டு சிறைவாழ் வேற்றே
ஏர்வா டாத்தலத்தில்
இனிதமர் நாளில் இரும்பிணி உறவே
எம்மான் உனைப்பூனாப்
பெருநகர் கொடுபோய்ச் சாசூன் வைத்ய
சாலை பிறங்கவைத்துப்
பெரும்புகழ் கொண்டார் "மாடாக்" ஆண்டு
பெரியோய் ! நீபெற்ற
அருமுப சாரம் யாரே பெற்றார்'
அரசரில் வந்தாலும்
அடைதற் கரிதே சிறையாள் ஆன
ஐயநீ பெற்றவது
முருகமர் செயலோய் ! முன்னிய ! புரிவோய் !
முத்தம் அளித்தருளே !
மொழிவழி உறையும் மோகன தாச !
முத்தம் அளித்தருளே ! ௧௦

ஆகச் செய்யுள் ௫௦

# 6 வருகைப் பருவம்

அய்ய வருக! பாரதநாட்
டரசே வருக! உலகிற்கோர்
அணியே வருக! அடியேனை
ஆண்டாய் வருக! அவனியெலாம்
உய்ய வருக! உயிர்க்கெல்லாம்
உயிரே வருக! உத்தமரின்
உணர்வே வருக! ஓராடை
உடுத்தாய் வருக! உண்மையுரை
செய்ய வருக! பூமிக்கோர்
திலக வருக! தெருளளிக்கும்
செல்வ வருக! செற்றிறம்பாச்
செம்மல் வருக! சீர்மருவு
கய்ய வருக! கருணைபுரி
காந்தி வருக! வருகவே!
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா! வருக! வருகவே! க

காந்தி வருக! கருணைபுரி
கடலே வருக! ஏழையேன்
கண்ணே வருக! இந்தியரின்
கருத்தே வருக' என்னன்பை

மாந்த வருக! மக்களுய
வந்தாய் வருக! பழஅறத்தை
வகுத்தாய் வருக! வடிவுடைய
வள்ளால் வருக! மண்முழுதும்
சாந்தி நிலவ உரையருளும்
சான்றோய் வருக! தண்ணளிசேர்
தலைவ வருக! தார்மன்னர்
தருமச் செங்கோல் தாங்கஅருள்
காந்தி வருக! அருள்பழுத்த
கனியே வருக! வருகவே!
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா! வருக! வருகவே! உ

எந்தாய் வருக! எழிலாரும்
எம்மான் வருக! எனையாளும்
இறைவா வருக! ஏழையேன்
இதயங் கொளநின் இணையடியைத்
தந்தாய் வருக! சன்மார்க்கஞ்
சார்ந்து தமியேன் கடைத்தேறத்
தண்மை ஒழுக அருளுபெருந்
தகையே வருக! சாந்தத்தின்
மைந்தா வருக! எந்தனிரு
கண்ணே வருக! கண்ணினுரு
மணியே வருக! ஆருயிரே
வருக! சிறியேன் பாட்டுக்கு

கந்தே வருக! கருதரிய
காந்தி! வருக! வருகவே!
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக! வருகவே! ௩

பெரும வருக! அறமலியப்
பிறந்தோய் வருக! பீடுடைய
பெம்மான் வருக! புவிக்குள்ளே
பெரியோய் வருக! பிறர்பொருட்டா
அருமை உறுநின் உடல்பொருளும்
ஆவி மக்கள் மனையாதி
அனைத்தும் விடுத்தோர் கதராடை
அணிந்தே ஏழ்மை நிலைகொண்ட
தரும உருவே வருக! வெலாஞ்
சாற்றல் எளிய அவ்வண்ணஞ்
சாதித் திடுதல் அரியவெனுஞ்
சான்ற புலவன் உரைமறுத்துக்
கருமம் ஆற்றிப் பின்புசொலும்
காந்தி! வருக! வருகவே!
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக! வருகவே! ௪

ஞாலம் மதிக்கும் பெருங்கொள்கை
காட்ட வருக! கதர்ப்பெருமை
நவில வருக! தீண்டாமை
நலிய வருக! ராட்டேந்தச்

சீல வருக! எம்பாவம்
தேய வருக! சிறுதகையேன்
திருந்த வருக! தீமையெலாம்
திறம்ப வருக! திருக்கருணை
சால வருக! தனியாடை
தரிக்க வருக! சாந்தநிலை
ததும்ப வருக! தருக்கனைத்தும்
சாக வருக! தாரணியிக்
காலம் உய்யப் பிறந்தருளுங்
காந்தி! வருக! வருகவே!
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக! வருகவே! ௫

வள்ளால் வருக! பாரதத்தாய்
மைந்தா வருக! மண்முழுதும்
மதிக்கவாழும் மாண்புடைய
மணியே வருக! மறுமையெனும்
தள்ளாப் பொருளொன் றுளதென்னுந்
தன்மை யறியா தறங்கொன்று
தாய்நாடாளுந் தனியுரிமை
தகைசால் மக்கட் கில்லையென
எள்ளா எவர்க்கும் அதிபரெனும்
இறுமாப் புற்று நனியுழல் வோர்க்
கினிய உரைதந் தீடேற்ற
என்னும் பெரியோய் வருகவே!

கள்ளார் மகர்க்கும் அறிவளிக்கும்
காந்தி! வருக! வருகவே!
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக! வருகவே! சா

சாதி சமயச் சண்டையெனுஞ்
சுழியிற் பட்டுத் தடுமாறிச்
சத்தி யத்தை அறமறந்து
தருக்கிக் குலத்தாற் பெரியோனன்
பேதை சிறியன் நீபிறப்பில்
என்னப் பிதற்றிப் பெரியாரைப்
பிழைப்ப தன்றிப் பொருளானும்
தொழிலாற் பிறவாற் பெருமைசொலும்
ஏதி லார்க்கும் இனியமொழி
இயம்பி அவர்கள் கொள்கையெலாம்
இருள்போல் ஏகப் பேரொளியை
எங்கும் பரப்பும் இணையில்லாய்!
காதல் கொண்டுன் அடிசேர்ந்தேன்
காந்தி! வருக! வருகவே!
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக வருகவே! எ

சாந்தம் என்னும் பெருங்கடலில்
சத்யம் என்னுந் தூண்நாட்டித்
தகைசால் பொறையை மத்தாக்கித்
தருமம் என்னும் நாண்போக்கி

வாய்ந்த அவற்றின் இருமருங்கும்
மல்லல் மிக்க இந்துமுசல்
மான்கள் என்னும் இருவேறு
மதத்து ளாரும் வலிந்திழுக்க
ஈந்த பயனாய் எழுந்தபெரும்
இன்பம் என்னும் ஆரமுதை
இறைமால் ஒப்பாய்! இவ்வுலகில்
எல்லா உயிரும் உயவருளிக்
காந்தம் எனவே அன்பிழுக்கும்
காந்தி! வருக! வருகவே!
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக! வருகவே! அ

செந்நெல் விளையுந் திருநாடு
செழிக்க உலகம் தீநெறியில்
செல்லா துய்யச் சிறுமையெலாம்
சென்று தேய அறந்தழைக்க
மன்னர் செங்கோல் வழுவாது
மாண்பிற் செல்ல மதுவருந்தும்
மடமை ஒழிய மக்கள்தமை
மதியா தொதுக்கும் மருளகல
இன்னல் நல்குஞ் சாதிமத
இறயாப் பேக என்னனையார்
இதயங் களிக்க விளையாட
இம்மா நிலத்திற் பிறந்தருளுங்

கன்னல் அனைய திருமொழிசேர்
காந்தி! வருக! வருகவே!
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக! வருகவே! ௯

வேறு

அறமலி திருநா டவனியில் உயர
அணிபெற வருக! வருகவே!
அடியவர் உளமகிழ் தாமொழி பகரும்
ஆண்டகை வருக! வருகவே!
மறமறப் பிறந்த வடித்துத் தெளித்த
மாண்குண வருக! வருகவே!
மன்னறம் நிலைபெற வகுத்தினி தருளும்
வள்ளால்! வருக! வருகவே!
உறுதியின் ஒப்புயர் வொருவரும் இல்லா
உரவோய்! வருக! வருகவே!
உண்மை பொறுமை வீரமஞ் சாமை
உறுதவ! வருக! வருகவே!
திறமையின் அளிமிகு செயல்செயும் அந்தணச்
சீல வருக! வருகவே!
திண்மைகொள் அன்பர் மனத்துறை காந்திச்
செல்வ! வருக! வருகவே! ௧௦

ஆகச் செய்யுள் ௯௦.

# 7. அம்புலிப் பருவம்

விண்ணுறையும் மாமதியே! மேதினிக்குக்
கைம்மாறு வேண்டாமல் வெண்மையான
மென்மையுறு பாலனைய நிலவெனும்நின்
மெய்யொளியை விரும்பிஇனி ஈயுமேலாம்
தண்ணளிமிக் குடையாய்நீ எனஉலகம்
சாற்றிடுமால்! சத்தியமே சாருவாயும்
சாந்தநிறை திருமனமுஞ் சகத்திலுள
தண்ணளிகள் எல்லாமோ ருருவெடுத்து
மண்ணுலகம் இனிவாழ மழையெனவே
அருளொழுக மாணுடை ஒன்றுடுத்து
வருகாந்தி அடிகளெனும் வள்ளலனி
யோடுன்றன் வளரளியை ஆயவேண்டும்
அண்ணல் நிகர் இல்லாத அருமைமிகு
காந்தியினோ டம்புலீஇ ஆடவாவே!
அன்பதனால் உலகாளும் ஐயனையர்
காந்தியினோ டம்புலீஇ ஆடவாவே! க

மக்களுயர் வழிபற்றிக் கொலையாதி
பாதகத்துள் மன்னுமல் வாழவைத்தல்
மரபாகும் பெரியோர்க்கவ் வழிபார்க்கின்
காந்தியெனும் மாதவனின் மாண்புநோக்கின்

ஒக்குமுழு வதுமன்னுன் ஒளிமுன்னர்
சொலேகளவு கட்காம மோடுபொய்யும்
ஓடிடுமீ துலகறிந்த தொன்றேகாண்!
உம்பருறை உன்தோற்றத் துறுவதந்தோ
அக்கமொரு மூன்றுடையான் காய்ந்தவனென்
றவனிசொலும் அருவமதாய் நின்றமரான்
அணிவிழவே! ஆதலினல் அவனுடான்
உடனென்றே ஐயம்நீ கொள்ளவேண்டாம்
அக்கணமே உனேப்புனிதம் ஆக்கியுடன்
ஆடிடுவான் அம்புலீஇ ஆடவாவே!
அன்பதனல் உலகாளும் ஐயனுயர்
காந்தியினே டம்புலீஇ ஆடவாவே! உ

நாம்விண்ணில் உறைகின்றேம் அவன்மண்ணில்
உறைகின்றன் நாமவனே டாடநேரல்
நம்பெருமைக் கழகன்றென் றெண்ணுவையோ
மாமதியே! நன்றுநின தெண்ணநீதான்
போம்நாட்டில் யாண்டில்லேப் புண்ணியனின்
புகழுண்மை புவியறியப் புகலுவாயே!
புந்திவிரி வில்லாமல் இல்லன்றிப்
பிறிதறியார் போன்றவன்நீ அல்லேயேள!
தாமதிகம் உலகிலெனத் தருக்கோடு
வாழ்ந்திடுவார் தாங்களுமே பெரியரென்னச்
சாற்றியதன் றியாரையவர் யாண்டுறைந்தா
லென்னகுறை? தக்கவர்பார்த் தடைதலேமேல்

ஆமென்பர் அறிவுள்ளார் ஆதலினால்
தாழாமல் அம்புலீஇ ஆடவாவே!
அன்பதனால் உலகாளும் ஐயனுயர்
காந்தியினோ டம்புலீஇ ஆடவாவே! ௩

திங்களேஎ! உனையாவந் தீண்டிவருத்
திடுதுயரைத் தீர்த்துய்ய எண்ணமுண்டேல்
சென்றுலகம் எங்குந்தி ரிந்தாலும்
ஆகாது செப்பிடுவேன் அதற்குபாயம்!
எங்களுயர் நாயகனிவ் விரும்புவியில்
ஈடில்லான்! எல்லாம்பொ றுக்குமெம்மான்!
இடாகலச் சபர்மதியில் எழுந்தருளி
இனிதிருக்கும் இணையில்சீர் கொண்டஎந்தை!
பொங்குதிருக் கமலமலர் போதாவிப்
பழிதீரும் புயங்கனவன் அன்பனன்னான்
புயத்தினொடு மடிதனினும் ஏறிவிளை
யாடுகதை புவியறியும் ஆதலாலே
அங்கண்வக் தின்புபெற அண்ணலெம
காந்தியினோ டம்புலீஇ ஆடவாவே!
அன்பதனால் உலகாளும் ஐயனுயர்
காந்தியினோ டம்புலீஇ ஆடவாவே! ௪

கலைகள் ஈரெட்டே தாமுடையாய்! [னில்
கேயனவன் செய்தவொற்றைக் கலையொடெண்
ணான பல்கலைகள் தாமுடையான்!
நினக்குமறு உண்டன்னான் மறுவிலாதான்!

வாருடைய மழைமறைத்தால் ஒளிகுறைவாய்!
அவனொளியை வலிகொண்டு மறைக்கவல்லார்
மண்ணகத்தும் வானகத்தும் யாண்டுமிலை!
மாமதியே! நீநாளும் வரிசையாகத்
தேகந்தான் தேய்ந்தழிவாய்! ஒளிகுறைவாய்!
பின்மிகுவாய்! திண்மைநிறை எங்களையன்
சீரான நிறைவுள்ளான்! நின்தோற்றம்
இரவிற்றான் சீலனொளி இறையுநீங்கா
தாகவுள தாதலினல் அப்பெரிய
அண்ணலினோ டம்புலீஇ ஆடவாவே!
அன்பதனல் உலகாளும் ஐயனுடர்
காந்தியினோ டம்புலீஇ ஆடவாவே ௫

சத்தியத்தைத் தருமத்தைச் சாந்தத்தைத்
தைரியத்தைத் தனிப்பொறையைச் கருணைதன்
சத்யாக்கி ரகமெனுந் தாணிபுகழ் [னைச்
இயக்கத்தின் தத்துவத்தைச் சாற்றியன்பாய்க்
கத்தருடை உதவிடுவான்! கட்டிமகிழ்
வெய்திடலாம்! கணக்கிட்டு ரைக்கவொண்ணுக்
கண்ணியமி குந்ததது! கைராட்டு
நூல்கொண்டு கைத்தறியில் நெய்ததாமால்!
சுத்தியுனை கனியேற்று நாடறிந்த
நின்களங்கம் நலிந்தோட ஞானமெய்த
நாட்டமது வைத்திடுவான் எங்காந்தி'
அன்னவனை நாடிவா நல்லொழுக்கம்

அத்தனையும் எய்திடலாம்! ஆதலினால்
அன்னானோ டம்புலீஇ ஆடவாவே!
அன்பதனால் உலகாளும் ஐயனுயர்
காந்தியினோ டம்புலீஇ ஆடவாவே!

ஒழுக்கமது விழுப்பத்தைத் தருதலினால்
அவ்வொழுக்கம் உயிரினும் உயர்ந்ததாக
ஓம்புதலை மிக்கென உரைத்ததிரு
வள்ளுவனார் உண்மையுரை கொண்டுசெய்கை
இழைத்தவருள் இணையில்லை ஏனோரென்
றெடுத்தேத்தும் ஏதமிலா எந்தை யம்மான்!
இன்னாதை எண்ணாதான்! மறுமாதர்
இன்முகத்தை எந்நாளும் நோக்கிலாத
விழுப்பமுளான் எங்காந்தி! மேனாள்நீ
குருமனைவியை விழைந்தல்லல் உற்றனையென்ப!
மேதகவோன் முனிவானோ எனவஞ்சி
விளையாடல் ஒழியாமல் மேவுவாயே!
அழுத்தமுற மதிபுகல்வான்! முனிவறியான்!
ஆதலினால் அம்புலீஇ ஆடவாவே!
அன்பதனால் உலகாளும் ஐயனுயர்
காந்தியினோ டம்புலீஇ ஆடவாவே!

மறைபுகலும் நெறியதனை வடிகட்டி
இனிதெடுத்து மண்ணுலக மாந்தருய்ய
மாண்புமிகும் அறநெறியை மாசில்லா
ஒழுக்கத்தை மன்னாதை உடலைநோக்கிப்

பறையரென ஒருசாரார் பரிதபிக்க
ஒதுக்குகின்ற பாதகம்மாள் வழியைஇப்
பாராளும் உரிமைஇந் நாட்டார்க்கே
உளதென்னும் பண்பைங்கட் குடிவிலக்கை
அறைகூவு மாண்புசெற் அருட்கடலைக்
குணக்குன்றை அடியாரின் இருதயத்தின்
அணிபெறவீற் றிருந்தருளும் அண்ணலைஇந்
நிலையில்லா அரசியலின் வாதியென்னல்
அறியாமை! அறியாமை! ஆதலினால்
அஞ்சாமல் அம்புலீஇ ஆடவாவே!
அன்பதனால் உலகாளும் ஐயனுயர்
காந்தியினோ டம்புலீஇ ஆடவாவே! ௮

இழையாயி ரம்பெற்ற எழிலாடை
பண்டைநாள் ஈன்றுபெரு மிதமடைந்த
இணையில்சீர் சேர்நந்நா டின்றாடை
ஏதுமிலா திரங்கிப்பல் இன்னலுற்றுத்
தழையாடை யாக்கொண்டு தருமமெற்
அறியாது தருசூழுங் கானகத்தில்
தாய்த்திரியும் விலங்குகள்போற் சஞ்சரித்தே
இந்நாளில் தருக்காதி கொண்டுசீருங்
குழையாத பிறநாட்டை உடல்மறைக்க
எதிர்பார்த்தல் குற்றமத னுயர்ந்த
கோதில்லாக் கதராடை குவலயத்தே
பெருக்குமெனக் கூறுமெழிற் கூர்ஜரம்வாழ்

அழையாமல் அவனிக்கே அருள்புரியும்
அண்ணலினோ டம்புலீஇ ஆடவாவே!
அன்பதனால் உலகாளும் ஐயனுயர்
காந்தியினோ டம்புலீஇ ஆடவாவே! ௯

இழுக்காக அடிமையெனும் படுகுழியில்
வீழ்த்துவது எழிலாடை கொண்டுதேச
இரும்பொருளைப் பிறநாட்டுக் கனுப்புதலே
ஆதலினால் இஃதோர்ந்து நமதுமக்கள்
பிழைக்கவழி கதராடை பேணுதலே
ஆகுமெனப் பிறங்கிடவே மொழிந்தபின்னும்
பெருமைமிகு நாட்டிற்காப் பிறபலசெய்
யாவிடினும் பீடுபெறு கதருடுத்தும்
ஒழுக்கமதைக் கொள்ளாதார் மனந்திருந்த
வேண்டுமென ஒப்பற்ற பொருளைநாடி
உறுதவமே செய்கின்ற ஒண்புகழான்!
தண்ணளியான்! ஒன்னலரென் றெவருமில்லான்!
அழுக்காற வாவெகுளி இன்னாச்சொல்
இல்லானோ டம்புலீஇ ஆடவாவே!
அன்பதனால் உலகாளும் ஐயனுயர்
காந்தியினோ டம்புலீஇ ஆடவாவே! ௧௦

ஆகச் செய்யுள் ௭௦.

# 8. சிற்றிற் பருவம்

குற்றம் புரிந்தாய் நீயென்னக்
கொண்டு நீகித் தலத்திட்டுக்
கூறுவாக்கு மூலமெனக்
கோணு துள்ளம் பெருங்கதையாய்ச்
செற்றம் இன்றி நீமொழிந்த
திருவா சகத்தின் சுருக்கத்திண்
செய்தி தன்னைச் சிறுதகையேன்
செப்ப விழைந்தேன் இத்தமிழில்;
"இற்றை அரசாங் கத்துடனே
இனிய அன்பு கொண்டிருந்த
என்றன் உள்ளம் மாறியதற்
கேற்ற அதனை எல்லோருந்
தெற்றென் றறிய உரைப்ப"னெனுந்
தீரா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! ௧

"தென்ணுப் பிரிக்கா சென்றங்கு
சிறுமை உற்ற இந்தியரைத்
தேற்ற எண்ணிச் செயல்புரிந்து
செகத்திற் பிறந்த எவருமடை

மன்னு உரிமை இந்தியனாய்
வந்த அரிய காரணத்தால்
மறுக்கப் பட்டேன் அதுகொண்டு
மயங்கா தந்த அரசினுக்கே
இன்னாப் பழுதாம் இந்தியரை
இவ்வா றிகழ்தல் எனஇதயந்
தெண்ணி அவரோ டொத்துழைத்தேன்''
என்ன மொழிந்த எம்மானே!
தென்னார் காந்தி! புத்திரிபாய்
சிறுவா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! ௨

''போயர் அமர்க்குப் படைதிரட்டிப்
பிறங்கக் கொடுத்தேன்! ஜுலுவென்போர்
புரட்சிக் குதவி நனிபுரிந்தேன்!
புகழ்ந்தார் அந்த ஆப்பிரிக்கா
ஆய தீவை அரசாள்வோர்
அறிக்கை அதனால் அந்நாளில்
அரசப் பிரதி நிதியென்பார்
அளித்தார் பொன்னின் பதக்கமதை
மேய ஜெர்மன் பெரும்போர்க்கு
விரும்பிப் படையைச் சேர்த்தளித்தேன்
விழைந்திவ் வாறு உதவிசெய்தால்
மேன்மை பெறலாம் என்றென்று''

தேயம் மதிக்க உரைசெய்த
செல்வா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! ௫

"நன்று கிடைக்கும் என்றெண்ணி
நாணிவ் வாறு உதவிசெய
நாவை யடைக்கும் பெரும்பூட்டாய்
நவிலும் ரௌலட் சட்டமது
மன்றம் ஏறி வந்திருந்த
மறத்தைப் போக்க ஓரியக்கம்
வகுக்க வேண்டி யானதுபின்
மாபாஞ் சாலந் தனிலந்தோ!
கொன்று மலையாக் குவித்தபெருங்
கொடிய கொலையுந் தோன்றியதால்!
குருவைக் காக்கத் துருக்கர்க்குக்
கொடுத்த வாக்கைக் காக்காமல்
இன்று விட்டார் மந்த்ரி"யெனுந்
தீரா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! ௬

"இன்ன செய்கை கண்டபினும்
எதிர்க்க உள்ளத் தெண்ணாமல்
எந்தன் உயிரின் துணைவர் பலர்
இயம்பும் மொழியுங் கொள்ளாமல்

பின்னும் ஒத்தே உழைக்கவெனப்
பேசித் தந்த திருத்தத்தைப்
பெரிய தேச சபைமுன்னர்ப்
பெற்றுக் கொளமன் ருடினனப்.
பன்னற் கரிய பாஞ்சாலப்
பழிக்கும் முஸ்லீம் குருவுக்கும்
பரிகா ரங்கள் கிடைக்குமெனும்
பண்பைக் கொண்டே" எனமொழிந்த
சென்னி உலகுக் கெனத்திகழுந்
திருவே! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! ௫

"நீள்பாஞ் சாலப் படுகொலைக்கு
நீதி ஏதுங் கண்டில்லேன்!
நீக்கம் பெறவும் பெற்றிலாய்
நிற்கின் ருன் ஞர்சிலவர்!
மூளுங் காதல் கொடுசிலர்க்கு
முன்னிப் பரிசும் ஈகின்ருர்!
மொழிபொய்த் ததற்கும் ஒன்றுமிலே!
முடித்துக் கொடுத்த சீர்திருத்தம்
வாளா அன்றி மற்றில்லை!
வறுமைப் பிணியால் வாட்டமுறும்
மக்கள் உய்ய வழியில்லை!
மனத்துட் கொண்டேன் இவை"யெனும்புத்

தேளிர் பரவும் திருநாட்டுச்
செல்வா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத் தமர் காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! ௬

"இந்தியர் எய்தும் துயர்தன்னை
எடுத்துப் புகல்வோர் எல்லோரும்
ஏதஞ் சாரும் சிறையெய்தி
இன்னல் ஏற்றங் குறைவதையும்
நொந்து துன்பம் அடைவதையும்
நோக்கி அவரோ டொத்துழையா
நுவலற் கரிய கருணைசெறி
நோன்மை மக்கள் எளிதாகச்
சிந்தை கொள்ளத் தந்தனரல்
சீற்றம் இறைபால் என்றனக்குச்
சிறிதும் இல்லை" எனமொழிந்த
செம்மை மிக்க சீர்நம்பி!
செந்தா மரையாள் திகழ்நாட்டுச்
செல்வா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! ௭

"ஆன இந்த அரசாட்சி
அடியேன் கொள்ளேன்! அதில்வெறுப்பை
அடைதல் மேலாம் குணமென்ன
அணிந்தேன்! ஆண்மை தனையழிக்கும்

ஈனங் கொண்ட ஆட்சியதை
ஏற்றல் பாபம் எனவுணர்ந்தேன்!
இழிக்கும் தீதோ டுறவாடேன்!
எழிலார் நன்மை பற்றுங்கால்
நானே அடைவேன் எதுவரினும்
நன்கு பொறுப்பேன் துயரையெலாம்
நலிய மாட்டேன் எற்கிவையே
நல்ல கடமை" எனநவின்ற
தேனே ஒழுகு திண்மைசெறி
தீரா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே அ

"கடமை யாக நான்கொண்ட
காரி யத்தைக் குற்றமெனக்
கணிக்குஞ் சட்டம் தனையறிந்தே
கருதுந் தண்டந் தனையேற்க
அடைந்தேன் ஈண்டச் சட்டமுறை
அதுவே ஒழுங்கென் றகங்கொண்டால்
ஆற்றத் தண்டித் திடுக! வன்றி
அடியேன் செயலை இனிதோர்ந்து
கொடுமை சட்டம் என்னுடைய
கொள்கை சரியென் றறிவீரேல்
கோது பொருந்தும் நும்பதவி
கொள்ளா தின்றே விடுக" வெனத்

திடமாய் நீதி பதிமுனுரை
செல்வா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே! ௬௯

நியாயம் வகுக்கும் அதிபதியந்
நாள்நிற் பார்த்தே "என்முன்னர்
நின்னை அனைய தகுதியுளார்
நின்ற தில்லை! இதுகாறும்
அயாவுனைப்போல் இனிமேலும்
அடையப் போவ தில்லையுனை
அறிவேன் நன்றாய் நீயுரைக்கும்
அஹிம்சை ஆதி அறத்தை"யென
வயாவோ டுரைத்தும் பற்பல்புகழ்
வழுத்தப் பெற்றாய் என்றாலுன்
மாட்சி உரைக்க வல்லேனிம்
மதியில் ஏழைச் சிறியேனே?
தியாக உருவே! அன்புசெறி
தீரா! சிற்றில் சிதையேலே!
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா! சிற்றில் சிதையேலே!

ஆகச் செய்யுள் ௮0

# 9 சிறுபறைப் பருவம்

தென்னாப்பி ரிக்காவில் நின்செயற்குத்
துணைநின்ற சீலமிகு கின்ற எங்கள்
திருமலிய அறம்வளர்த்த பலபெரியோர்
அவதரித்த சீர்த்தியுடைத் தமிழ்பி றந்த
தென்னாட்டு நாகப்பன் வள்ளியம்மை
சீர்நாரா யணனிவர்கள் செய்கை தன்னைச்
செகமறியப் பலப்பலகால் செப்பிமகிழ்
உத்தமனே! சிறந்ததமிழ் மொழியில் அந்நாள்
எந்நாடும் எம்மதமும் எம்மொழியும்
எம்மனித ரும்மென்றும் இதயம் ஏந்த
இனிதறத்தை வகுத்தருளும் எந்திருவள்
ளுவர்குறன்கட் கிலக்காகி ஈண்டு வந்த
செந்நாவாய்! உண்மையினில் ஜெகத்குருவே!
சீர்க்காந்தி! சிறுபறை முழக்கி யருளே!
செல்வங்க ரஞ்சந்த்ரர் புத்திரியாய்
திருமகனே! சிறுபறை முழக்கி யருளே! க

சீர்மலியுந் தமிழ்நாட்டில் திருமலியுந்
தனவணிகர் தெருமலிய அறம்வ ளர்க்கும்
சீர்த்திமலி வளப்பாண்டி மண்டலத்தில்
திகழ்நாரைக் குடியென்னுஞ் சீர்ப்ப திதனில்

நார்மலியப் பொறைமலிய நல்லுண்மை
தாமலிய நண்ணுமறம் ஆதி யாவும்
நனிமலிய உரைபகர்நாள் "நாட்டன்பு
சிறிதின்றி நண்ணுதார் நாடு நன்றாய்
ஏர்மலியப் பொருளீந்தே இழுக்குடைய
மகவுணவை ஈந்துமகார் வளர்த்தல் தன்னில்
இறந்துபட விடுதல்மேல்" என அன்பால்
உரைவிரித்த எழில்மலியுங் காந்தி என்னுந்
தேர்மலியுந் திருவீதித் தென்னாட்டார்
திருவுளமே! சிறுபறை முழக்கி யருளே!
செல்வக்க ரஞ்சந்த்ரர் புத்திரிபாய்
திருமகனே! சிறுபறை முழக்கி யருளே! ௨

பொன்புரையுந் திருமேனி பொன்றப்புன்
சிறைபுக்க போதுமொரு துயரும் இன்றிப்
பொருமியழு துளம்நொந்த புண்ணியவித்
திருநாட்டுப் புதல்வர்தமை இனிது நோக்கி
அன்புரையாற் கதர்கதரொன் றறைந்தேகி
அணிபெறவீற் றிருந்தருளும் அறக்கொழுந்தே
"அடியேனின் இப்பிறப்பின் பயன்கதரைப்
பெருக்குதலே'! ஆகுமெனும் அண்ணல் ஏறே!
"மன்பெரிய பயனடையும் நூல்பயிலல்
அதனினுநான் மாராட்டின் நூலை நூற்றல்
மாண்பெனவே மதிக்கின்றேன்" என்றுரைக்கும்
மாமணியே! மாநாடு வாழ வந்தோய்!

தென்பொதியுந் திருநாட்டிற் றிகழ்காந்திச்
செம்மலேள! சிறுபறை முழக்கி யருளே!
செல்வக்க ரஞ்சந்த்ரர் புத்திரிபாய்
திருமகனே! சிறுபறை முழக்கி யருளே! ௫

ஊனொடுக்கி ஒளிபெருக்கும் உத்தமனென்
றுலகுபுகழ் ஒருவனுளன் உலகில் ஆனால்
உனையன்றி வேறில்லை! உன்னுணவின்
அருமையினை ஒண்புகழாம் ஒளியை ஓர்ந்து
நானடுக்கி நவிலுதற்கு வல்லவனோ?
நாப்பலபெற் றாலுமவை நண்ணல் ஆமோ?
நாகரிகம் என்றிந்நாள் நனியாடை
பலசுமந்து நண்ணுமவர் நாண அன்பாய்
வானுடுக்கும் புகழ்கொண்ட மாண்புசெறி
ஒருசிறிய கதருடுத்தும் வள்ளலே! இம்
மண்மதிக்குந் தனிப்பெரிய மகத்சப்தம்
இனிதேற்ற வண்மைமிகு காந்தி மன்னா!
தேனடுக்கும் மலர்ப்பொழில்சூழ் திருப்பழன
நாட்டவனே! சிறுபறை முழக்கி பருளே!
செல்வக்கா ரஞ்சந்த்ரர் புத்திரிபாய்
திருமகனே! சிறுபறை முழக்கி யருளே! ௬

ஐம்பெரிய பாதகத்துள் மதுவருந்தல்
ஒன்றெனவே அறஞ்சொன்ன புலவன் அந்நாள்
அறைந்தவதை மனங்கொண்டே அவ்வினையால்
மக்கள்பலர் அருந்துசெயல் இன்றி அந்தோ!

தம்பமெனத் தெருக்கிடக்கச் சாற்றரிய
இவ்விழிவாம் தன்மையால் தார மோடு
தனையரெலாம் தரித்திரத்தை நனியேற்றுத்
தளர்ந்துபல தாங்கொண்ணுத் துன்பம் எய்தி
வெம்பவிவை உள்ளமதில் விரைந்தெணிஇந்
நாட்டறிவு மேவியிட வேண்டு மானல்
விரும்பவொண்ணு இக்கள்ளை விட்டுவிட
வேண்டுமென விதியினெடு சேர்த்த மைத்த
செம்பதுமத் திருமகிழச் செயல்புரிகாந்
திச்செம்மல்! சிறுபறை முழக்கி யருளே!
செல்வக்க ரஞ்சந்த்ரர் புத்திரிபாய்
திருமகனே! சிறுபறை முழக்கி யருளே! ௭

“தக்கதகா தனவோர்ந்து கருமத்தின்
வழிச்சென்று தாரணியெந் நாளும் வாழத்
தருகடமை தனையாற்றிச் சாற்றரிய
இன்பநிலை சாருதலே தலத்து வந்த
மக்களுயர் கடனதற்கு மாசற்ற
அறிவுதரு மாண்புடைக் கல்வி வேண்டும்
வாழுமுறை பயிற்றுத சிலமொரு
சிறிதுமிலா வல்லடிமை கொளப்ப யிற்றும்
மிக்கவர்வே றில்லையென விளம்புதகை
மேவாமேல் வீடடைய அறிவி யாத
வெறுங்கல்வி பயனில்லை! வேண்டாமப்
பள்ளிதனை விட்டின்னே விலகும்” என்ற

செக்காரும் பொன்மேனிச் செகம்புகழ்காத்
திப்பெரிய! சிறுபறை முழக்கி யருளே!
செல்வக்க ரஞ்சசந்த்ரர் புத்திரிபாய்
திருமகனே! சிறுபறை முழக்கி யருளே! ௯

வேறு.

சட்டச பைகளிற் சார்வதிற் பயனிலை!
சார்ந்தவண் செய்வதெவன்?
சான்றோர் அங்கிலை! சனநலம் எனச்சில
சாதித் திடினுமவர்
இட்டப் படிசெய எல்லா உரிமையும்
ஏற்றிருக் கும்பொழுது
என்செய வல்லீர்! அங்குசென் றந்தோ!
ஏனிவ் இடர்ப்பாடு!
திட்டம் உடன்பிற செயல்புரி வதில்நாள்
செலவிட் டால்தேசம்
செழிக்கும் பயன்தரு செயல்செயும்! வீணே
சென்றுயர் குன்றதனில்
மூட்டிய குரியென மொய்ம்பழி யீரென
முழக்குக சிறுபறையே!
மோகன தாஸ்கரம் சந்திர காந்தி!
முழக்குக சிறுபறையே! ௧

பாரிற் பாதகத் தொழிலெது என்னின்
பள்ளியிற் பயில்சிறிய
பச்சைக் குழந்தையும் பகரும் பொருளைப்
பகற்கொளை அடிப்பதுபோல்

நேரிற் பறித்துண் நியாய வாதியாம்
நெறியில் தொழிலென்றே
நின்றவ் வினையால் பாதகப் பொய்க்கு
நெஞ்சத் தச்சமிலா
நாரில் மக்கள் நலம்பெற் றுய்ய
நாடு செழித்தோங்க
நல்லன மலிய அல்லன நலிய
நல்லறி வெங்குமிக
மூரிப் பெரிய முளரிக் கையால்
முழக்குக சிறுபறையே!
மோகன தாஸ்கரம் சந்திரகாந்தி!
முழக்குக சிறுபறையே!

பண்டிந் நாட்டிற் பஞ்சா யத்தெனப்
பண்புள மக்கள் தமைப்
பார்த்தூர் தோறும் அமைத்தனர் அவரும்
பாங்காய் வழக்குகளை
விண்டற நெறியே விளக்கினர் அன்னார்
மிகுநல நாவன்ன
மேதகு நடுநிலை தவறா வாய்மையர்!
மேவுமிந் நாள்நிலையை
மண்டலம் அறியும்! வாயாற் கூறினும்
மாசே மாசெனவே
மதிமிக உடைய வள்ளால்! கருணை
மாபெரு வாரிதியை

மொண்டே பொழியும் மொய்ம்புடை மழையே!
முழக்குக சிறுபறையே!
மோகன தாஸ்கரம் சந்திர காந்தி!
முழக்குக சிறுபறையே! ௯

கதியடை பவர்போல் களிப்பொடு வீணே
கண்ணியம் எனக்கொடுக்கும்
கருதின பொருளெதும் இல்லா எழுத்தின்
கணமாம் பட்டமதை
நிதியென ஏற்பதில் பயனெதும் இல்லை!
நிந்தனை ஒடுநம்மை
நினைப்பரும் இடரில் அழுத்திடும் அவரொடு
நேர்ந்துற வாடிடுதல்
மதியல! மான வாழ்க்கையை எண்ணி
வாழுதல் மேலன்றி
மானந் துறந்தும் பட்டந் தாங்குதல்
மாபல! எனுமுயர்ந்த
மூதுபுல வோர்கள் மொழிகளை ஓதி
முழக்குக சிறுபறையே!
மோகன தாஸ்கரம் சந்திர காந்தி!
முழக்குக சிறுபறையே! ௧௦

ஆகச் செய்யுள் ௧௦.

# 10. சிறுதேர்ப் பருவம்

இந்துமுசல் மான்வேற்று மையென்னுங்
கொடியபிணி இறந்துபட் டோட இந்த
இணையில்சீர்த் திருநாட்டில் பிறநாட்டின்
ஆடையெலாம் எரிக்கிரை யதாகி வீழப்
புந்தியிலாக் கள்ளருந்தும் புன்செய்கை
அகன்றோடப் பிள்ளைமை அடிமை ஆக்கும்
பெரும் பள்ளிக் கூடங்கள் பெருமையிழந்
தொழியநெறி பேசா வழக்கு மன்றம்
முந்தியழி வெய்தியிட மொய்சட்ட
சபைவைத்த மோகம் பறந்து மாள
மொய்ம்போடு பொருளுமிலா வீண்பட்ட
ஆசைகள் மோதுபெற் றோடி ஒழியச்
சிந்தைநிறை அறியாமை சிதறுண்டு
சென்றுளச் சிறுதேர் உருட்டி அருளே!
செகத்திலுயர் தனிக்காந்தி! திகிரிபுனை
செங்கையால் சிறுதோர் உருட்டி அருளே க

இந்துமுக மதியரெனும் இருவேறு
மதத்திலுறை யாவரும் ஒன்று பட்டே
எதில்லார் தந்தீதை மோதிஉயர்
வெய்தாமல் இவர்க்குளே மாறு பட்டால்

வந்தபெருந் துன்பங்கள் மாளாவே
　　றும் உண்மை மனத்துளே கொண்டே நாளும்
மாருமல் இவ்வொற்று மைநாடி
　　மாற்றமுரை வள்ளலே! மாண்கு ணத்தோய்!
எந்தஉயி ரும்நோவ இறையும்பொ
　　றுக்காத இணையிலாக் கருணை மூர்த்தி!
எதுவரினும் அஞ்சாத இருமலையே!
　　பொறுமையாம் எழிலுடைத் தீஞ்செ ழுந்தேன்
சிந்துதிரு வாய்ச்செம்மல்! செயல்வல்ல
　　சீர்க்காந்தி! சிறுதேர் உருட்டி அருளே!
செகத்திலுயர் தனிக்காந்தி! திகிரிபுனை
　　செங்கையால்! சிறுதேர் உருட்டி அருளே! உ

வள்ளுவரும் நீயும்பல் வகையினுல்
　　ஒப்பென்ன வகுக்கலாம் அந்த ஞான
வள்ளலுயர் நெய்தொழிலின் மாண்பறிந்து
　　கைக்கொண்டார் நீயுமத் தொழிலை ஏற்ருய்
எள்ளுகுணம் இல்லாத மனைவியுளார்
　　அவரினும் இம்மியுந் தாழ்வுருத
எழில்மனையை நீயுடையாய் அவர்நாள்
　　மக்களுய ஏதமிலா அறமு ரைத்தார்
தள்ளரிய அவ்வறத்தைத் தாழாமல்
　　இற்றைநாட் தகவறிந் தினிது நீயும்
சாற்றுகின்ருய் ஆதலினுல் தகுதியுடை
　　நீஎங்கள் தண்மையோ டினிமை சாரும்

தெள்ளுதமிழ் வள்ளுவனார் திருவரவென்
றியம்பிடலாம் சிறுதேர் உருட்டி அருளே!
செகத்திலுயர் தனிக்காந்தி! திகிரிபுனை
செங்கையால் சிறுதேர் உருட்டி அருளே! ௫

நின்னுடைய தொழிலெதுவென் றறைந்தபொழு
தண்ணால்! நீ நெய் தல்லிவ சாய மென்றும்
நீஎந்தக் குலமென்ன வினவகுடி
யானவனான் என்றுமே நேர்மை யோடு
சொன்னமொழி கண்டும்வீண் சோம்பேறி
ஆனபலர் தூய்மைசேர் ஞானம் இன்றித்
தொழிலொன்றை ஆற்றித்தொல் பிறப்பதனால்
சாதிசொலும் தூசுநீங் கிடுவ தென்றோ?
என்னபொருள் ஒன்றிபற்றி மற்றொன்றன்
பெயர்குறித்தற் கென்பதை அறிந்தி லேனால்
ஏனிந்த அறியாமை! இதுசாக
எழிலிறைவன் என்றுளங் கொள்ளு வானோ!
சென்னிமிசை நின்சரண கமலமலர்
சேர்த்தினேஎன் சிறுதேர் உருட்டி அருளே!
செகத்திலுயர் தனிக்காந்தி! திகிரிபுனை
செங்கையால் சிறுதேர் உருட்டி அருளே ௬

பொன்மணக்கத் திருவீதி புகழ்மணக்க
வானளவும் பொருவிலா அறங்கள் எல்லாம்
புவிமணக்கச் சைவநெறி பொலிவெய்தி
மிகமணக்கப் புகலரும் சீர்த்தி போதம்

நன்மணக்க வாழ்ந்தநாள் நற்றனவை
சியரெனப்பேர் நவிலவே இனிது நைந்த
நல்லதொரு சமூகத்தின் நவைகளைந்து
பழம்பெருமை நாட்டவே ஞாலம் வந்த
என்மணக்க நெறிமணக்கும் எழிற்காரைத்
தனைவைசிய ஊழியர் சங்கம் அன்போ
டினிதளித்த பத்திரத்தில் நின்பெயரை
உளங்கொண்டால் எய்தலாம் சாந்தம் என்று
தென்மணக்க உரைத்தமொழி திறம்பாத
வாய்மையே! சிறுதேர் உருட்டி அருளே!
செகத்திலுயர் தனிக்காந்தி திகிரிபுனை
செங்கையால் சிறுதேர் உருட்டி அருளே! ௫

வேறு

பான்மதி அரவஞ் சூடிய உமையாள்
பதிபரமேசுரனும்
பச்சை நிறந்திகழ் லெட்சுமி கொழுநன்
பாற்கடல் உறைவோனும்
மான்விழி மங்கை வெண்டாமரையாள்
மகிழ்நனும் அசுரர்களின்
வாழ்வு தொலைத்த வள்ளிமணாள
வள்ளலும் வாணரும்
தேன்சொரி தருவின் இனிதுறை செல்வத்
தேவர்க் கிறையவனும்
தினமும் விரும்பும் திருவாழ் நாட்டில்
செனித்துப் புகழ் படைத்தோய்!

ஊன்வழி அறியா உண்மைக் காந்தி!
உருட்டுக சிறுதேரே!
ஒப்புயர் வில்லா உத்தமர் ஏறே!
உருட்டுக சிறுதேரே! ௬

இங்கில மாக்கர் இன்புற் றுயா
எழில்மட வாரெல்லாம்
ஏந்தக் கற்பை ஏழை அடிமை
எவ்வுல கத்துமின்றித்
தன்னா சோங்கித் தாரணி வாழத்
தருக்கா தியாவும்
சாகத் தீமைகள் சட்டென் றழியத்
தருமமெ லாம்வளரப்
பன்னரு போர்த்தொழில் பறக்கக் கருணைப்
பார்புகழ் அமர்வினையே
படர்ந்திஞ் ஞாலம் பரிசுத் தம்பெறப்
பார்வை புரிந்தருளி
ஒன்னலர் இல்லாய்! ஊனமில் காந்தி!
உருட்டுக சிறுதேரே!
ஒப்புயர் வில்லா உத்தமர் ஏறே!
உருட்டுக சிறுதேரே! ௭

முழுதுல கினுநின் மொய்ம் பறியாதார்
முன்னினி ராரென்றே
மொழிவது சிறிதும் மிகையிலை அறிஞர்
மொழிவழி ஒழுகியுனைத்

தொழுகுவர் உணர்வில் துரிசு பொருந்தும்
தொல்வினை உடையாரே
சூடா துன்னடி வேறாய் வீழ்வர்
தோமறு நல்லோரின்
வழுவறு மனங்கள் மோகிக் குந்நலம்
வாய்த்தமை கொண்டுனக்கு
வழுத்தினர் போலும் மோகனன் என்னும்
மாண்புத் திருநாமம்
ஒழுகுதல் கல்வி ஒருங்குடை காந்தி!
உருட்டுக சிறுதேரே!
ஒப்புயர் வில்லா உத்தமர் ஏறே!
உருட்டுக சிறுதேரே! அ

"அன்னை எனினும் அத்தனே ஆயினும்
அறந்தவிர் ஆறுரைத்தால்
அதனைக் கடந்து உறங்காத் துயர்தல்
அணியுயர் மாந்தரவர்க்
கென்னைப் பெற்றோர் இழிதொழில் ஒன்றை
இயற்றென் றியம்புவரேல்
ஏற்கா தவர்மொழி தன்னைத் தள்ளி
என்கடன் செய்வ"னென
உன்னுயிர் மகற்கு நீசிறை யுறுநாள்
ஓலைத் தூக்குவிட்ட
உண்மை திண்மை உறுதி சாந்தம்
ஓங்கிய புகழ்மிக்க

உன்னைத் தொழுதேன் ஒண்டவ காந்தி!
உருட்டுக சிறுதேரே!
ஒப்புயர் வில்லா உத்தமர் ஏறே!
உருட்டுக சிறுதேரே! கூ

வேறு

ஏராரும் புகழ்க்காந்தி! யாங்களுயச் சிறுதேரை
இனிதே உருட்டி அருள்க!
இணையில்லாக் கஸ்தூரி எழிற்கணவ! சிறுதேரை
இனிதே உருட்டி அருள்க!
சீராருந் தேவதாஸ் திருத்தந்தாய்! சிறுதேரைச்
சீக்கிரம் உருட்டி அருள்க
செல்வமலி பாரதத்தாய் திருமகனே! சிறுதேரைச்
சீக்கிரம் உருட்டி அருள்க
நாராரும் நன்மக்கள் நாயகனே! சிறுதேரை
நன்ருய் உருட்டி அருள்க
நன்மைக்கு நண்புடையாய்! நாடறியச் சிறுதேரை
நன்ருய் உருட்டி அருள்க!
பாராரும் பண்புநிறை பாவலனே! சிறுதேரைப்
பாங்காய் உருட்டி அருள்க!
பழவறத்தை உலகிற்குப் பகரொந்தாய்! சிறுதேரைப்
பாங்காய் உருட்டி அருள்க! கo

ஆகச் செய்யுள் கoo
முற்றுப் பெற்றது.

---

## வாழி.

காந்திஎனும் கருணைபொழி கவின்மேகம்
வாழ்க!உலகத்து வாழும்
மாந்தரொடு பல்லுயிரும் வாழ்க! அறம்
யாவும்கனி வாழ்க! வாழ்க!
வாய்ந்தபுகழ் கொண்டன்று வாழ்ந்தபெரும்
பாரதத்தாய் வாழ்க! நாங்கள்
ஏந்துதமிழ் வாழ்ந்திடுக! எழிலாரும்
அறவோர்கள் என்றும் வாழ்க!

# செய்யுள் முதற்குறிப் பகராதி.


| தொடர் எண். | பாட்டு. | பக்க எண். | தொடர் எண். | பாட்டு. | பக்க எண். |
|---|---|---|---|---|---|
| ௧ | அகழ்வாரைத் | ௧௩ | ௨௯ | உலகவர் | ௨௩ |
| ௨ | அந்தணர் | ௩௩ | ௩௦ | ஊனெடுக்கி | ௭௦ |
| [illegible] | அப்பெரியோன் | ௬ | ௩௧ | எதிர்கால | ௩௫ |
| ௪ | அமைச்சனுய் | ௧௫ | ௩௨ | எந்தாய் | ௪௮ |
| ௫ | அய்ய | ௪௭ | ௩௩ | எய்துசகம் | ௭ |
| ௬ | அறமலி | ௫௩ | ௩௪ | எல்லாமாய் | ௨௧ |
| ௭ | அன்பா | ௨௬ | ௩௫ | ஏராரும் புகழ் | ௮௩ |
| ௮ | அன்னே | ௮௦ | ௩௬ | ஏராரும் வளப் | ௭ |
| ௯ | ஆன இந்த | ௬௫ | ௩௭ | ஏழைபங் | ௩௭ |
| ௧௦ | இகத்திற் | ௪௦ | ௩௮ | ஐம்பெரிய | ௭௦ |
| ௧௧ | இத்தரை | ௩௯ | ௩௯ | ஒழுக்கமது | ௫௮ |
| ௧௨ | இந்தியர் | ௪௫ | ௪௦ | கடமை | ௬௬ |
| ௧௩ | இந்த்யர் | ௬௫ | ௪௧ | கதியடை | ௭௪ |
| ௧௪ | இந்துமுக | ௭௫ | ௪௨ | கற்றுணர்ந்த | ௮ |
| ௧௫ | இந்துமுசல் | ௭௫ | ௪௩ | கன்னல் | ௨௬ |
| ௧௬ | இந்நாள் | ௨௮ | ௪௪ | காந்தியெனும் | ௮௩ |
| ௧௭ | இந்நில | ௭௯ | ௪௫ | காந்தி வருக | ௪௭ |
| ௧௮ | இருநில | ௨௨ | ௪௬ | குற்றம் | ௬௧ |
| ௧௯ | இருமூன் | ௪௬ | ௪௭ | கொன்னேநம் | ௩௫ |
| ௨௦ | இழுக்காக | ௬௦ | ௪௮ | சட்டச | ௭௨ |
| ௨௧ | இழையாயி | ௫௯ | ௪௯ | சத்தியத்தைத் | ௫௭ |
| ௨௨ | இறைமனம் | ௪௪ | ௫௦ | சாதி | ௫௧ |
| ௨௩ | இனிப்பிறவி | ௩௩ | ௫௧ | சாந்தம் | ௧௧ |
| ௨௪ | இனிமை | ௩௬ | ௫௨ | சாந்தம் என்னும் | ௫௧ |
| ௨௫ | இன்ன செய்கை | ௬௩ | ௫௩ | சிந்தை | ௪௦ |
| ௨௬ | இன்னபுகழ் | ௬ | ௫௪ | சீர்மலியுந் | ௬௮ |
| ௨௭ | இன்னு | ௨௫ | ௫௫ | செங்கோல் | ௪௨ |
| ௨௮ | ஈசன் | ௨௭ | ௫௬ | செந்நெல் | ௫௨ |

## செய்யுள் முதற்குறிப் பகராதி.


| தொடர் எண். | பாட்டு. | பக்க எண். | தொடர் எண். | பாட்டு. | பக்க எண். |
|---|---|---|---|---|---|
| ௫௭ | செயல் கண்டும் | ௫ | ௮௫ | பாருள்ள | ௬ |
| ௫௮ | செல்வம் | ௩௦ | ௮௬ | பான்மதி | ௭௮ |
| ௫௯ | ஞாலம் பெறினும் | ௨௧ | ௮௭ | பிறப்பினில் | ௨௪ |
| ௬௦ | ஞாலம் மதிக்கும் | ௪௧ | ௮௮ | பிறர்குற்றம் | ௩௩ |
| ௬௧ | தகப்பனைப்பெற் | ௧௭ | ௮௯ | புகழ்சேர்சுக் | ௧௨ |
| ௬௨ | தக்கதகா | ௭௧ | ௯௦ | பூதலத்தில் | ௧௩ |
| ௬௩ | தமிழ்பாட | ௮ | ௯௧ | பெரும | ௪௯ |
| ௬௪ | தன்னா | ௩௨ | ௯௨ | பேர்படைத்த | ௫ |
| ௬௫ | தன்னுயிர் | ௩௭ | ௯௩ | பொன்புரையுந் | ௬௧ |
| ௬௬ | திங்களொள | ௫௬ | ௯௪ | பொன்மணக்க | ௭௭ |
| ௬௭ | தீஞ்சாலி | ௧௧ | ௯௫ | போயர் | ௬௨ |
| ௬௮ | தீண்டாமை | ௩௪ | ௯௬ | போர்ப்பந்தர் | ௧௯ |
| ௬௯ | தென்னைப் | ௧௭ | ௯௭ | மக்கட் | ௩௦ |
| ௭௦ | தென்னைப்பி | ௬௮ | ௯௮ | மக்களுயர் | ௫௪ |
| ௭௧ | தென்னைப்பிரிக்கா | ௬௧ | ௯௯ | மத்தெறிந்த | ௧௫ |
| ௭௨ | தேனர் | ௪௨ | ௧௦௦ | மந்திரியின் | ௨௦ |
| ௭௩ | நன்று | ௬௩ | ௧௦௧ | மரணம் | ௪௧ |
| ௭௪ | நாம்விண்ணில் | ௫௫ | ௧௦௨ | மறைபுகலும் | ௫௮ |
| ௭௫ | நியாயம் | ௬௭ | ௧௦௩ | மாநில | ௨௩ |
| ௭௬ | நின்மக்கள் | ௧௪ | ௧௦௪ | முழுநல | ௭௯ |
| ௭௭ | நின்வழக் | ௪௪ | ௧௦௫ | முன்னம் | ௨௮ |
| ௭௮ | நின்னுடைய | ௭௭ | ௧௦௬ | மெய்த்திரு | ௨௯ |
| ௭௯ | நீகலைகள் | ௫௬ | ௧௦௭ | மேனட் | ௩௮ |
| ௮௦ | நீபடைத்த | ௧௧ | ௧௦௮ | வள்ளால் | ௫௦ |
| ௮௧ | நீள்பாஞ் | ௬௪ | ௧௦௯ | வள்ளுவர்சீர் | ௧௬ |
| ௮௨ | பண்டிந் | ௭௩ | ௧௧௦ | வள்ளுவரும் | ௭௬ |
| ௮௩ | பாரார் | ௪௩ | ௧௧௧ | விண்ணுறையும் | ௫௪ |
| ௮௪ | பாரிற் | ௭௨ | ௧௧௨ | வேண்டுமெனும் | ௭ |

# முன்னுரை

அருந் தமிழ் மக்களே!

அரசாங்கத்தார் எனக்கு அளித்த விருந்தையுண்டு களித்து வேலூர் அரண்மனையில் வாழ்ந்த நாள், சிறியேன் பாடிய பாக்களில் ஒரு பகுதியை, இந்த ஒரு சிறு நூலாக ஆக்கி வெளியிடுகின்றேன். இப்பாமாலை காந்தியடிகட்குச் சூட்டத் தொடுக்கப்பட்டது. பதினெட்டுப் பதிகங்கள் இதில் அடங்கியிருப்பதால், "காந்தி பதினெண்பா" எனப் பெயரிட்டிருக்கிறேன். இப்பாக்களுள் பெரும்பான்மை "ஊழியன்" பத்திரிகையில் வெளிவந்தவை. காந்தியடிகளின் இணையிலாப் புகழைத் தீந் தமிழ்த் தேனில் குழைத்துத் தமிழர்க்கு ஊட்ட வேண்டும் என்ற ஆசை மிகுதியாலேயே இப் பாக்களை யாத்தேன். அதனை அருந்தி மகிழ்வதே தமிழ் மக்கள் எனக்குச் செய்யும் கைம்மாறு. பழம் புகழ் பலவற்றோடு உலகிற் பெரிய ஒருவரின் பெரும் புகழிலும் கலந்து தமிழ்த் தாய் சிறப்புற்று வளர்க!

பல மாசி கஅஉ
சென்னை.

ராய. சொக்கலிங்கன்.

# உள்ளுறை.


| தொடர் எண். | பெயர். | பாவகை. | பக்க எண். |
|---|---|---|---|
| ௧ | திருப்பள்ளி யெழுச்சி | விருத்தம் | ௧ |
| ௨ | திருத் தசாங்கம் | வெண்பா | ௫ |
| ௩ | திருப் பொன்னூசல் | கலிப்பா | ௮ |
| ௪ | திருப் பல்லாண்டு | விருத்தம் | ௧௨ |
| ௫ | திருநாமம் கேட்டல் | கலி விருத்தம் | ௧௬ |
| ௬ | புகழ் பாடுமின் | வஞ்சித் தாழிசை | ௧௯ |
| ௭ | சொற் பெருமை | வஞ்சி விருத்தம் | ௨௧ |
| ௮ | அங்கங்களின் பயன் | அகவற்பா | ௨௩ |
| ௯ | ஆடாமோ ஊசல் | அகவற்பா | ௨௬ |
| ௧௦ | தோழிப் பேச்சு | ஆசிரியத் தாழிசை | ௨௯ |
| ௧௧ | ஏர்வாடாக் கோவில் | தாண்டகம் | ௩௧ |
| ௧௨ | சபர்மதி | தாண்டகம் | ௩௫ |
| ௧௩ | கடவுளை வேண்டல் | விருத்தம் | ௩௯ |
| ௧௪ | உண்ணாவிரத முடிவு | விருத்தம் | ௪௩ |
| ௧௫ | சிறை வாழ்வு | விருத்தம் | ௪௭ |
| ௧௬ | திருப்புகழ் | சந்தப்பா | ௫௧ |
| ௧௭ | திருப்பணி | சிந்துப்பா | ௫௯ |
| ௧௮ | தீண்டாமை | கண்ணிப்பா | ௬௩ |
| ௧௯ | செய்யுள் முதற் குறிப்பு | | ௬௯ |

# 1. காந்தி திருப்பள்ளி யெழுச்சி.

---

பாயிரம்

அறுசீர் விருத்தம்.

கலங்காத திருவுளத்துக் காந்திக்குத்
திருப்பள்ளி யெழுச்சி கண்டான்
அலங்காரம் ஆங்கலியை யாயிரத்து
முப்பத்து நான்காம் ஆண்டில்
இலங்கும்ஆங் கீரசவில் எழிலானி
பதினேழா இசைந்த நாளில்
மலிந்தபுகழ் தருவேலூர்ச் சிறையதனில்
ராயசொக்க லிங்கன் மாதோ.

## திருப்பள்ளி யெழுச்சி.

எண்சீர் விருத்தம்.

விரிகதிர் பரப்பி இரவியும் எழுந்தான்!
வியனிலம் இருள்கெட வெளுத்தது கீழ்பால்!
அருஞ்சிறைக் கதவம் திறக்கநின் னடியார்
அறையினின் றெழுந்துவந் தடிபணி கின்றார்!
பெருமித அன்னை விடுதலை விரைவில்
பெறுவதற் குன்மேல் விழிநிறைக் கின்றாள்!
ஒருதனி வள்ளால்! ஒண்டவ காந்தி!
உயிர்க்குயி ரே!பள்ளி யெழுந்தரு ளாயே! க

கோழிகள் கூவின! கொழுநகை முல்லைக்
கொடிகள் மலர்ந்தன! படிபுகழ் உழவர்
மேழிகள் ஏந்தினர்! மேதினி வாழ
மேன்மை அறம்பொருள் மேலவர் விண்டார்!
ஏழிசை யோடின்ப யாழ்குழல் இணைத்தே
ஏந்தெழில் மாதர் இயம்பினர் கீதம்!
வாழிகள் பாடினர் வந்தியர்! காந்தி
மாதவ னே!பள்ளி யெழுந்தரு ளாயே! உ

விடிந்தது பொழுது! விளங்கிய துலகம்!
விட்டனர் உறக்கம்! தொட்டனர் தொண்டு!
மடிந்தது மடமை! வாழ்ந்தது நாடு!
மண்டினர் உரிமை மாபெரும் போரில்!
இடிந்தது காரிருள்! இரிந்தனர் மாற்றார்!
எழுந்தனன் விடுதலைப் பரிதியவ் வானில்!
முடிந்தது பகைமை! உயர்ந்தனள் நந்தாய்!
மோகன னே!பள்ளி யெழுந்தரு ளாயே! ங

ஆடின மயில்கள்! கூவின குயில்கள்!
ஆற்றின பறவை! அலர்ந்தன மலர்கள்!
மாடமும் மறுகும் வயங்கின ஓசை!
மாதரும் மைந்தரும் மொய்த்தனர் யாண்டும்!
கோடுயர் உதய மால்வரை யதனில்
கொழுங்கதிர் நிறைத்தே எழுந்தனன் பகலோன்!
பாடினர் புலவோர் நின்புகழ்! காந்திப்
பண்ணவ னே!பள்ளி யெழுந்தரு ளாயே! ச

இளங்கதிர் ஞாயிறு எழுந்தது கிழக்கில்!
எழுந்தது சுதந்தரப் பெருமுழக் கெங்கும்!
விளங்கொளி மேனிநம் மேதகு நற்றாய்
விழைந்தனள் பண்டைப் பெறலரும் வாழ்வை!
உளங்களி கூர்ந்தவள் உயரநின் னடியார்
உன்னரும் பணிதலை பார்த்துநிற் கின்றார்!
வளங்கெழு நாட்டை வாழ்வித் தருள
வந்தவ னே!பள்ளி யெழுந்தரு ளாயே! ரு

பூரண சுதந்தரப் பேரிகை முழங்குது
பூமியும் வானமும் திசைகளும் குலுங்க!
மாரத அறப்போர் வீரர்க ளான
மைந்தரும் மாதரும் வல்லணி வகுத்தே
ஆரஞர் உற்ற பாரத அன்னை
அருந்தளை தகர்க்க அமர்க்களஞ் சேர்ந்தார்!
போரதிற் றலைமை பூண்டருள் காந்திப்
புண்ணிய னே!பள்ளி யெழுந்தரு ளாயே! சு

நின்புகழ் பாடிநின் றேத்தினர் ஒருபால்!
நினதருள் வாய்மொழி நோக்கினர் ஒருபால்!
அன்புரு வாநின் றுடினர் ஒருபால்!
அடிமை தொலைக்கவந் தடைந்தனர் ஒருபால்!
மன்பதை காப்போர் மாசு துடைக்க
வன்கொடுஞ் சிறையுள் வதிந்தனர் ஒருபால்!
என்பொடிந் திடவடி பட்டனர் ஒருபால்!
எம்பெரு மான்!பள்ளி யெழுந்தரு ளாயே! எ

வாழ்ந்தது நல்லறம்! வாழ்ந்தது நாடு!
வாழ்ந்தனர் மேலோர்! வாழ்ந்தனம் யாமும்!
வீழ்ந்தது தீமை! வீழ்ந்தபேர் ஆசை!
வீழ்ந்தனர் கீழோர்! வீழ்ந்தனர் வீழ்ந்தார்!
ஆழ்ந்தநின் எண்ணம் அனைத்துமே கூடி
அவனிசீர் பெறும்நாள் அணைந்ததால் ஐய!
தாழ்ந்தவர் உயரத் தரணியில் வந்த
தண்ணளி யே!பள்ளி யெழுந்தரு ளாயே! ௮

கருணையின் கடலே! பெருங்குணக் குன்றே!
கதிர்நிகர் ஒளியே! பெருமித முனியே!
தரைபொறு பொறையே! சபர்மதி வாழ்வே!
சத்திய நெறியே! உத்தமர் ஏறே!
வருமடி யோமின் கண்ணே! மணியே!
மணியுறை பாவாய்! மாநில விளக்கே!
அருமையில் உயர்வொப் பொருவரும் இல்லாய்!
ஆருயி ரே!பள்ளி யெழுந்தரு ளாயே! ௯

பொய்கை மலர்ந்தன! மலர்ந்தன சோலை!
புள்ளினம் அலம்பின! அலம்பின சங்கம்!
பெய்மது உண்டிசை பாடின வண்டு!
பேசின நின்புகழ் பூவையும் கிளியும்!
வெய்யவன் தன்னிளம் செங்கதிர் நுழைத்து
விரிமலர்ச் சோலையின் இடைபுகு கின்றான்!
தையலர் மாமலர் கொய்வதற் குற்றார்!
சபர்மதி யோய்!பள்ளி யெழுந்தரு ளாயே! ௰

# 2. காந்தி திருத் தசாங்கம்.

---

## பாயிரம்.

### அகவற்பா.

சேண்புகழ் கொண்டவர் வாடாச் சிறையுறை
காண்டகு சிறப்பிற் காந்தி யடிகட்கு,
நாமம், நாடு, நகர், நதி, மலையே,
ஊர்தி, படை, முரசு, ஒண்டார், கொடியெனும்
அங்கம் பத்தும் வெண்பாப் பத்தில்
பாடினன்; காரைப் பதிவாழ் ராய
சொக்க லிங்கன்; தொல்கலி யாண்டு
ஐயா யிரத்துமுப் பத்து நான்காம்
ஆங்கி ரசவில் ஆனிபதி னெட்டில்;
வேலூர் அரண்மனை மேவிய நாளென்.

## திருத் தசாங்கம்.

### நேரிசை வெண்பா.

க. பெயர்.

சிறையார் மணிக்கிள்ளாய்! தேசம் செழிக்க
இறையான ஏதமிலான் பேரென்?—அரசாள்
முடிமன்னர் அஞ்சவரு மோகனதாஸ் காந்தி
அடிகளவன் பேரென்று அறை! க

௨. நாடு.

பச்சைப் பசுங்கிளியே! பாரிலுயர் காந்திமகான்
மெச்சுபுகழ் நாட்டை விளம்புவாய்?—நச்சு
தனியிமயம் தொட்டுத் தமிழ்க்குமரி ஈறும்
முனிவோர்நாடு என்றே மொழி! ௨

௩. ஊர்.

கொஞ்சுமொழி அஞ்சுகமே! கோதறியா எங்காந்தி
விஞ்சும் அரும்பதியென்! விள்ளுவாய்?–அஞ்சுலகில்
யாதுமவன் தன்னூரே! யாவரும் அவற்குறவென்று
ஏதமொன்றும் இன்றி இயம்பு! ௩

௪. ஆறு.

வானூர் மரகதமே! மாதவத்துப் புத்திரிபாய்
ஆனாத செல்வன்உயர் ஆறுநவில்?—தேன்நாறும்
கங்கை முதல்தென் கடல்வீழ் பொருநைவரை
இங்கிதப்பல் யாறென்று இசை! ௪

௫. மலை.

இன்மழலைச் சோலை எழிலார் இளந்தத்தாய்!
சொன்னயத்தாற் குற்றமலை சொல்லுவாய்?-தன்னேர்
இரும்பொன் இமயமுதல் எற்பொதிகை ஈறாப்
பெருமலைகள் எண்ணிலவாம் பேசு! ௫

௬. ஊர்தி.

அஞ்சொலிளை மெல்லியலார் அங்கைவளர் அஞ்சுகமே!
செஞ்சொலான் செல்லூர்தி செப்புவாய்?—விஞ்சுகலை
பூண்ட நலஞ்சேர் புகழார் பெருங்குணத்தில்
மாண்டார் மனமென்று உரை! ௬

எ. படை.

அமிழ்த மொழிபடிப்பான் ஆயிழையார் அங்கை
கமழு மரகதமே! காந்தி—இயிழ்படைகொல்?
குன்றெழுந்து வந்திடினும் கூறு படுக்குமிசை
குன்றாத உண்மையெனக் கூறு! எ

அ. முரசு.

சிறுகுதலைத் தத்தாய்! திருவாளன் முன்றில்
மறுகுமணி மாமுரசம் யாதோ?—அறமே!
இனிமை! கருணை! எளிமை! பொறை! வாய்மை!
புனிதம்! இவை என்றே புகல்! அ

கூ. மாலை.

செம்பவள வாய்க்கிள்ளாய்! சீரார் சபர்மதியான்
வம்பவிழும் மாலை வழுத்துவாய்?—எம்பெருமான்
வான்கீண் டுயர்ந்த வரைநேர் பெரும்புகழைத்
தான்கொண்டான் தாரென்றே சாற்று! கூ

கo. கொடி,

ஏரார் இளங்கிளியே! எங்கள் உயிர்க்குயிரான்
காரேர் கொடியென்! கழறுவாய்?—பாரேத்தும்
மும்மை நிறத்து முதுராட் டமைத்தஉயர்
செம்மைக் கொடியெனவே செப்பு! கo

# 3. காந்தி திருப்பொன்னூசல்.

---

## பாயிரம்

### அகவற்பா.

ஐயா யிரத்துமுப் பத்து நான்கென
எய்திய கலியாங் கீரச யாண்டில்
ஆனித் திங்கள் அணிபத் தொன்பான்
பெருநாள் தன்னில் பீடார் காந்தி
திருப்பொன் னூசல் சீர்சால் தமிழில்
சொற்றனன் ராய சொக்க லிங்கன்
வேலூர் அரண்மனை மேவிய நாளென்.

## திருப்பொன் னூசல்.

### எட்டடித் தரவு கோச்சகக் கலிப்பா

உலகம் புகழுமுயர் ஒப்பில்சீர் உற்றிடுமெம்
தலைவன்! அறவாழித் தண்ணளியான்! சால்புடையான்!
மலைநேர் குணமுடையான்! மாநிலமே போற்பொறையான்!
கலைகள் முழுதுணர்ந்தான்! கடமையே தான்புரிவான்!
நிலையில் பொருளறிந்தான்! நேர்மைதனைப் போற்றுவான்!
அலகில் பெருங்காந்தி அண்ணலவன் சீரனைத்தும்
குலவிக் கொழுநருடன் கொஞ்சுதமிழ்ப் பாப்பாடிப்
புலமை எழிலணங்கீர்! பொன்னூசல் ஆடாமோ! க

தூணல்ல வயிரமாம்! தூத்தாளம் உத்தரமாம்!
ஆணிப்பொன் அழகொழுக ஆடுமெருஞ் சங்கிலியாம்!
மாணிக்க விளிம்பமைத்து மாகதக்கால் வைத்திழைத்த
நாணப்பேர் ஒளிமுழுதும் நலந்திகழும் நீலமணி
பேணிச்செய் பீடாரும் பெரும்பலகை பிறங்கிடவே
பாணிக்கொள் அருங்கணவர் பாராட்ட இனிதமர்ந்து
காணற்கே தவம்வேண்டும் காந்தி புகழ்பாடிப்
பூணொத்த கற்புடையீர்! பொன்னூசல் ஆடாமோ! ௨

ஞாலந் தனிற்பெரிய நல்லோன்! நவையில்லான்!
சீலன்! அறிஞருரை தேவன்! திருவாளன்!
காலம் முழுதுணர்ந்தோன்! கடமை தவறுதோன்!
காலன் கொதித்தெழினும் கலங்காதோன்! கஸ்தூரி
மாலை மகிழ்ந்தேற்றோன்! மாதவத்துப் புத்திரிபாய்
பாலன்! எழில்மோகன்! பண்பார் பதம்பாடி
வேலை நிகர்த்தவிழி மென்மைச் சிறகன்னம்
போலும் மடநடையீர்! பொன்னூசல் ஆடாமோ! ௩

கொங்கு விரிமலர்போற் குளிர்முகத்தீர்! சொழுக்குழவித்
திங்கள் நுதலுடையீர்! சிறுகும் திலகமதில்
தங்கும் எழிலுடையீர்! சாரோர் விழியுடையீர்!
சங்கு திகழ்காத்தில் தங்கப் பிடிதடவிக்
கொங்கை குலுங்கப்பூங் கொடிநுண் இடைநுடங்க
வங்கக் கடற்பவள வாய்முத் தமுதுகுக்க
எங்கள் தவக்கொழுந்தின் இணையில் புகழ்பாடிப்
புங்கம் பெறவிழைந்து பொன்னூசல் ஆடாமோ! ௪

மாசில் அரும்பொன்னீர்! வலம்புரிநல் முத்தனையீர்!
காசில் விரையொப்பீர்! கரும்பாவீர்! தேன்பொருவீர்!
ஆசைக் கொழுநர்சீர் ஆகமொரு கையணைத்து,
வீசும் ஒருகையால் மேவுபிடி தொட்டசைத்துப்
பேசு கிளி,குழல்,யாழ், பேரமிர்தம் ஆர்ந்தமொழி
தேசு திகழ்மதுரச் செம்பவள வாய்திறந்தே
ஈசன் இருங்காந்தி எம்மான் புகழ்பாடிப்
பூசல் புரிகண்ணீர்! பொன்னூசல் ஆடாமோ! ௫

ஏரார் இளங்கொடியீர்! எங்கள் பெருமானார்
வாரார் திருமேனி வயங்கும் எழில்பாடிச்
சீரார் ஒளிவீசு திங்கள் முகம்பாடிக்
காரார் அருள்பொழியும் கருணை விழிபாடி
நாரார் அமிழ்தொழுகும் நல்வாய் நனிபாடி
ஓரார் உணர்வரிய ஒற்றைக் கதர்பாடி
நோரார் அதிசயிக்கும் நேர்மைப் புதியமுறைப்
போரார் திறம்பாடிப் பொன்னூசல் ஆடாமோ! ௬

"கம்ப மதயானைக் கழுத்தகத்தின்" மீதமரும்
பைம்பொன் முடியரசர் பணியும் பெருங்குணஞ்சேர்
கம்பன், அறம்வளர்க்கும் நல்லோன் திறம்பாடிக்
கொம்பர் வழிந்தொழுகு கொழுந்தேன் கொடுநலங்கொள்
உம்பர் அமிழ்தனைந்த ஒண்டீஞ் சுவைத்தமிழில்
செம்ப வளமுத்தம் சிதறு புறம்பொசிய
வம்பார் கருங்குழலீர்! மணமாலை வாழ்வண்டு
"பொம்பொம்" எனமுழங்கப் பொன்னூசல் ஆடாமோ!

காதார் குழையாடக் கழைத்தோள் உயர்ந்தாட
மீதார் துகிலாட மேனி சிறிதாடத்
தூதார் துவண்டாடத் துடிநேர் இடையாட
வாதார் விழியாட மணிக்கை வளையாடத்
தாதார் அணியாடச் சதங்கைப் பதமாட
வேதா வியப்பெய்த விளங்கும் இகழ்திறந்து
மாதா மடிமேல் வளர்வோன் புகழ்பாடிப்
போதார் குழலாடப் பொன்னூசல் ஆடாமோ! அ

வானம் நனிபுதைப்ப வளர்ந்த புகழாளன்!
“தானம் தவமிரண்டும்” தங்கும் வனப்புடையான்!
ஞானம் மிகவுடையான்! ஞாலந் தனிற்பெரியான்!
ஊனம் சிறிதுமிலான்! ஒற்றைக் கதருடையான்!
மானக் குழலினிசை வண்யாழ் மிழற்றோசை
கானக் குயிலொலியும் கரும்பும் விரும்பமுதும்
தேனும் குழைத்தமொழிச் சீரீர்! திசைகடந்து
போன புகழ்பாடிப் பொன்னூசல் ஆடாமோ! ௯

சாந்தம், பொறை, கருணை, தண்மை, சீர், புனிதமிசை,
வாய்ந்த அறிவேந்தி, மாநாடு வாழவந்த,
வேந்தன் உயர்காந்தி மெய்சேர்ந்த புகழ்பாடி
வய்ந்த கருத்தறிவும் எழிலுமிணை காதலரைக்
காந்தள் வளையணிந்த கவவுக்கை நெகிழாமல்
தேய்ந்த இடைவருந்தச் செய்யகனி வாய்திறந்து
தோய்ந்த இளஞ்சாயல் தோகைமயில் தோற்கடித்துப்
போந்த தமிழியலீர்! பொன்னூசல் ஆடாமோ! ௧௦

# 4, காந்தி திருப் பல்லாண்டு.

---

## பாயிரம்.

### அறுசீர் விருத்தம்.

சகமாண்டோர் ஆயிரத்தெண் ணூற்றைம்பத்
 தைந்தின்மேற் சார்ந்து நின்ற
மிகுமாங்கீ ரசஆனி மேவிருபத்
 தொன்பானுள் மேலோர் வாழப்
புகுகாந்தி யடிகட்குப் புனைந்தனனற்
 பல்லாண்டு புனித வேலூர்த்
தகுமாணூர் தனிச்சிறையில் ராயசொக்க
 லிங்கனருந் தமிழன் மாதோ.

## திருப் பல்லாண்டு.

### அறுசீர் விருத்தம்.

சீர்கெழு மாநிலம் யாங்கணும் ஈடில்லான்!
 சீலத்தால் ஞாலமாள்வான்!
கார்நிறை உரையலால் வேறுரை அறியாதான்!
 நல்லறமே நவிலுநாவான்!
ஆர்கலி பொங்கியே ஆரவா ரஞ்செயினும்
 அமைதியிழ வாதஐயன்!
பார்புகழ் அருந்தவக் காந்தி யடிகட்குப்
 பல்லாண்டு கூறுதுமே! க

மிடி,பிணி, படிறு,பொய், வெஞ்சினம், வீணசை,
மெலிவு,சூடி, கயமை,காமம்,
மடி,கொலை, மற்றோர் மண்ணுள் மடமையொடு
மாணுத அன்னயாவும்
அடியுடன் களைந்திட அவனியில் தோன்றியுயர்
அறம்வளர்த் தருளுமெங்கள்
படிதனில் உயர்ந்தசீர்க் காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! உ

மாரதர் அதிரதர் முதலிய வல்லாண்மை
மன்னர்சீர் நீதிகண்ட
போரதில் இணையிலா வீரர் பலர்வாழ்ந்த
புரையில்நா டிற்றைநாளில்;
பாரதில் சமம்பெறு தொன்னலர்க் குட்பட்ட
பான்மைதொலை யப்பிறந்த
பாரதர் முடிமணிக் காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! ௩

ஆவியே அனையான்! அவனி தனக்கென்ன
அறிஞரெனும் பெருமைமிக்க
நாவலர் பலருரை நம்பன்! நலந்திகழும்
நாட்டுவிடு தலையினின்று,
காவலர் கன்றினர் ஆயினும் அஞ்சாதே
கடமைபுரி கருணைகொண்ட
பாவிரி கீர்த்திபெம் காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! ௪

எங்கள் உயிரனன்! இந்தியத் தாய்செய்த
எண்ணிலுயர் தவத்துதித்தான்!
தங்கும் அறிவினர் தனிமனம் அகலாத
சாத்வீக குணசீலன்!
பொங்கும் மங்களம் எங்கும் தங்கிடவே
புரியவரு மோகனப்பேர்ப்
பங்கம் இல்குணக் காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! ரு

ஆடக வரைதொட்டே அழகார் குமரிவரை
அருளொழுகு நாடுதன்னில்
நாடுமுயர்மக்கட் பிறப்பில் நடுவின்றி
ஞானமொரு சிறிதுமின்றிக்
கோடி பொருபிரிவார் தீண்டார் எனக்கூறும்
கொடுமையைக் கொலப்பிறந்த
பாடனுடைச்சிறப்புக் காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! சா

துறவிக்கு வேந்தன் துரும்பென் றுரைத்தஉயர்
தொல்லுரையை உலகமெங்கும்
அறிவிக்க வந்தவன்! அறந்தவிர் ஆறென் றும்
அறியாதான்! அருமையாளன்!
குறைமிக்க ஆட்சியின் கொடுமை நனியாய்ந்து
கூர்த்தமதியோ ருவப்பப்
பறைவிக்கும் எம்பெரும் காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! எ

மால்பெற்ற தீமை அனைத்தும் துறந்தபெரு
மாண்புமுழு தும்மடைந்து,
நூல் பெற்ற உண்மை நுணுகி உணர்ந்தரிய
நோன்புதலை மேற்றரித்து,
நூல்பெற்ற ஆழி காங்கொண் டுயர்ச்சிபெறு
நுவலரிய சீலனான
பால்பெற்ற இன்னுரைக் காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! அ

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்"
சொல்லாண்ட தூய்மையன்! தொன்மை அறஞ்சொற்ற
துரிசிலாத் திருமனத்தான்!
வில்லாண்ட மெய்ம்மையன்! மேவா இடத்திலும்
விரிந்தபுகழ் வீசுமேலோன்!
பல்லாண்டு வாழ்கென்று காந்தி யடிகட்குப்
பல்லாண்டு கூறுதுமே! கூ

வாழிய உலகெலாம் பல்லாண்டு! வாழ்க
நின்னறம் பல்லாண்டு!
வாழிய ஒருகதர் பல்லாண்டு! வாழ்க
நின்புகழ் பல்லாண்டு!
வாழிய ராட்டினம் பல்லாண்டு! வாழ்க
பெற்றதாய் பல்லாண்டு!
வாழிய அடியவர் பல்லாண்டு! வாழ்க
காந்திநீ பல்லாண்டு! க0

# 5. காந்தி திருநாமம் கேட்டல்.

---

## பாயிரம்

### அறுசீர் விருத்தம்.

அறைசகமாயிரத்தெண்ணூற் றைம்பதனோ
டைந்தின்மேல் அடைந்து நின்ற
நிறையாங்கீ ரசவாடி நேர்இருபத்
தாறும்நாள் நேயக் காந்தி
பொறையுடையான் திருநாமம் பூங்கிளியை
வினவுதமிழ்ப் பொற்பா வேலூர்ச்
சிறையதனில் செய்தளித்தான் ராயசொக்க
லிங்கனெனும் சிறுவன் மாதோ.

## திருநாமம் கேட்டல்.

### கலி விருத்தம்.

நலமார்ந்த நற்பவள வாய்ப்பச்சை நறுங்கிளியே!
அலையாதே! இங்கேவா! அருந்தேனோ டமுதீவேன்!
புலையான மனமதனைப் பொறிசெலுத்தா எந்தலைவன்
கலையாளன் திருநாமம் எனக்கொருகாற் கழறாயே! க

கொடிப்பவள வாய்க்கிள்ளாய்! இங்கேவா! கொழுந்தேனும்
வடித்தசுவைத் தீங்கரும்பும் மாங்கனியும் உணத்தருவேன்!
பிடித்தபுகழ்ப் போர்ப்பந்தர் பிறந்தருளும் தவக்கொழுந்தின்
மடுத்தஒளித் திருநாமம் எனக்கொருகால் வழுத்தாயே! உ

மாமயிலார் வண்கைவளர் மரகதமே! வா!வா!!நீ
காமுறுநல் லுணவனைத்தும் கனிவுடனே தருவேனன்!
ஏமமுறும் இணையில்லா ஏர்வாடாக் கோவிலுறை
தூய்மையுளான் திருநாமம் எனக்கொருகாற் சொல்லாயே! ௩

கொஞ்சுமொழி அஞ்சுகமே! இங்கேவா! கொம்புத்தேன்
விஞ்சஅளைந் தின்கனிகள் வேண்டுமட்டும் ஈந்திடுவேன்!
பஞ்சையர்க்கு வாழ்வளிக்கும் பாரதத்தாய் பெருமகனும்
செஞ்சொல்வலான் திருநாமம் எனக்கொருகாற் செப்பாயே!

குழலொடுயாழ் அமிழ்தளைந்த கொழுமழலைக் கிளவியர்தம்
அழகொழுகும் அங்கைவளர் அணிதத்தாய்! அருகேவா!
கொழுகொழுத்த அமுதீவேன்! கூர்த்தமதிக் கூர்ஜரத்தான்
பழகுபுகழ்த் திருநாமம் எனக்கொருகாற் பாடாயே! ௫

பச்சைநிறப் பைங்கிளியே! பாலொடுதேன் நான்தருவேன்!
இச்சைவழி நாடதனை இயக்குவிக்கும் எம்பெருமான்
துச்சமெனத் திருமுழுதும் துறந்தபெரும் திருவாளன்
அச்சமிலான் திருநாமம் எனக்கொருகால் அருளாயே! ௬

பேதையெனப் பேதையர்சொல் பெண்மணிகள் பேச்சறியக்
காதலிக்கும் கைக்கிள்ளாய்! கனிதருவேன்! கண்ணேவா!
மாதவத்துப் புத்திரிபாய் மணிவயிறு வாய்த்தபுகழ்
நாதனுயர் திருநாமம் எனக்கொருகால் நவிலாயே! ௭

பண்டேய்த்த மொழியுடையார் பங்கிலுறை மரகதமே!
விண்டேய்த்த மெல்லமிழ்தம் நான்தருவேன்! உண்டிடலாம்
மண்டேய்த்த பெரும்புகழான் மாதவரும் நாடோறும்
கொண்டேத்தும் திருநாமம் எனக்கொருகால் கொஞ்சாயே!

பாவையர்தோள் மருவுமிளம் பசுந்தத்தாய் வா!வா!!நீ
மேவிவிளை யாடுதற்கு வேணடுதெலாம் நான்தருவேன் !
ஆவலுடன் எம்பெருமான் அருளொழுகு திருநாமம்
கூவிடுவாய் ! கூவிலுடன் கொன்றிடலாம் தீமையெலாம்! கூ

ஆய்ந்தசொலார் அஞ்சுகமே! அள்ளியுண வீந்திடுவேன்!
மாந்தருய இவ்வுலகில் வந்துதித்த மதிவல்லான்
சேர்ந்தபுகழ்த் திருநாமம் செகமதிக்கும் மோகனதாஸ்
காந்தியென மொழிந்திடுவாய்! கடலமுதம் ஆர்ந்தசொலால்!

# 6. காந்தி புகழ் பாடுமின்!

---

பாடிய தேதி :—ஆங்கீரச ஆவணி ௧௪-உ

## வஞ்சித் தாழிசை.

காந்தியிக் காசினி தாயவள் தளைகொல
வாழ்ந்திட வந்தனன்; மேயவன்! மேலவன்!
சாந்தனைச் சார்ந்திட நாயகன்! நற்றவத்
மாந்தர்காள்! வம்மினே! ௧ தூயனைத் துதிசெய்மின்! ௪

மோகனன் மொய்ம்பினன்! வேதனை வீழ்த்திட
ஏகனிவ் இரும்புவிக் மேதினி மேவினோன்!
காகலான் அடைந்திட காதலன் காந்திசீர்ப்
வாகுடன் வம்மினே! ௨ பாதமே பாடுமின்! ௫

அன்னைநோய் அகற்றுசீர் தன்னிகர் தானவன்!
வன்பெரும் மகாத்மனின் நன்னயன்! நலிவிலான்!
பொன்னடி பொருந்திட அன்னவன் அணிதிகழ்
மன்னுவீர் வம்மினே! ௩ பொன்னடி போற்றுமின்!

புத்திரி புத்திரன்!
வித்தகன்! மெய்யறம்
இத்தரை எங்கணும்
மெத்துவீர் வீரர்காள்! எ

அறிவுடை அந்தணன்!
செறிதரு சீரறம்
நறையெலாம் தங்கிட
நிறைசெய்வீர் நேயர்காள்!

செய்தவன்! சீர்த்தியன்!
கய்தவக் கருத்திலான்!
அய்யனல் லறந்தனைச்
செய்குவீர் தீரர்காள்! கூ

கருணைகொள் காந்தியின்
பெருமைகொள் பேரறம்
அருமைகொள் அவனியில்
உரிமையா உணர்த்துவீர்! க0

எள்ளலில் எம்முடை
வள்ளலின் மன்னறம்
அள்ளியே அவனிசீர்
கொள்ளுமா கொளுத்துவீர்!

காந்தியின் கருத்துடைச்
சாந்தமார் தண்ணறம்
வாய்ந்தஇம் மாநிலம்
மாந்துமா வழுத்துவீர்! கஉ

# 7. காந்தி சொற் பெருமை.

பாடிய தேதி :—ஆங்கீரச ஆவணி கக-உ

வஞ்சி விருத்தம்.

இழுக்கல் நிலத்தில் இடருறு,
வழுக்கும் ஞான்று, மகாத்துமன்
வழுத்தும் அரிய வாய்ச்சொலே ;
ஒழுக்கம் தாங்கும் ஊன்றுகோல் ! க

வெந்த புண்ணில் வேல்கொடு,
உந்தும் உணர்வில் உலகைவீழ்
விந்தை மக்கள் வீழ்ந்திட,
முந்தும் எந்தை மொழிகளே ! உ

வற்றல் மாமும் வளர்ந்திடப்
பற்றும் ; அரிய புண்புடை
ஒற்றைக் கத்தர் உடுத்தவன்
பெற்றம் மிக்க பேச்சரோ ! ங

எள்ள லில்லா இருங்குண
வள்ளல் காந்தி வாயுரை ;
கொள்ளை யின்பம் கூடிப்பூ
அள்ளி யுண்ணும் அமுதமால் ! ச

வாடு பயிரை வளர்த்தெழில்
நாடு செழிக்க நல்கிடும்,
பீடு கொண்ட பெருமழை ;
கேடில் காந்தி கிளர்மொழி ! ரு

அமுதம் அன்ன தண்ணளி,
நமையுண் பிக்கும் நன்மதி ;
அமைதி கொண்ட அந்தணன்
குமுத வாயின் கூறுரை ! ௬

தமிழு டன்னற் சந்தனங்
கமழு தென்றற் காற்றதாம் ;
அமிழ்தம் ஈயும் அறிவினன்
மகிழ நல்கு வாசகம் ! ௭

உற்ற நோயை ஓட்டிடும்
பெற்ற மிக்க பெருமருந்
திற்றை உலகுக் கீடிலா
வெற்றிக் காந்தி மெய்ம்மொழி ! ௮

இந்தி யத்தாய் இருந்தளை,
முந்த அறுக்கும் மூரிவாள் ;
சிந்தை யிருந்த சீரியான்
பந்தம் விட்ட பண்புரை ! ௯

சாந்தம் ! வீரம் ! தண்ணளி !
ஏந்து பெருமை இலங்கிடும்
காந்தி கூறும் கருத்துரை ;
மாந்தர் வாழ வைக்குமால் ! ௧௦

# 8. அங்கங்களின் பயன்

பாடிய தேதி :—ஆங்கிரச ஆவணி கரு உ

அறவாழி அந்தணனின்—அணியுலகம் எல்லாம்
உறநாடி ஒருபெரியோன் ஒருவனிவன் என்ன
அறநாட்டும் அம்மானின், அடிக்கமலப் போதில்,
தறைநாட்டிச் சாய்க்காத தலையென்ன தலையே !!
சபர்மதியான் தனைவணங்காத் தலையென்ன தலையே!! க

மாதவத்துப் புத்திரிபாய் மணிவயிறு வாய்த்த,
தீதிலுயர் சீறத்தைச் செகமுழுதும் சேர்த்த,
நாதனெழில் நல்வடிவும் நாகரிகம் நண்ணும்
காதலதும் மாந்தாத கண்ணென்ன கண்ணே !
காந்திதனைக் காணுத கண்ணென்ன கண்ணே !! உ

கோவியலை நம்மன்னை கொள்ளுதற்குச் சூழ்ந்து,
பூவுலகம் இன்றுவரைப் பூணுத கீர்த்தித்
தாவிலறப் போர்வகுத்த, தண்ணளியார் காந்திச்
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே !
செய்யவன்சீர் கேளாத செவியென்ன செவியே !! ந

காதல்நிறை கஸ்தூரி கணவன்;உயர் நந்தாய்
தீதிலருஞ் சிறுவன்; சீர்த் திருவுலகிற் பெரியோன்;
ஏதமேதும் அறிகில்லான்; இருங்குணத்தின் குன்றனான்;
மூதறிஞன் மணம்முகரா மூக்கென்ன மூக்கே!
மோகனனை முகராத மூக்கென்ன மூக்கே!! ௪

சொந்தவர சிந்தியத்தாய் சூடிமுடி தாங்க,
முந்தையோர் காணாத முறையிலொரு நற்போர்,
எந்தவுல கும்வியக்க இயற்றுபெருங் காந்தி,
நந்தலைவன் புகழ்பாடா நாவென்ன நாவே!
நாயகனை ஏத்தாத நாவென்ன நாவே!! ௫

தள்ளரிய பெருநீதித் தனியாற்றை மண்டும்
பள்ளமெனும் தகையானை—பாரதத்தாய் ஈன்ற
எள்ளுகுணம் இல்லானை—எம்மானை—காந்தி
வள்ளல்தனை—வாழ்த்தாத வாயென்ன வாயே!
மகாத்துமனே யென்னாத வாயென்ன வாயே!! ௬

மாந்தருய இப்புவியில் வந்துதித்த வள்ளல்!
சாந்தகுணன்! தண்ணளியன்! சபர்மதிக்கோன்! தாவிலான்!
ஏந்துபுகழ் மோகனப்பேர் எம்பெருமான்! ஈடிலான்!
காந்திதிரு முன்குவியாக் கையென்ன கையே!
கழலிணைகள் பற்றாத கையென்ன கையே!! ௭

பொய்வளரும் நெஞ்சினர்க்குப் புறமானான்! பூதம்
ஐய்வகையும் நன்றடக்கி ஆண்ட திருவாளன்!
உய்வறியாச் சிறுதகையேன் உளமிருந்த காந்தி!
மெய்யுடையான்! மெய்வணங்கா மெய்யென்ன மெய்யே!
மேதகவோன் தாள்வீழா மெய்யென்ன மெய்யே!! ௮

செயிர்தீரப் பண்டரசு செய்குலகின் முடிபோல்
அயர்வின்றி ஒளிர்ந்தநம தன்னையின்று மண்ணில்
துயர்தாங்கல் ஆற்றாமல் தூய்பணிமேற் கொண்ட
உயர்காந்தி தனை, நினையா உளமென்ன உளமே!
உத்தமனைச் சிறையிருத்தா உளமென்ன உளமே!! ௯

இருந்தகைமை இந்தியநா டின்றேழை யாகி,
வருந்துதுயர் தீர்த்திடவே, மாதவத்தோர் வாடா
அரண்மனையிற் கொலுவிருக்கும் அருமந்த சீர்த்தி
அருந்தவனை அணுகாத அறிவென்ன அறிவே!
அறக்காந்தி சேரறியா அறிவென்ன அறிவே!! ௧௦

# 9. ஆடாமோ ஊசல்

பாடிய தேதி :—ஆங்கிரச ஆவணி கசு உ

தேர்ந்த அறந்தாங்கு செய்ய தமிழ்ப்பாவால் ;
சாந்த குணம்படைத்தோன்! சபர்மதிவாழ் எம்மான் !
வேந்தர் விறற்படையும் வெறுங்கை கொடுவீழ்த்தும்
காந்தி கழல்பாடி ஆடாமோ ஊசல் !
கருணைக் கழல்பாடி ஆடாமோ ஊசல் ! க

பாகு பொருவுறும் பசிய தமிழ்ப்பாவால் ;
மாகந் தனைப்போர்த்த மாண்குணத்துக் காந்தி !
போகந் துறந்தபெரும் புனிதன் ! புகழாளன் !
ஏகன் எழில்பாடி ஆடாமோ ஊசல் !
எங்கோன் எழில்பாடி ஆடாமோ ஊசல் ! உ

கற்றைப் புகழ்சேர்ந்த கனிந்த தமிழ்ப்பாவால் ;
இற்றைப் படியைநனி ஈடேற்ற வந்த
செற்றந் தவிர்ந்ததிருச் சீராளன் காந்தி !
ஒற்றைக் கதர்பாடி ஆடாமோ ஊசல் !
ஒண்மைக் கதர்பாடி ஆடாமோ ஊசல் ! ௩

கொள்ளை நலமார்ந்த கொஞ்சு தமிழ்ப்பாவால்;
அள்ளி உயர்அறத்தை அவனி நனிவாழக்
கிள்ளைக் கனிமொழியில் கிளத்தும் அருங்காந்தி !
வள்ளல் வளம்பாடி ஆடாமோ ஊசல் !
மன்னன் வளம்பாடி ஆடாமோ ஊசல் ! ச

திரட்டி வடித்தசுவைச் சிறந்த தமிழ்ப்பாவால்;
மருட்டு புலன்வென்ற மாகாந்தி ! மண்ணிற்
புரட்டும் உருட்டுமறப் புக்கொழிய ஆழி
உருட்டும் காம்பாடி ஆடாமோ ஊசல் !
உதவுங் காம்பாடி ஆடாமோ ஊசல் ! ரு

அருமை அழகிளமை ஆனநலன் யாவும்
பெருகும் இனித்தசுவைப் பெரிய தமிழ்ப்பாவால்;
உரிமை தனைப்பெறவே உழைக்கும் உயர்காந்திப்
பெரியோன் பெயர்பாடி ஆடாமோ ஊசல் !
பெம்மான் பெயர்பாடி ஆடாமோ ஊசல் ! சு

மருவு கொழுநொழில் மழைக்கை வளைக்கையால்
ஒருவா வகைபிடித்தே ஒப்பில் தமிழ்ப்பாவால்;
பொருவார் புவியிலிலாப் புனிதன் அருங்காந்தி !
ஒருவன் திறம்பாடி ஆடாமோ ஊசல் !
உண்மைத் திறம்பாடி ஆடாமோ ஊசல் ! எ

சினவேல் விழியாடத் திகழ் முத்தம் சிந்தக்
கனிவாய் அமிழ்தொழுகக் கன்னித் தமிழ்ப்பாவால் ;
இனிய மொழிபகரும் எந்தைசீர் ஏய்ந்த
அணியார் அறம்பாடி ஆடாமோ ஊசல் !
ஐயன் அறம்பாடி ஆடாமோ ஊசல் ! அ

எம்மை உலகத்தும் ஈடில் தமிழ்ப்பாவால் ;
நம்மை உயர்த்துதற்கு நானிலத்தில் நண்ணினோன் !
அம்மை அரசுபெற அருளு பெருங்காந்தி !
செம்மைச் செயல்பாடி ஆடாமோ ஊசல் !
திண்மைச் செயல்பாடி ஆடாமோ ஊசல் ! கூ

ஆடாமோ ஊசல் ! அருமைசெறி தமிழ்ப்பாப்
பாடாமோ ! பாடிப் பரவாமோ ! பண்பிற்
கூடாமோ ! கூடிக் கூர்ஜரனைக் கூறி
ஆடாமோ ! பாடி ஆடாமோ ஊசல் !
அந்தணன்சீர் பாடி ஆடாமோ ஊசல் ! க0

# 10 தோழிப் பேச்சு

## ஆசிரியத் தாழிசை. வினாவிடை

பாடிய தேதி :—ஆங்கீரச ஆவணி கஎ-௳

அன்பு கயிறு அவனிபிணி காந்தி
என்பு நெகிழ இனியஉரை பகரும்
நம்பன் புகழ்பாடி ஆடாமோ! தோழீ! க

நம்பன் புகழ்பாடி நாமடைவ தென்னே!
இம்பர் உலகியற்கை அறியாயோ ஏடி!
வம்பே அவன்பெயரை வழுத்துதலும் தோழீ! உ

வம்பின் பொருள்மணமே! வழுத்தியது வாய்மை!
செம்ப வளவாய்நாம் திறந்தவனைப் பாடின்
உம்பர் நமைமதிப்பர் உறுதியடி தோழீ! ஙு

உறுதி கடைப்பிடித்த ஓாடை ஆண்டி
விறலா யிடும்பையே மேவுமவன் பின்னே
உறின்இவ் உலகின்பம் ஏதடியோ! தோழீ! ச

ஓாடை ஆண்டியையே உலகதனில் விரிந்த
பாராள்வோர் என்போரும் பரவியவன் தன்னைத்
தீராச்சீர் செய்தகதை கேட்டிலையோ! தோழீ! ரு

தீராச்சீர் என்னே! சிறைபிடித்தார் அக்கணமே!
தோராதார் செய்திட்ட சிறப்பின் பொருள்தானென்!
சீரானைச் சேர்ந்திடிலோ சிரமமே! தோழீ! சு

அன்னை விலங்கறுக்க அரியபணி கொண்ட
மன்னன் தனைத்தொடர்தல் மகிழ்வோ! வருத்தமோ!
என்ன பொருளடிநீ இயம்புரைக்குத் தோழீ! ௭

பொருள்நீ அறியாயோ! புவியின்பம் வேண்டின்
அருளும் அவன்சீர் அடிச்சுவடு பற்றி
இருளு சிறைகிடக்க இயலுமோ! தோழீ! ௮

வேற்றூர் அரசதனில் விளையுமோ இன்பம்!
ஏற்கா மொழிபகர்தல் என்னேடி! ஆட்சி
ஏற்காமுன் இன்பம் ஏதடியோ! தோழீ! ௯

அம்மா சிறைத்துயரும் அறிவிலிகள் கையடியும்
நம்மாற் பொறுக்கரிது! நாடரசு பெற்றால்
சும்மா நுகரலாம்! துன்பமிலைத் தோழீ! ௧0

காந்தி மிகமதிக்கும் கத்தருடை கட்டுவாய்!
மாந்த ருயாநல வழிபதுவென் றுனணை
ஏந்தும் எழில்வாய்ந்த எனக்கினிய தோழீ! ௧௧

போடி!யுன் கத்தர் பொறுக்குமோ! பூநுண்
வாடும் அருமருங்குல்! மாயம்நீ சொல்வதெல்லாம்!
ஏடி! இடையொடியின் யார்பொறுப்புத் தோழீ! ௧௨

# 11 ஏர்வாடாக்கோவில்

## திருத்தாண்டகம்

பாடிய தேதி :—ஆங்கீரச ஆவணி கஅ-௨

பாரதத்தாய் அருமந்த பாலன் கண்டாய்!
பண்டைவாழ் வவள்பெறற்குப் பகரொணுத!
ஆரஞரே இன்பமென அடைந்தான் கண்டாய்!
அவனியெலாம் நனிவாழ அருள்வான் கண்டாய்!
பேரறிவு படைத்ததனிப் பெரியோன் கண்டாய்!
பிறர்க்கெனவே வாழுபெருந் தகையோன் கண்டாய்!
ஏருழவே என்தொழிலென் றிசைப்பான் கண்டாய்!
ஏர்வாடாக் கோவிலுறை எம்மான் தானே! க

புத்திரிபாய் பெற்றெடுத்த புனிதன் கண்டாய்!
போர்ப்பந்தர் பிறந்தருளும் புகழோன் கண்டாய்!
மெத்துபுகழ்ச் சபர்மதியில் மேயோன் கண்டாய்!
வேற்றரசை வேர்கல்ல வல்லான் கண்டாய்!
வித்தகர்க்கெல் லாந்தலைமை பூண்டான் கண்டாய்!
மெய்த்திருவா வெந்துயரே கொண்டான் கண்டாய்!
எத்தரையும் ஈடெவரும் இல்லான் கண்டாய்!
ஏர்வாடாக் கோவிலுறை எம்மான் தானே! உ

மாதவத்துக் கஸ்தூரி மணாளன் கண்டாய்!
மாண்டகுணம் அத்தனையும் வாய்ந்தான் கண்டாய்!
தீதுபுரி மாக்களுமே திருந்த நீதிச்
சீரறத்தை உலகறியச் செய்வான் கண்டாய்!
போதம்வளர் புந்தியினார்க் கணியன் கண்டாய்!
பொல்லாத மாந்தர்க்குச் சேயான் கண்டாய்!
ஏதருமை என்னவினை செய்வான் கண்டாய்!
ஏர்வாடாக் கோவிலுறை எம்மான் தானே! ௩

சொல்லாருஞ் செம்மேனித் தோன்றல் கண்டாய்!
சுக்கிலவில் புரட்டாதி பதினெட் டாநாள்
எல்லாரும் இன்படையப் பிறந்தான் கண்டாய்!
என்னனையார் இடர்களைந்தே எடுத்தாட் கொண்ட
நல்லார்கள் தினம்வணங்கும் நம்பன் கண்டாய்!
நற்றவத்தால் அவனையடை பேறு பெற்ற
இல்லாரும் கஸ்தூரி தோழன் கண்டாய்!
ஏர்வாடாக் கோவிலுறை எம்மான் தானே! ௪

மக்களன்று வகுத்தபல சமய பேத
மாக்கடலை நனிதுருவி; மணியே போன்ற
மிக்கசெயற் பேரறத்தை உலகம் ஏற்க
விரித்துரைக்கும் மேதகைகொள் ஞானி கண்டாய்!
பக்கமுளார் இவனின்ன மதத்தான் என்று
பளிச்சென்று காண்பதற்குப் புறத்தே தீட்டும்
எக்குறியும் திருநெற்றி யிடாதான் கண்டாய்!
ஏர்வாடாக் கோவிலுறை எம்மான் தானே! ௫

மன்னவர்க்கும் அஞ்சாத வலியோன் கண்டாய்!
　　மகாத்மனெனும் புகழ்பூண்ட வள்ளல் கண்டாய்!
அன்னைதிருப் பணியேற்ற அதனால் ஐயோ!
　　அருள்வடிவத் திருமேனி எழில்வ ருந்தப்
பன்னரிய துன்பமெலாம் வலிய ஏற்றுப்
　　பன்னெடுநாட் சிறையிருந்த பரமன் கண்டாய்!
என்னுளத்தே குடியேறி யிருந்தான் கண்டாய்!
　　ஏர்வாடாக் கோவிலுறை எம்மான் தானே! ௬

ஓங்குகடல் உலகினுள உயர்ந்தோர் எல்லாம்
　　உலகினுக்கே ஒருவனிவன் என்னும் மேன்மைப்
பாங்கதனைப் படைத்திட்டோன் கண்டாய்! ஆனால்;
　　பாரினுயர் நாகரிகர் தாமே என்னும்
ஆங்கிலத்தார் அரசதனில் குற்றம் செய்யும்
　　அவருறையும் சிறைக்கறுப்புக் குல்லாய் கண்டாய்!
ஏங்குகின்ற ஏழையர்பங் காளன் கண்டாய்!
　　ஏர்வாடாக் கோவிலுறை எம்மான் தானே! ௭

உள்ளத்தாற் பொய்யாதே ஒழுகி ஒரும்
　　உலகறிஞர் உள்ளமெலாம் உள்ளான் கண்டாய்!
கள்ளத்தார் காணரிய கடலான் கண்டாய்!
　　கருதரிய பெருங்குணத்துக் காந்தி கண்டாய்!
பள்ளத்தே பாய்நீர்போல் அறத்தை இந்தப்
　　படிநிறையப் பாய்ச்சுவோன் கண்டாய்! பாபம்
எள்ளத்தீ வினையறுக்கும் ஏந்தல் கண்டாய்!
　　ஏர்வாடாக் கோவிலுறை எம்மான் தானே! ௮

தென்னாப்பி ரிக்காவில் உரிமைக் காக்ச்
சிறையிருந்தான்! பல்லுடையும் பட்டான் கண்டாய்!
அந்நாளில் எங்களரு் தமிழர் செய்த
அரியபணி ஏற்றருளும் அண்ணல் கண்டாய்!
ஒன்னார்கள் கண்டஞ்சும் ஒற்றைக் கத்தர்
உடுத்தாடை பலசுமக்கும் ஓரார் நாட்டும்
அல்நாட்டி மீண்டபெரும் எழிலோன் கண்டாய்!
ஏர்வாடாக் கோவிலுறை எம்மான் தானே! ௯

நமையடக்க இராணுவமே துணையாக் கொண்ட
நம்நலமே நாடிநமை ஆள்வோர் என்போர்
தமையுடைக்கச் சத்தியமே படையாக் கொண்டு
தனிப்பெரிய போர்வகுத்த தக்கோன் கண்டாய்!
நமைப்புரக்கும் மோகனப்பேர் நல்லோன் கண்டாய்!
நற்பொருளெ லாமொன்றாத் திரண்டான் கண்டாய்!
இமயமுதல் குமரிக்கோர் மன்னன் கண்டாய்!
ஏர்வாடாக் கோவிலுறை எம்மான் தானே! ௧௦

# 12. சபர்மதி

## திருத்தாண்டகம்.

பாடிய தேதி :—ஆங்கிரச ஆவணி ௧௬-௨

போறிவு முகப்பொலிவிற் றோன்றும் தோன்றும் !
பெரியதிரு மனமுறையில் தோன்றும் தோன்றும் !
வீரமுயர் பெருஞ்செயலில் தோன்றும் தோன்றும் !
மேதகவு யாவினுமே தோன்றும் தோன்றும் !
ஏரொழுகு செம்மேனி இலங்கித் தோன்றும் !
இனியகதர் உடையொன்றே இடையில் தோன்றும் !
போராண்மை புவிவியக்கும் புகழில் தோன்றும் !
பூவிலுயர் சபர்மதியெம் புனிதனார்க்கே. ௧

கண்ணும் கனிந்தஉளம் தோன்றும் தோன்றும் !
கருணைபொழி இருவிழிகள் தோன்றும் தோன்றும்!
எந்நாடும் புகழுமருந் தோற்றம் தோன்றும் !
இன்னமுதை உகுத்திடுசொல் எதிர்ந்து தோன்றும்!
ஒன்றுமை அச்சுறுத்தும் ஒழுக்கம் தோன்றும் !
உருட்டுகின்ற ராட்டினொலி ஓங்கித் தோன்றும் !
பொன்னுருப் திருமேனி பொலிந்து தோன்றும் !
பூவிலுயர் சபர்மதியெம் புனிதனார்க்கே. ௨

அன்றலர்ந்த தாமரைபோன் முகமும் தோன்றும் !
அதன்னடுவே அமுதருளும் இதழும் தோன்றும் !
மின்தயங்கு வெண்முத்தம் விளங்கித் தோன்றும் !
மென்முறுவல் வீழ்ந்தபல்லின் இடையே தோன்றும் !
மன்றல்புரி கஸ்தூரி மருங்கு தோன்றும் !
மாதேவ தேசாயும் அருகே தோன்றும் !
பொன்தயங்கு புகழ்மேனிப் பொலிவு தோன்றும் !
பூவிலுயர் சபர்மதியெம் புனித னார்க்கே. ௩

மெய்ம்மணக்கும் செம்பவளத் திருவாய் தோன்றும் !
மேலைநாள் முனிவர்தவ வடிவே தோன்றும் !
கய்பிலுயர் நூல்தோன்றும் வட்டம் தோன்றும் !
கத்தருடை முழங்காற்கு மேலே தோன்றும் !
மெய்யினது தூய்மையெலாம் விளங்கித் தோன்றும்
விண்மூடு விரிந்தபெரும் புகழும் தோன்றும்!
பொய்வளரா மனத்தடியார் புடையே தோன்றும் !
பூவிலுயர் சபர்மதியெம் புனித னார்க்கே. ௪

நாவாழப் புலவர்புகழ் வடிவு தோன்றும் !
நளினமலர் பொருவுமொளி முகமும் தோன்றும் !
மேவாரை வீழ்த்துகுறு நகையுந் தோன்றும் !
மெல்லமிழ்தம் ஒழுகஉரை தருநாத் தோன்றும் !
ஓவாதே ராட்டுரோட்டு கையும் தோன்றும் !
ஒருபெரிய கதராடை இடையும் தோன்றும் !
பூவாழ நடந்தருளும் அடியும் தோன்றும் !
பூவிலுயர் சபர்மதியெம் புனித னார்க்கே. ௫

போராற்றல் படைத்ததனிப் பெருமை தோன்றும்!
போறிவும் பெருங்குணமும் பிறங்கித் தோன்றும்!
பாரேத்தும் அரியஉயர் கொள்கை தோன்றும்!
படிறின்மை கபடமற்ற பேச்சில் தோன்றும்!
நாராற்றும் மக்களுய நல்ல வாய்மை
நாகரிகம் தண்மையிவை படையாக் கொண்ட
போராற்றல் புவிவியக்கத் தோன்றும் தோன்றும்!
பூவிலுயர் சபர்மதியெம் புனித ணர்க்கே கூ

திருமுகத்தா மரைதோன்றும் அதிலே பூத்த
செங்கனிவாய்ச் சேதாம்பல் பூவும் தோன்றும்!
கருணைவிழிக் கருங்குவளை இரண்டு தோன்றும்!
கனிந்தசுவைத் தேன்பிலிற்றும்முல்லை தோன்றும்!
பெரியஇரு காதலப்பங் கயங்கள் தோன்றும்!
பெருமைதரும் அடிக்கமலத் துணையும் தோன்றும்!
பொருவரிய பூமேனி பொலிந்து தோன்றும்!
பூவிலுயர் சபர்மதியெம் புனித ணர்க்கே. எ

அக்கமதில் அருள்விளங்கித் தோன்றும் தோன்றும்!
அகம்புறமும் அருந்தூய்மை தோன்றும் தோன்றும்!
எக்கணமும் புன்சிரிப்பே இலங்கித் தோன்றும்!
இனிமைதரு செய்யவாய் எழிற்சொல் தோன்றும்!
பக்கமெலாம் மெய்யடியார் கூட்டம் தோன்றும்!
படிமுழுதும் நனிவாழும் பான்மை சூழும்
பொக்கமிலாத் திருவுளமே தோன்றும் தோன்றும்!
பூவிலுயர் சபர்மதியெம் புனித ணர்க்கே. அ

சிறியதொரு கத்தர்ப்பை பக்கம் தோன்றும் !
தினம்படிக்கும் ஒருகீதை அதனுள் தோன்றும் !
மறையெழுதும் ஒருசிறிய குச்சி தோன்றும் !
வனப்புயர்ந்த இராட்டொன்று திருமுன் தோன்றும்!
கறையெதுவும் இல்லாத கத்தர் மாலைக்
கயிற்றுடனே கடிகாரம் ஒன்று தோன்றும் !
பொறியடக்கி ஆண்டபெரும் தகைமை தோன்றும் !
பூவிலுயர் சபர்மதியெம் புனிதனார்க்கே. ௯

பாக்கியமார் உலகமெலாம் வாழ நீதி
பகாரிய பவளவாய் தோன்றும் தோன்றும் !
ஊக்கம்நிறை ஓயாத சிரிப்பு மூரல்
உடைவினிடை ஒளிவீசி ஓங்கித் தோன்றும் !
மூக்கிலணி காம்புடைக்கண் ணாடி தோன்றும் !
மொய்ம்பெழிலார் சிறியதவ வடிவு தோன்றும் !
போக்கரிய தொல்லறத்தின் புதுமை தோன்றும் !
பூவிலுயர் சபர்மதியெம் புனிதனார்க்கே. ௧௦

# 13. கடவுளை வேண்டல்.

---

பாடிய தேதி :—ஆங்கீரச புரட்டாதி ௧-௳

அறுசீர் விருத்தம்.

உலகமெலாம் படைத்தாய்நீ! உலகமெலாம்
உள்ளாய்நீ! உலகில் உள்ள
அலகில்பொருள் அனைத்தையுமே ஆக்கினை நீ!
உலகுயிரை ஆட்டு விக்கும்
புலமுழுதும் நீ!என்பது உண்மையெனில்
கடவுளே! பொருவில் உன்னல்
தலைமகனெங் காந்தியெனும் தண்ணளியின்
உயிர்புரக்கத் தவறி டாதே. ௧

ஆற்றலென்பர்; சக்தியென்பர்; வலிமையென்றும்
அறைந்திடுவர்; அன்னே! உன்னை;
ஏற்றமிழி வில்லாமல் எல்லோரும்
சமம்பெறவே எண்ணி, ஈடில்
சாற்றரிய பெருமையுடைத் தன்னுயிரும்
கொடுப்பதற்குச் சமைந்தான் காந்தி!
போற்றியவன் உயிர்காவா தொழிந்துபழி
பூணாதே; பொருவில் தாயே! ௨

"உடலீவேன்; பொருளீவேன்; உயிரினையும்
ஈந்திடுவேன்;" என்று பல்லோர்
மடமடென வழுத்திடுவார் வாயதனால்;
செய்கைக்கு வாரார் அன்னார்.
திடமுடைய சீர்க்காந்தி செப்புமொழி
தப்பாதான்; தெய்வ தங்காள்!
உடனெழுந்தவ் உத்தமனின் உளமுடித்தே
உயிர்காப்பீர்! உயிர்காப் பீரே! ௫

மண்ணில்நிகர் இல்லாத பாரதநல்
மாதாவே! மணியே போன்ற
எண்ணில்புகழ்ச் சான்றோரை ஈன்றனைபண்
டானாலும் ஈடி லாத
திண்ணமுடைக் காந்தியைப்போல் பெற்றனையோ!
மூடர்புரி தீண்டா மைக்கா
அண்ணலுயிர் விடநீதான் ஆற்றுவையோ!
தாயே!நீ அருளில் வாயோ? ௬

பொறுமைதனில் நிகரில்லாய் நீயென்பர்
புலவரெலாம்; பூமி தேவி!
அறியாமைப் படுகுழியில் வீழ்ந்திடுவோர்;
பாபங்கள் அனைத்தும் செய்வோர்;
குறையாளர் யாவரையும் சுமக்கின்ற
நீ,எங்கள் கோதி லாத
இறைகாந்தி பேரொளிகொள் சிற்றுருவப்
பொறையிழக்க இசைவாய் கொல்லோ! ௭

நிலவருளும் தண்சுடரே! நிலம்விளக்கும்
செங்கதிரே! நீவிர் எண்ணில்
பலகோடி நாளாவிவ் உலகறிவீர்;
என்றேனும் பாந்த இந்தத்
தலமதனில் தண்ணளியார் காந்திநிகர்
சான்றோனைக் கண்ட துண்டோ!
உலகறிய உரைத்தன்னான் உயிர்காப்பீர்!
தருணமிது! உறங்கல் செய்யீர்! ௬

மாநிலமே! வாளெரியே! வருகாற்றே!
வயங்குபுகழ் வானே! நீரே!
மேனிலத்தின் வரையுயர்ந்து விளங்குகின்ற
பெருமலைகாள்! மேலோர் போற்றும்
கானிலுறை பறவைகாள்! கடுவிலங்கீர்!
பெருமரங்காள்! ககனம் வாழும்
மீனினங்காள்! இருசுடர்காள்! காந்தியுயிர்
காப்பதற்கு மேவீர் கூடி! ௭

அம்பலத்தே ஆடிடுவாய்; அரங்கத்தே
தனிகிடப்பாய்; என்பார் உன்னை!
நம்பிடுவார் துயர்களைவாய் என்றிடுவார்;
நல்லடியார் உள்ளம் என்னும்
செம்பதுமக் கோவிலுறை தேவே! தீத்
தீண்டாமை வேர்அறுக்கும்
எம்பெருமான் காந்தியெனும் இந்தியர்நல்
உயிர்புரப்பாய்! ஈசா! ஈசா! ௮

காந்தியுயிர் காவேயேல், கடலுலகம்
இன்றுவரைக் கண்டிடாத
சேர்ந்தபழி பூண்பாய்நீ! தேவே!'நீ
இல்லை'யெனச் செப்புகின்ற
மாந்தரும்'நீ இருக்கின்றாய்' எனத்தெளிய
மனங்கொண்டாய் ஆனால், எங்கள்
சாந்தகுணப் பெருங்கடலைத் தலத்திலுயர்
தனிப்பொருளைக் காப்பாய்! காப்பாய்! ௯

உலகுயிர்கள் தொறுங்கலந்தே உறைகின்ற
ஒருபொருளே! ஒருவன் இந்தத்
தலமதற்கே எனும்பெரியான்; சத்தியமே
கமழ்வாயான்; சாந்தம் என்னும்
அலகில்குணக் குன்றனையான்; அருளன்றி
அறியாதான்; அறமே செய்வான்;
கலைமுழுதும் நனியுணர்ந்தான்; காந்தியவன்
ஆருயிரைக் காவாய்! காவாய்! ௧௦

குறிப்பு:—கடவுளை வேண்டல் என்னும் தலைப்பின் கீழுள்ள இப்பாக்கள் காந்தியடிகள், தீண்டாதார் எனப்படுவோர் தனித்தொகுதி முறை ஒழிப்பான் கருதி உண்ணாவிரதங்கொண்டு உயிர்விடவும் முன்னின்றதை முன்னிட்டுப் பாடப்பெற்றவை.

# 14. உண்ணாவிரத முடிவு

பாடிய தேதி:—ஆங்கீரச புரட்டாசி கரு-உ.

அறுசீர் விருத்தம்.

பெரியோர்கள் திருவுள்ளம் பிழையாதெவன்
றுலகுணரப் பிறங்கக் காட்டும்
அரியோனே! 'தீண்டாதார் பிரிவுமுறை
அகற்றீரேல் வாழேன்' என்று
உரைகூறி உண்ணாமை மேற்கொண்டு
நாடெல்லாம் ஒன்று கூடிச்
சரிதானென் றிடவெற்றி சார்காந்தி!
பல்லாண்டு தலத்தில் வாழ்க! க

"செயற்கரிய செய்வர்பெரி யா"ரென்னப்
புலவர்பிரான் செப்பும் உண்மை
மயக்கமற உலகுணரக் காட்டினை!
மாகாந்தி! மண்ணின் மீது
தயக்கமின்றிக் கொள்கைக்காச் சத்தியங்கொண்
டுயிர்விடவும் சமைந்த சான்றோர்
சயக்கொடிநாட் டிடுவரிதிற் சற்றுமையம்
இல்லையெனல் சரியே யன்றோ? உ

அரியவினை யாதொன்றும் அவனியிலே
    நினக்கில்லை! ஐயா! யாரும்
கருதரிய காரியத்தைக் கடிதினில்நீ
    முடித்திட்டாய் காந்தி வள்ளால்!
பெரியஅர சாங்கத்தார் பெரிதாய்ந்து
    முடித்தசெயல் பிளப்ப தென்ப
தரிதரிது! அறவடிவாய் அவதரித்த
    நினக்கன்றி யார்க்கும் அம்மா! ௩

யார்வல்லார் ஆங்கிலத்தார் செய்தமுடி
    வதைமாற்ற ; அறமே பூண்ட
போர்வல்லாய்! புண்ணியனே! போர்ப்பந்தர்
    பிறந்தருளும் புனித வாழ்வே!
பார்வல்ல மன்னவர்க்கும் பன்னரிய
    செய்கைதனைப் படையி லாத
நார்வல்ல சிற்றுருவம் நண்ணுவித்தல்
    காட்டினைநீ! நற்பு விக்கே! ௪

மண்முழுதும் தனியாளும் மன்னவர்க்கும்
    ஆகாத வலிமை யெல்லாம்
உண்ணிறைய ஒளிபெருக்கி ஊனொடுக்கிப்
    புலனையெலாம் ஒல்லும் ஆற்றல்
கண்ணடக்கி மற்றவர்க்கே கடனுலகில்
    வாழுபெருங் கவின மைந்த
எண்ணறிஞர்க் கெளிதெனஇன் றெல்லவர்க்கும்
    காட்டினைநீ! எந்தாய் காந்தி! ௫

தொடத்தகார் எனச்சொல்லும் நம்மரிய
துணைவர்தனின் தொகுதி நாட்டைக்
கெடுத்திடுமச் சோதரரைக் கீழ்நிலைநின்
றுயர்த்தாது கீழ்மேல் என்னும்
மடத்தையறப் போக்காது வளர்த்திடுமேல்
மேலுமென மனத்துட் கொண்டு
திடத்துடனல் உயிர்விடவும் துணிந்துநின்று
சிறந்தவெற்றி சேர்ந்தாய் காந்தி! சு

வாய்கொண்ட மட்டுந்தீண் டாதார்க்கே
வாழ்கின்றோம் என்று பல்லோர்
பேய்கொண்டார் போல்மேடைப் பேச்சிடுவார்!
செய்கையெனில் பின்னே போவார்!
தாய்கொண்ட தளைநீக்கத் தனிச்சிறையைச்
சார்ந்தோனே! தீண்டா தார்க்கா
நீகொண்ட செயல்மறைக்க நிலத்திலினி
எவர்க்கொண்ணும்? நேயக் காந்தி! எ

கோயிலிலே நுழையுரிமை தீண்டார்க்கு
வேண்டுமெனக் கூட்டம் கூடி
வாயதனால் வகுத்துரைப்பார்! மாபெரிய
தீர்மானம் வரைவார்! ஆனால்,
ஏயசெயல் ஒன்றாற்றார்! இடரொன்றால்
ஓடிடுவார்! ஏந்தால்! நின்போல்
நேயமுளார்க் கல்லாமல் நேர்வெற்றி
பெறலெளிதோ? நீள்சீர்க் காந்தி! அ

நினைக்கரிய செயலிந்த நிலத்தினிலைப்
பிறர்வாழ்வே நிதம்வி ரும்பென்
மனக்கினிய மாமணியே! மாத்துமப்பேர்
வாய்த்தபுகழ் வள்ள லே!நம்
வனப்புடைய பாரதத்தாய் மணிமுடிபெற்
றரசாள்நாள் சேணில் இல்லை
தனக்கெனவா ழார்நினைப்புச் சமைந்திடுதல்
சாதமிதில் தடையும் உண்டோ! ௯

மண்ணனைத்தும் அறம்பெருகி மக்களெலாம்
வாழுதற்கும் மண்மக கட்குக்
கண்ணனைய பாரதத்தாய் கைத்தளைபோய்ப்
பல்லடைநாட் கவின டைந்தே
எண்ணுடைய முடிசூடி இனியஅர
செய்துதற்கும் இந்நி லத்தில்
தண்ணளியே சார்ந்தொழுகு தனிக்காந்தி!
பல்லாண்டு தழைத்து வாழ்க! ௧௦

குறிப்பு:—உண்ணா விரதத்தை வெற்றிகரமாக முடித்த பிறகு இப்பதிகம் பாடப்பட்டது.



# 15. சிறை வாழ்வு.

பாடிய தேதி:—ஆங்கிரச புரட்டாதி உஉ வ

### எண்சீர் விருத்தம்.

பெற்றெடுத்த தாய்நாட்டின் தொண்டு பூணல்
பெரியகடன் ஆனாலும், பெரியோய்! காந்தி!
நற்றவம்செய் நீதலைமை ஏற்றுப் பண்டை
நாளிலிலாப் புதுமுறையில் நடத்தாய் என்னில்;
கற்றவரும் மற்றவரும் இன்ப வாழ்க்கைக்
கரைகண்ட திருவினரும் சிறைக் கூடத்தைப்
பற்றியிருந் தொழுகியங்குப் பற்பல் துன்பம்
பட்டடங்கிக் கிடத்தலிந்தப் பாரில் உண்டோ! க

எத்தரையும் ஈடில்லா இந்த நாட்டை,
ஏனோர்கை மீட்டல்கடன் எனினும், ஐயா!
மெய்த்தலைமை நீபூண்டு சமர்மு கத்தில்
மேலவனே நின்றுதனி நடத்தாய் என்னில்;
மெத்தையினில் கண்வளர்ந்த மேலோர் எல்லாம்
மிதிப்பதற்கும் தகுதியிலாக் கயிற்றுப் பாயில்
கைத்தலைக்கு வைத்துறங்கும் காட்சி ஒன்று
கனவினிலும் காண்பதுவோ காந்தி வள்ளால்! உ

மட்டில்புகழ்ப் பாரதத்தாய் விலங்கு போக்கல்
மக்கள்கடன் ஆனாலும், வள்ள லே! நீ
கிட்டி, யறங் கொண்டதொரு போர்வகுத்து, இக்
கிழப்பருவம் தனில்முகத்து நில்லாய் என்னில்;
கட்டிலின்மேல் பூவணையில் தென்றல் உண்டு
கவினுயர்ந்த மாளிகையில் துயின்றோர் எல்லாம்
எட்டடிகொள் சிற்றறையிற் பூட்டப் பட்டே
இருள்கிடத்தல் நிலத்துண்டோ ஏந்தால் காந்தி! ௩

கொத்தடிமை நீக்குதற்கு முயலல் இந்தக்
குவலயத்தில் எல்லவர்க்கும் கடனென் றாலும்,
புத்திரியாய் பெற்றெடுத்த புனிதக் காந்திப்
புண்ணியனே! நீதலைமை பூணாய் என்னில்;
புத்துருக்கு நெய்யன்றி வேறு காணாப்
பொருவரிய பெருவாழ்க்கை பூண்டோர் எல்லாம்
கைத்துணையெண் ணெயுமறியா மிடிகூர் வாழ்வைக்
கடனாகக் கருதிடுதல் தரையில் உண்டோ! ௪

சாற்றரிய பெருமையுடைத் தாய்வி லங்கைத்
தகர்த்தல்கடன் ஆனாலும், சான்றோய் காந்தி!
ஆற்றல்நிறை அருந்தவமே உருவெ டுத்த
அந்தணா! நீ அமர்த்தலைமை அடையாய் என்னில்;
பாற்கடலும் தயிர்க்கடலும் பருகி வாழ்ந்த
பாங்குடைய மக்களெலாம் பரிய துன்பம்
ஏற்றெளிய துளிமோரும் அறியா வாழ்க்கை
இசைந்திடுதல் நினைப்பதற்கும் எளிய தாமோ! ௫

மகவுபல ஈன்றுபெரும் புகழ டைந்த
மாதாவின் துயர்களைதல் கடனென் றாலும்,
தகவுடையாய்! சபர்மதியெம் தவமே! காந்தித்
தண்ணளியே! தலைமைநீ தாங்காய் என்னில்;
வகைவகையாச் சுவைமிக்க உணவ ருந்தி
வாழ்ந்தவுயர் மக்கள்பலர் சிறைக்கூ டத்தில்
மிகவெளிய புளிச்சாற்றில் குழைத்துச் சோற்றை
விழுங்கியுயிர் வாழ்ந்திடுதல் உண்டோ! உண்டோ!! ௬

சிறைப்பட்ட தாய்நாட்டை மீட்டல், மக்கள்
சிறந்தகடன் ஆனாலும், சீரார் காந்தி!
அறப்பெரிய அமரொன்றை அரிதிற் கண்டே
அதன்தலைமை நீபூணாய் ஆனால்; ஐயா!
குறிப்பறிந்து பணியாற்ற அருகே காத்துக்
கொண்டுநிற்கும் வினையாட்கள் பலரை ஆளும்
பொறுப்புடையார் சிறைநடத்தும் கடமை பூண்ட
புன்மனிதர் கீழிருத்தல் புவியில் உண்டோ! ௭

முன்னுலகின் முடிமணியாய் மிளிர்ந்த தாயின்
மூண்டபிணி போக்கிடுதல் கடனென்றாலும்,
தன்னிகர்நீ தலைநின்று நடத்தாய் என்னில்;
சபர்மதிவாழ் தவமுடைய காந்தி வள்ளால்!
மன்னவர்போல் பெருவாழ்வு வாழ்ந்துயர்ந்த
மதிநிறைந்த புகழுடைய மக்கள் எல்லாம்
புன்சிறையுட் செயலிழந்து துன்பம் பூண்டு
பூட்டறையிற் கிடந்திடுதல் பூவில் உண்டோ! ௮

4

அருமையுடை அன்னைக்கு வாழ்வு நல்கல்
அறிஞர்கடன் ஆனாலும், அவனிக் கெல்லாம்
பெரியவனென் றுலகுபுகழ் பெரியோய்! காந்தி!
பெருந்தலைமை பெற்றேநீ பிறங்காய் என்னில்;
பிரிவறியாக் காதல்புரி துணைபி ரிந்து
பெருவாழ்வை அறமறந்து பெரியோர் பல்லோர்
இருளுசிறை எளிமையுடைச் சிறிய வாழ்வை
இனிதெனக்கொண் டிடுதலிந்தத் தலத்திலுண்டோ! ௯

பொறையுடைய இந்தியத்தாய் துயர்துடைத்தல்
புதல்வர்கடன் ஆனாலும், புலவர் போற்றும்
நிறையுடையாய் நீண்டபுகழ் நேயக் காந்தி!
நீதலைமை பூண்டுபோர் நிகழ்த்தாய் என்னில்;
கறையுடையார் தமக்காகக் காணப்பட்ட
காவலமை வறட்டுமலை சூழ்ந்த வேலூர்ச்
சிறையதனில் சிற்றறையில் இருந்து மாய
சொக்கலிங்கன் இப்பதிகம் சொல்லல் உண்டோ! ௧௦

# 16. காந்தித் திருப்புகழ்.

பாடிய தேதி :—ஆங்கிரச புரட்டாசி ௨௯-௳

தனஞ தனத்த தனஞ தனத்த
தனஞ தனத்த தனதாஞ

பெரியோய் அறத்தை உலகோர்க் கருத்து
பெருநேர் பிடித்த பெருமானே

பிழையோர் மிடுக்கை அடியோ டறுத்தல்
புரிவா னறங்கள் புகல்வோனே

தருவார் மணிக்கை யுறுதாய் விலங்கு
தகர்வான் சிறைக்குள் உறைவோனே

தனிநேர் தவத்தில் இலரே எனச்சொல்
தகுவாய் மைபெற்ற அதிதீரா

திருவே எழிற்புத் திரிபாய் பயந்த
சிறுவா புவிக்குப் பெரியோனே

திகழ்கா தலுற்றுன் னுடன்வாழ் நறுங்கஸ்
தூரிமான் சிறந்த மணவாளா

தரைகா தலிக்கும் வடிவே கருத்தில்
வளர்வாய் சகத்தின் குருநாதா

தமியேன் தனிச்செந் நெறியே செலுத்து
தவமோ கனென்னும் பெருமாளே. ௧

தான தந்தன தாஞ தஞதன
தான தந்தன தாஞ தஞதன
தான தந்தன தாஞ தஞதன தனதான

பூத லக்ஷுமியர் சீலா நமோநம
போகம் விட்டருள் நாதா நமோநம
போதம் மிக்கசெங் கோவே நமோநம புகழ்சேரும்
மாது புத்திரி பாலா நமோநம
மாத வத்துரு வாஞய் நமோநம
மாது யர்க்குடல் ஈவாய் நமோநம மணமாரும்
தீதில் கஸ்தூரி தேவா நமோநம
தேச மக்களின் சாமீ நமோநம
தீயர் தம்மையும் ஆள்வாய் நமோநம செகவாழ்வை
மோது வித்தக ஞானீ நமோநம
மூடு மெய்ப்புகழ் வாழ்வே நமோநம
மோக னப்பெயர்க் காந்தீ நமோநம பெருமாளே. ௨

தாந்தா தாத்தன தனதான

சீர்சேர் வாழ்வது நமையீன்ற
தீந்தா யார்பெற உறநாடி
நார்கூர் ஓர்பெரும் அறப்போரை
நாட்டார் சேர்வகை நனிகண்டே
தார்வேய்ந் தோர்க்களந் தனில்முன்னே
தான்போய் மாற்றலர் தவமேற்ற
ஏர்வா டாச்சிறை தனில்மேய
ஏர்சேர் காந்தியெம் பெருமாளே. ௩

தனதன தத்த தனத்த தானன
தனதன தத்த தனத்த தானன
தனதன தத்த தனத்த தானன தனதான

புலையரெ னச்சொல் லுலுத்தர் வீணர்கள்
புலையையு டைத்துப் பிறப்பி னுலுறு
புலைமைகி ளத்தல் அறுக்கு சீருறு புலவோனே
கலகல வென்னப் பலப்பல் பேசிடு
பலருறை யிந்த நிலத்தில் வீணொரு
சிலசொலு மின்றிச் செலுத்து காரியக் குருநாதா
அலைகட லுற்ற தலத்தில் யாவரும்
அருளொட றத்தை அகத்தி லேகொள
அரிதினு ரைக்கும் அறத்தின் பேருரு அடைகோவே.
மலையொடு மண்விண் அனைத்து மாறினும்
நிலைகுலை வின்றி உரத்தி னேடுறு
மனமதி வென்றும் இருக்கு மோகனப் பெருமாளே.

தானன தானத் தனதான

காதலில் ஏல அறிவாளர்
காசினி வீசு பெருங்கீர்த்தி
ஓதிட வாழும் உரவோனே
ஒருரு வாக அறம்வாய்மை
ஆதிய யாவும் திரண்டோனே
ஆதாரம் பூமிக் காவோனே
ஏதமில் காத அருங்காந்தி
ஏழைபங் காளப் பெருமாளே. ௫

தனதான தந்த தனதான தந்த
தனதான தந்த தனதான

முனைநாளு யர்ந்த முடிசூடி மண்ணின்
முழுதீட ழித்துத் தலையாண்ட

மொழியால டக்க முடியாத நன்மை
யொடுவாழ்ந்து யர்ந்த புகழ்சேர்ந்த

அனைதீங்க டைந்தின் றயலார்கை சிக்கி
அருவாழ்வி ழந்து பிணியாதி

அவமான முற்றும் அவள்கீர்த்தி மக்கள்
அடைகீழ்மை தன்னை அடியோடு

நனிபோக்கி நண்ணும் உலகோடு நல்ல
நவமாக வுற்ற நடையாவும்

நமர்தாங்கக் கட்டு தளைபோக்கி யொப்பில்
நமதாவி யன்ன தனியன்னை

இனமான செம்பொன் மணியார்ந்த ரத்ன
எழிலார்சி றந்த அரிதாங்கும்

இரும்பீடந் தன்னில் முடிதாங்கி நிற்க
இயைகாந்தி வள்ளற் பெருமாளே. சு

தான தனதன தான தனதன
தான தனதன தனதான

ஞால முழுவது நாடி யுயரிய
நாத னிவனென மரியோனே
ஞான முடையவ மான முடனம
நாடு தனையருள் உரவோனே
சீல மிதுவென ஏல உரைதரு
தேவ வினைபுரி திறலோனே
தேச விடுதலை நாடு செயலது
நீதி லறமென அறிவோனே
பாலை யமுதொடு தேனை எழிலுறு
பாவை யுறுதமி ழதையாழைப்
பாடு கிளியினை வேயி னொலியோடு
பாகை நகுமொழி பகர்வோனே
காலை யெழுமொரு சூரி யனைநிகர்
காந்தி யடியவர் பெருவாழ்வே
காத லுடையகஸ் தூரி கணவநற்
காசி னுளமுறை பெருமாளே. ௭

தனனதன தான தனனதன தான
தனனதன தான தனதான

சபர்மதியில் வாழும் அறவடிவ மான
தனிநிகரி லாத பெருமாள்காண்

தரைபுகழு சீல நிறையறிய ஞானத்
தவமுதல்வ னான பெருமாள்காண்

அபமெதுமு றாத அருளொழுகு மேனி
அமுதுகுசொல் ஆளு பெருமாள்காண்

அவனிதனில் யாரும் இணையுயர்வி லாத
அரியபணி மேவு பெருமாள்காண்

சபைமகிழப் பேசு பெருமையுடை யோரும்
தலைவணங்கு சீர்த்திப் பெருமாள்காண்

தனையுதவு நாடு தனையுயர்த்தற் காவி
தருசலிப்பி லாத பெருமாள்காண்

இபமரிக ளான எதிர்பொருத போதும்
இடிவரினும் மோது பெருமாள்காண்

இமயமலை யாதி குமரிமுனை காறும்
இருக்குமொரு காந்திப் பெருமாளே அ.

தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன தனதான

மாமல ருற்றிடு கந்தம தொத்தவர்
வாழுட லிற்செறி நல்லுயி ரொத்தவர்
மாதசை தன்னொடு மன்நக மொத்தவர் மதியாளர்
வாதுசெய் தெய்த்திடு சொற்பொரு ளொத்தவர்
மாகரும் புள்ளுறை இன்சுவை யொத்தவர்
வாளெரி கட்டையில் ஒத்தவ ரெள்ளினி லுறுமெண்ணெய்
ஆமென வுற்றவர் நன்மணி யுள்ளொளி
ஆனவர் நற்பசு தெள்ளமு திற்படு
ஆநெயை ஒத்தவர் அன்பினில் இத்தரை தனில்வாழும்
யாருநி கர்க்கலர் புன்பிரி வென்னுரை
யாதெனக் கண்டிலர் சிந்தைம கிழ்ந்துநல்
லாதர வுற்றுநல் லில்லின றந்தனில் வழுவாத
காமனை ஒத்திடு கட்டழ குற்றவர்
காதல றம்புரி நற்றவ முற்றவர்
கானம யிற்குலந் தன்னையு டைத்திடு கவினார்ந்த
காதள வுற்றக ருங்கயல் நல்விழிக்
காமர்வ ளைக்கரத் திங்களு தற்சிறு
காசணி எற்குழல் கண்டனை சொற்பகர் இளமாதர்
தாமொரு நற்றுணை தன்பிரி வெய்திநல்
தாயொடு மக்கள்சுற் றம்பிரிந் தின்பதைத்
தான்மறந் திட்டிடர்ப் பட்டிருட் புன்சிறை தனைமேவத்
தாவிலன் பிற்புரி தண்ணளி கொண்டநற்
தாய்தனை கொன்றிடு சத்யச பர்மதி
சார்தவ முற்றிடு பெற்றிநல் வெற்றிகொள்பெருமாளே. ௧

தந்தா தனந்த தந்தா தனந்த
தந்தா தனந்த தனதான

எந்தாய் சிறந்த மைந்தோ டுயர்ந்த
என்றே னுமெங்கும் இணைநோ
இந்து டுசென்ற சிந்தா வுளம்பொன்
என்று கனின்றும் இழிகங்கைப்
பைந்தார் அணிந்து செந்தா தொளிர்ந்த
பண்பா ருசிங்க அணைமீதே
பண்பா டவண்டு நின்று டமஞ்ஞை
பைங்கோ லுநந்தூர் பழனஞ்சூழ்
நந்தாய் அமர்ந்து சிந்தா குலந்துன்
பந்திங் ககன்று நவைதீர
நன்றேய்ந் தெழுந்து தன்னோர் அகன்று
நந்தா தொளிர்ந்தின் றுயர்வெய்த
வந்தாய் மணின்று நொந்தார் துலங்க
வண்டேர் அரும்புத் திரிபாயின்
மைந்தா அறங்கள் நின்றோங் கவந்த
மன்மோ கனென்னும் பெருமானே. ௧௦

# 17. திருப்பணி

யாடிய தேதி :—ஆங்கீரச ஐப்பசி ௨௨-௨

## காவடிச் சிந்து

பாரதமா தாதவத்தின்
பாக்கியமா வந்தகாந்திப்
பண்ணவன்சீர் உள்ளமதிற் கொண்டு—சீலன்
பகருமெழில் நல்லறத்தைக் கண்டு—நல்ல

பண்புடையன் னடிக்கீழ்த்
தொண்டுசெய்து நிற்பினிந்தப்
பார்புகழும் சீரியவாழ் வுண்டு—தாய்
பண்டையினும் மேம்படுதல் உண்டு. க

இந்தியர்க்கு வாழ்வளிக்க
வந்தஉயர் காந்திமகான்
இந்நிலத்தில் ஈடிலாத சீலன்—தவம்
ஏய்ந்திடுநற் புத்திரிபாய் பாலன்—துணை

என்னஇணை பேறுபெற்ற
நன்னயக்கஸ் தூரிதனை
இல்லறக்கா தலியாக்கொள் கோலன்—மறம்
எனுமரக்கன் உயிர்குடிக்கும் காலன். உ

தான்பிறந்த நாடுயரச்
சத்தியநற் காந்திமகான்
தண்ணளியே ஓருருவா வந்தான்—கடுந்
தாங்கரிய இன்னலுமு கந்தான்—புகழ்த்

தாய்பயந்த மக்களைத்தீண்
டாரெனவே ஓர்குழுவார்
சாற்றுசெயல் கண்டுமிக நொந்தான்—அவர்
தாம்புரியும் தீமைக்குளம் வெந்தான். ரு

பாங்குடைய பாரதத்தாய்
பெற்றெடுத்த காந்தியெழிற்
பாதமலர் மாமுடியிற் சூடி—அவன்
பகருமொரு போறத்தை நாடி—இந்தப்

பார்மகட்கு மணிமுடியாப்
பண்டிலங்கி இன்றுதுயர்ப்
பட்டிடும்நம் அன்னை விலங்காடி—விழும்
பரிசுபுரி வீர்விரைவில் ஓடி. சு

அன்புபொறை மெய்கருணை
அறிவுசாந்தம் புனிதநீர்மை
அத்துணையும் ஒருருவா நின்றான்—நாடு
அரசுபெறப் பெருஞ்சிறைக்குள் சென்றான்—உயர்

அன்னைபணி தன்னைவிடப்
பின்னோர் கடன்இல்லையென
ஆயுமறி ஞர்கொளந வின்றான்—காந்தி
ஐம்புலனும் நன்றடக்கி வென்றான். எ

சாந்தமொழி தான்தருவான்
சத்தியமே சாற்றிடுவான்
தண்ணளியே கொண்டஉயர் காந்தி—எங்கும்
தன்னிகரி லாப்புகழை மாந்தி—கடல்

தத்தளிப்போர்க் கரைசெலுத்தும்
சார்புணைபோல் அப்பெரியோன்
தருமறத்தை உள்ளமதில் ஏந்தி—துயர்த்
தனிக்கடலைக் கடந்திடலாம் நீந்தி. ௬

தாயரசு பெற்றுலகில்
சமநிலைமை யெய்தியரி
தாங்குமொரு போரணையைச் சார்ந்து—மணி
தங்குமொளி மாமுடியை ஆர்ந்து—பெருந்

தரைவியக்கக் கொலுவிருந்து
முன்னையினும் பன்மடங்கு
தன்பெரிய நல்லறைத்தை ஊர்ந்து—புவி
தான்புகழச் செய்திடுவீர் ஓர்ந்து. ௭

தூன்பெதுவும் மற்றவர்க்குச்
சூழலறம் அல்லவெனும்
துணிவதனால் உலகுபிணி நாரை—நிலம்
தோன்றியநாள் தொட்டிலாத சீரை—எதிர்

துன்னியடிப் போர்தடிகள்
சுக்கல்சுக்கல் ஆமளவும்
தொண்டாடி பட்டுநிற்கும் ஏரை—காந்தி
தோற்றுவித்தான் புதியதொரு போரை. ௮

முன்னம் உல கம்மதிக்கும்
	மூதறிவி னோடுயர்ச்சி
	மொய்ம்புசெறி வீரமக்கள் தம்மை—பெற்றாள்
	முதுமையுடைப் பாரதநம் அம்மை—அன்னார்

முழுப்புவியும் ஆய்ந்துபெரி
	யோனிவனென் றியாவருஞ்சொல்
	மோகனன்போல் ஆண்டதுண்டோ நம்மை—அவன்
	மூண்டஒளிப் பேர்சொலிற்போம் வெம்மை. ௯

தீண்டாமை நோயதனைத்
	தொலைப்பதற்குத் தனித்தொகுதி
	தேர்ந்தமுறை அன்றெனும்நல் லுண்மை—கண்டு
	சேருமுயிர் தந்திடநில் வண்மை—உயர்

செய்கைநனி கண்டுதெளி
	வெய்தியுல கம்முழுதும்
	செப்புமொரு காந்தியுருத் தண்மை—அறம்
	செய்பவர்க்கே அவ்வடிவம் அண்மை. ௧௦

# 18. நீண்டாமை

பாடிய தேதி :—ஆங்கிரச ஐப்பசி உரு-ல

கண்ணிப்பா.

மக்கட் பிறப்பினுளே—உடலால்
 மயங்கி மாறுகொண்டு
தக்க தகாததோரா—துயர்வு
 தாழ்வு பலகூறிப்
பக்கம் ஒருகுழுவார்—வரினும்
 பாபம் எனுமடமை
ஒக்கத் தொலைப்பதற்குக்—காந்தி
 உற்பவித் தான்புவியில் க

இந்தியத் தாய்வயிற்றில்—பிறந்த
 ஏழைச் சகோதரரைச்
சொந்த உரிமையெலாம்—இழக்கச்
 சொல்லி யடிகொடுமை
இந்தத் தரையிலிலா—திறக்க
 ஏலும் செயல்புரிய
வந்துதித் தான்காந்தி—உயிரும்
 மதியா துதவநின்றுன உ

புலையர் என்றபெயர்—கொடுத்துப்
பூவில் அவரிழிந்தோர்
நலம வர்க்கிலையெம்—பொருட்டு
நாயடி மைதவிர
இலைய வர்க்குரிமை—எனச்சொல்
இழிந்த மெய்ப்புலையர்
நிலைய ரூக்கிடவே—பிறந்தான்
நீண்டபு கழ்க்காந்தி ௩

சிறையின் உள்ளிருந்தே—அறியார்
தீண்டத் தகாரெனவே
அற்றையும் புன்மைதனை—அகற்ற
அரிய செய்கைபல
குறையி லாவகையில்—புரிந்தான்
கூர்ஜா மண்பிறந்த
நிறைத வப்பயனால்—பிறந்த
நேர்மை செறிகாந்தி ௪

கோவில் தனிற்பறையர்—எனச்சொல்
கூட்டத் தவரைவிடல்
பாவம் எனவறியார்—உரைத்துப்
பற்பல நாளாக
மேவும் அவருரிமை—பறித்து
விரட்டு தீயபெரும்
பாவ வினையறுக்கப்—பிறந்தான்
பண்ணவன் எங்காந்தி ௫

ஏமம் அமைந்தபெருஞ்—சிறையுள்
இருந்தும் தீண்டாரென்
நாமம் அமைந்திடும்—ஜனவர்
நலமே சிந்தைசெய்து
பாமரர் பண்டிதரென்—பகரும்
புற்பலர்த் தாங்குமிந்தப்
பூமி திடுக்கிடவே—காந்தி
பூண்டனன் ஓர்விரதம் ௬

இந்திய நாட்டினிலே—தனக்கு
எத்துணை செல்வாக்கென்
எந்த உலகினரும்—மலையில்
இட்டவி ளக்கினைப்போல்
சிந்தை நனிதெளியப்—புரிந்தான்
சிறைத னிலிருந்தே
நொந்திடு தீண்டாரென்—நுவல்வோர்
நோவகற் றுங்காந்தி. ௭

தீண்டா தார்பொருட்டே—நாங்கள்
செகத்திற் பிறந்தோமென்
வேண்டுமட் டும்வாயால்—விரித்து
விளம்பு வார்பல்லோர்
மூண்ட செயலென்றும்—அவரால்
முடியக் கண்டதில்லை
ஆண்டகை நாவசைத்தான்—அம்மவோ!
அதன்ப யன்சிறிதோ! ௮

உண்மை உறுதிகொண்டார்க்—குலகில்
    ஒன்றுமா காததில்லை
திண்மை யுடைக்காந்தி—கைதியாச்
    சிறைத னிலிருந்தே
உண்மை யுடன்மொழிந்தான்—அதுதான்
    ஊடுரு விப்பாய்ந்தே
எண்மைக் கோவில்பல—திறந்தே
    இன்பம் பலர்க்கீந்த. ௯

வேந்தி யனுரிமை—பெறவே
    வீழ்ந்து சிறைபோந்த
காந்தி தன்பெரிய—அரிய
    கடமை தீண்டாரொன்
மாந்தர் வாழ்வுபெறல்—எனவே
    மனத்துட் கொண்டாவி
ஈந்தி டவும்நின்ற—செயலை
    எவர் போற்றாதார்! ௧௦

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.



| தொடர் எண். | பாட்டு. | பதிகம். | பக்க எண். |
|---|---|---|---|
| ௧ | அக்கமதில் | சபர்மதி | ௩௭ |
| ௨ | அஞ்சொலினை | திருத் தசாங்கம் | ௬ |
| ௩ | அமிழ்த | திருத் தசாங்கம் | ௭ |
| ௪ | அமுதமன்ன | சொற்பெருமை | ௨௨ |
| ௫ | அம்பலத்தே | கடவுளை வேண்டல் | ௪௧ |
| ௬ | அம்மா | தோழிப் பேச்சு | ௩௦ |
| ௭ | அரியவினை | உண்ணா விரத முடிவு | ௪௪ |
| ௮ | அருமையழ | ஆடாமோ ஊசல் | ௨௬ |
| ௯ | அருமையுடை | சிறைவாழ்வு | ௫௦ |
| ௧௦ | அறவாழி | அங்கங்களின் பயன் | ௨௩ |
| ௧௧ | அறிவுடை | புகழ் பாடுமின் | ௨௦ |
| ௧௨ | அறைசகமா | திருநாமம் கேட்டல் | ௧௬ |
| ௧௩ | அன்புகயிறு | தோழிப் பேச்சு | ௨௯ |
| ௧௪ | அன்புபொறை | திருப்பணி | ௬௦ |
| ௧௫ | அன்றலர்ந்த | சபர்மதி | ௩௬ |
| ௧௬ | அன்னைநோய் | புகழ்பாடுமின் | ௧௯ |
| ௧௭ | அன்னை விலங் | தோழிப் பேச்சு | ௩௦ |
| ௧௮ | ஆடகவரை | திருப் பல்லாண்டு | ௧௪ |
| ௧௯ | ஆடாமோ | ஆடாமோ ஊசல் | ௨௮ |
| ௨௦ | ஆடினமயில் | திருப்பள்ளி யெழுச்சி | ௨ |
| ௨௧ | ஆய்ந்த சொலார் | திருநாமம் கேட்டல் | ௧௮ |
| ௨௨ | ஆவியே | திருப் பல்லாண்டு | ௧௩ |

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.



| தொடர் எண். | பாட்டு. | பதிகம். | பக்க எண். |
|---|---|---|---|
| ௨௩ | ஆற்றலென்பர் | கடவுளை வேண்டல் | ௩௯ |
| ௨௪ | இந்தியத்தா யிருந் | சொற் பெருமை | ௨௨ |
| ௨௫ | இந்தியத் தாய்வயி | தீண்டாமை | ௬௩ |
| ௨௬ | இந்திய நாட்டி | தீண்டாமை | ௬௫ |
| ௨௭ | இந்தியர்க்கு | திருப்பணி | ௫௯ |
| ௨௮ | இருந்தகைமை | அங்கங்களின் பயன் | ௨௫ |
| ௨௯ | இழுக்கல் | சொற் பெருமை | ௨௧ |
| ௩0 | இளங்கதிர் | திருப்பள்ளி யெழுச்சி | ௩ |
| ௩௧ | இன்மழலை | திருத் தசாங்கம் | ௬ |
| ௩௨ | உடலீவேன் | கடவுளை வேண்டல் | ௪0 |
| ௩௩ | உண்மையுறுதி | தீண்டாமை | ௬௬ |
| ௩௪ | உலகமெலாம் | கடவுளை வேண்டல் | ௩௯ |
| ௩௫ | உலகம் | திருப் பொன்னூசல் | ௮ |
| ௩௬ | உலகுயிர்கள் | கடவுளை வேண்டல் | ௪௨ |
| ௩௭ | உள்ளத்தால் | ஏர்வாடாக் கோவில் | ௩௩ |
| ௩௮ | உறுதிகடை | தோழிப் பேச்சு | ௨௯ |
| ௩௯ | உற்ற நோயை | சொற் பெருமை | ௨௨ |
| ௪0 | எங்கள் | திருப் பல்லாண்டு | ௧௪ |
| ௪௧ | எத்தரையும் | சிறை வாழ்வு | ௪௭ |
| ௪௨ | எந்தாய் | திருப்புகழ் | ௫௮ |
| ௪௩ | எம்மையுல | ஆடாமோ ஊசல் | ௨௮ |
| ௪௪ | எள்ளலில் | புகழ் பாடுமின் | ௨0 |

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.


| தொடர் எண். | பாட்டு. | பதிகம். | பக்க எண். |
|---|---|---|---|
| ௪௫ | எள்ளலில்லா | சொற் பெருமை | ௨௧ |
| ௪௬ | ஏமமமைந்த | தீண்டாமை | ௬௫ |
| ௪௭ | ஏரார் இளங்கிளி | திருத் தசாங்கம் | ௭ |
| ௪௮ | ஏரார் இளங்கொடி | திருப் பொன்னூசல் | ௧௦ |
| ௪௯ | ஐயாயிரத்து | திருப் பொன்னூசல் | ௮ |
| ௫௦ | ஓங்குகடல் | ஏர்வாடாக் கோவில் | ௩௩ |
| ௫௧ | ஓராடை | தோழிப் பேச்சு | ௨௯ |
| ௫௨ | கம்பமதயானே | திருப் பொன்னூசல் | ௧௦ |
| ௫௩ | கருணைகொள் | புகழ் பாடுமின் | ௨௦ |
| ௫௪ | கருணையின் | திருப்பள்ளி யெழுச்சி | ௪ |
| ௫௫ | கலங்காத | திருப்பள்ளி யெழுச்சி | ௧ |
| ௫௬ | கற்றைப்புகழ் | ஆடாமோ ஊசல் | ௨௬ |
| ௫௭ | கன்னூணும் | சபர்மதி | ௩௫ |
| ௫௮ | காதலில் | திருப்புகழ் | ௫௩ |
| ௫௯ | காதல் நிறை | அங்கங்களின் பயன் | ௨௪ |
| ௬௦ | காதார் குழை | திருப் பொன்னூசல் | ௧௧ |
| ௬௧ | காந்திமிக | தோழிப் பேச்சு | ௩௦ |
| ௬௨ | காந்தியிக் | புகழ் பாடுமின் | ௧௯ |
| ௬௩ | காந்தியின் | புகழ் பாடுமின் | ௨௦ |
| ௬௪ | காந்தியுயிர் | கடவுளை வேண்டல் | ௪௨ |
| ௬௫ | குழலொடுயாழ் | திருநாமம் கேட்டல் | ௧௭ |
| ௬௬ | கொங்கு | திருப் பொன்னூசல் | ௯ |

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.



| தொடர் எண். | பாட்டு. | பதிகம். | பக்க எண். |
|---|---|---|---|
| ௬௭ | கொஞ்சுமொழி | திருத் தசாங்கம் | ௯ |
| ௬௮ | கொஞ்சுமொழி | திருநாமம் கேட்டல் | ௧௭ |
| ௬௯ | கொடிப்பவள | திருநாமம் கேட்டல் | ௧௯ |
| ௭௦ | கொத்தடிமை | சிறை வாழ்வு | ௪௮ |
| ௭௧ | கொள்ளைநல | ஆடாமோ ஊசல் | ௨௭ |
| ௭௨ | கோயிலிலே | உண்ணாவிரத முடிவு | ௪௫ |
| ௭௩ | கோவிலிலே | அங்கங்களின் பயன் | ௨௩ |
| ௭௪ | கோவில்தனிற் | தீண்டாமை | ௬௪ |
| ௭௫ | கோழிகள் | திருப்பள்ளி யெழுச்சி | ௨ |
| ௭௬ | சகமாண்டோர் | திருப் பல்லாண்டு | ௧௨ |
| ௭௭ | சபர்மதியில் | திருப்புகழ் | ௫௧ |
| ௭௮ | சாந்தமொழி | திருப்பணி | ௬௧ |
| ௭௯ | சாந்தம்பொ | திருப் பொன்னூசல் | ௧௧ |
| ௮௦ | சாந்தம்வீர | சொற் பெருமை | ௨௨ |
| ௮௧ | சாற்றரிய | சிறை வாழ்வு | ௪௮ |
| ௮௨ | சிறியதொரு | சபர்மதி | ௩௮ |
| ௮௩ | சிறு குதலை | திருத் தசாங்கம் | ௭ |
| ௮௪ | சிறைப்பட்ட | சிறை வாழ்வு | ௪௯ |
| ௮௫ | சிறையார் | திருத் தசாங்கம் | ௫ |
| ௮௬ | சிறையின் | தீண்டாமை | ௬௪ |
| ௮௭ | சினவேல் | ஆடாமோ ஊசல் | ௨௮ |
| ௮௮ | சீர்கெழு | திருப் பல்லாண்டு | ௧௨ |

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.



| தொடர் எண். | பாட்டு. | பதிகம். | பக்க எண். |
|---|---|---|---|
| அகூ | சீர்சேர் | திருப்புகழ் | ருஉ |
| கூO | செம்பவள | திருத் தசாங்கம் | எ |
| கூக | செயற்கரிய | உண்ணுவிரத முடிவு | சங |
| கூஉ | செயிர்தீர | அங்கங்களின் பயன் | உரு |
| கூங | செய்தவன் | புகழ் பாடுமின் | உO |
| கூச | சேண்புகழ் | திருத் தசாங்கம் | ரு |
| கூரு | சொந்தவர | அங்கங்களின் பயன் | உச |
| கூசு | சொல்லாருஞ் | எர்வாடாக் கோவில் | ஙஉ |
| கூஎ | ஞாலந்தனிற் | திருப் பொன்னூசல் | கூ |
| கூஅ | ஞால முழுவது | திருப்புகழ் | ருரு |
| கூகூ | தமிழுடன் | சொற் பெருமை | உஉ |
| கOO | தன்னரிய | அங்கங்களின் பயன் | உச |
| கOக | தன்னிகர் | புகழ் பாடுமின் | ககூ |
| கOஉ | தாயரசு | திருப்பணி | சுக |
| கOங | தாயவள் | புகழ் பாடுமின் | ககூ |
| கOச | தான்பிறந்த | திருப்பணி | சுO |
| கOரு | திரட்டிவடித்த | ஆடாமோ ஊசல் | உஎ |
| கOசு | திருமுகத்தா | சபர்மதி | ஙஎ |
| கOஎ | தீண்டாதார் | தீண்டாமை | சுரு |
| கOஅ | தீண்டாமை | திருப்பணி | சுஉ |
| கOகூ | தீராச் சீர் | தோழிப் பேச்சு | உகூ |
| ககO | துறவிக்கு | திருப் பல்லாண்டு | கச |

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.


| தொடர் எண். | பாட்டு. | பதிகம். | பக்க எண். |
|---|---|---|---|
| ககக | துன்பெதுவும் | திருப்பணி | சாக |
| ககஉ | தூணல்ல | திருப் பொன்னூசல் | கூ |
| ககங | தென்னப்பி | ஏர்வாடாக் கோவில் | ஙச |
| ககச | தேர்ந்த அறங் | ஆடாமோ ஊசல் | உசா |
| ககரு | தொடத்தகார் | உண்ணாவிரத முடிவு | சரு |
| ககசா | நமையடக்க | ஏர்வாடாக் கோவில் | ஙச |
| ககஎ | நம்பன்புகழ் | தோழிப் பேச்சு | உகூ |
| ககஅ | நலமார்ந்த | திருநாமம் கேட்டல் | கசா |
| ககூ | நாவாழ | சபர்மதி | ஙசா |
| கஉO | நிலவருளும் | கடவுளை வேண்டல் | சக |
| கஉக | நினக்கரிய | உண்ணாவிரத முடிவு | சசா |
| கஉஉ | நின்புகழ் | திருப்பள்ளி யெழுச்சி | ங |
| கஉங | பச்சைநிற | திருநாமம் கேட்டல் | கஎ |
| கஉச | பச்சைப் பசுங் | திருத் தசாங்கம் | சா |
| கஉரு | பண்டேய்த்த | திருநாமம் கேட்டல் | கஎ |
| கஉசா | பல்லாண்டு | திருப் பல்லாண்டு | கரு |
| கஉஎ | பாகுபொருவு | ஆடாமோ ஊசல் | உசா |
| கஉஅ | பாக்கியமார் | சபர்மதி | ஙஅ |
| கஉகூ | பாங்குடைய | திருப்பணி | சாO |
| கஙO | பாரதத்தாய் | ஏர்வாடாக் கோவில் | ஙக |
| கஙக | பாரதமா | திருப்பணி | ருகூ |
| கஙஉ | பாவையர் | திருநாமம் கேட்டல் | கஅ |

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.



| தொடர் எண். | பாட்டு. | பதிகம். | பக்க எண். |
|---|---|---|---|
| கஙங | புத்திரிபாய் | ஏர்வாடாக் கோவில் | ஙக |
| கஙச | புத்திரிபுத் | புகழ் பாடுமின் | உ0 |
| கஙரு | புலையரெனச் | திருப்புகழ் | ருங |
| கஙசா | புலையரென்ற | தீண்டாமை | சாச |
| கஙஎ | பூதலத்துயர் | திருப்புகழ் | ருஉ |
| கஙஅ | பூரண சுதந்தர | திருப்பள்ளி யெழுச்சி | ங |
| கஙகூ | பெரியோய் | திருப்புகழ் | ருக |
| கச0 | பெரியோர்கள் | உண்ணுவிரத முடிவு | சங |
| கசக | பெற்றெடுத்த | சிறை வாழ்வு | சஎ |
| கசஉ | பேதையென | திருநாமம் கேட்டல் | கஎ |
| கசங | பேரறிவு | சபர்மதி | ஙரு |
| கசச | பேராற்றல் | சபர்மதி | ஙஎ |
| கசரு | பொய்கை | திருப்பள்ளி யெழுச்சி | ச |
| கசசா | பொய்வளரு | அங்கங்களின் பயன் | உரு |
| கசஎ | பொருள்நீ | தோழிப் பேச்சு | ங0 |
| கசஅ | பொறுமைத | கடவுளை வேண்டல் | ச0 |
| கசகூ | பொறையுடைய | சிறை வாழ்வு | ரு0 |
| கரு0 | போடியுன் | தோழிப் பேச்சு | ங0 |
| கருக | மகவுபல | சிறை வாழ்வு | சகூ |
| கருஉ | மக்கட்பிற | தீண்டாமை | சாங |
| கருங | மக்களன்று | ஏர்வாடாக் கோவில் | ஙஉ |
| கருச | மட்டில் புகழ் | சிறை வாழ்வு | சஅ |

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.



| தொடர் எண். | பாட்டு. | பதிகம் | பக்க எண். |
|---|---|---|---|
| ௧௫௫ | மண்ணனைத்தும் | உண்ணாவிரத முடிவு | ௪௬ |
| ௧௫௬ | மண்ணில் நிகர் | கடவுளை வேண்டல் | ௪௦ |
| ௧௫௭ | மண் முழுதும் | உண்ணாவிரத முடிவு | ௪௪ |
| ௧௫௮ | மருவுகொழுநர் | ஆடாமோ ஊசல் | ௨௭ |
| ௧௫௯ | மன்னவர்க்கும் | ஏர்வாடாக் கோவில் | ௩௩ |
| ௧௬௦ | மாசில் | திருப் பொன்னூசல் | ௧௦ |
| ௧௬௧ | மாதவத்துக் கஸ் | ஏர்வாடாக் கோவில் | ௩௨ |
| ௧௬௨ | மாதவத்துப் | அங்கங்களின் பயன் | ௨௩ |
| ௧௬௩ | மாநிலமே | கடவுளை வேண்டல் | ௪௧ |
| ௧௬௪ | மாந்தருய | அங்கங்களின் பயன் | ௨௪ |
| ௧௬௫ | மாமயிலார் | திருநாமம் கேட்டல் | ௧௭ |
| ௧௬௬ | மாமலருற்றிடு | திருப்புகழ் | ௫௭ |
| ௧௬௭ | மாரதர் | திருப் பல்லாண்டு | ௧௩ |
| ௧௬௮ | மால்பெற்ற | திருப் பல்லாண்டு | ௧௫ |
| ௧௬௯ | மிடிபிணி | திருப் பல்லாண்டு | ௧௩ |
| ௧௭௦ | மூனோளுய | திருப்புகழ் | ௫௪ |
| ௧௭௧ | முன்ன முலகம் | தருப்பணி | ௬௨ |
| ௧௭௨ | முன்னுலகின் | சிறை வாழ்வு | ௪௯ |
| ௧௭௩ | மெய்ம் மணக்கும் | சபர்மதி | ௩௬ |
| ௧௭௪ | மோகனன் | புகழ் பாடுமின் | ௧௯ |
| ௧௭௫ | யார் வல்லார் | உண்ணாவிரத முடிவு | ௪௪ |
| ௧௭௬ | வம்பின் பொருள் | தோழிப் பேச்சு | ௨௯ |

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.



| தொடர் எண். | பாட்டு. | பதிகம். | பக்க எண். |
|---|---|---|---|
| கஎஎ | வற்றல் | சொற் பெருமை | உக |
| கஎஅ | வாடு பயிரை | சொற் பெருமை | உக |
| கஎகூ | வாய்கொண்ட | உண்ணாவிரத முடிவு | சரு |
| கஅ௦ | வாழிய | திருப் பல்லாண்டு | கரு |
| கஅக | வாழ்ந்தது | திருப்பள்ளி யெழுச்சி | ௩ |
| கஅஉ | வானம் | திருப் பொன்னூசல் | கக |
| கஅ௩ | வானோர் | திருத் தசாங்கம் | சு |
| கஅச | விடிந்தது | திருப்பள்ளி யெழுச்சி | உ |
| கஅரு | விரிகதிர் | திருப்பள்ளி யெழுச்சி | க |
| கஅசு | வெந்த புண்ணில் | சொற் பெருமை | உக |
| கஅஎ | வேதனை | புகழ் பாடுமின் | ககூ |
| கஅஅ | வேந்தியலு | தீண்டாமை | சுசு |
| கஅகூ | வேற்றூர் | தோழிப் பேச்சு | கூ௦ |

ஊழியன் பவர் பிரஸ், சென்னை.

# முன்னுரை

அருமைத் தமிழ்ச் சகோதரர்களே !

வேலூர்ச் சிறையில் நான் பாடிய பாக்களில் "தாலாட்டும் கும்மியும்" என்று ஒரு நூலும் "காந்தி பதினெண்பா" என ஒரு நூலும் முன்னர் அச்சிட்டு வெளிப்படுத்தினேன். அதில் ஒரு பகுதியை இங்கு வெளியிடுகின்றேன். இந்நாலுக்குப் பெயர் "புதுமைப் பாக்கள்." புதுக் கருத்துக்கள் புகுத்திப் பாடிய பாக்களின் தொகுதியாகலின் அப் பெயர் இட்டேன். எனது இப்புதுமைப் பாக்களில் பத்து வகை அடங்கி யிருக்கின்றன. பழந் தமிழுக்குப் புதுமைப் பாக்கள் இன்றியமையாத் தேவை என்பது என் கருத்து. தமிழ்த் தாய்க்கு அவளுடைய ஏராளமான ஆபரணங்களோடு இந்த என்னால் சமைக்கப் பட்ட ஒரு சிறிய அணியையும் ஒரு இடத்தில் போடுகின்றேன். எனது அணியில் அழுத்திய மணிக்கு ஒளிவிடும் ஆற்றல் எவ்வளவு உண்டோ அந்த அளவுக்கு அது விளங்கித் தோன்றட்டும் !

பவ மாசி உ௪வ
சென்னை.

ராய. சொக்கலிங்கன்.

# உள்ளுறை.


| தொடர் எண். | பெயர். | பாவகை. | பக்க எண். |
|---|---|---|---|
| க | எந்நாட் கண்ணி | கண்ணி | க |
| உ | பேரிகை | கண்ணி | சு |
| ங | விடுதலை | கண்ணி | கO |
| ச | இந்தியா | கண்ணி | கஉ |
| ரு | தமிழ் மொழி | கண்ணி | கங |
| சு | காதல் மறுமணம் | கண்ணிப்பா | உஉ |
| எ | கிளி விடு தூது | கண்ணிப்பா | உசு |
| அ | கோவில் திறவு | விருத்தம் | உகூ |
| கூ | சாதி | அகவல் | ஙங |
| கO | வீர நாடு | சிந்து | சங |
| கக | செய்யுள் முதற்குறிப்பு | | சகூ |

# 1. எந்நாட் கண்ணி

பாயிரம்

## அறுசீர் விருத்தம்

சாலிவா கனசகமாண் டாயிரத்தெண்
ணூற்றின்மேற் சார்ந்து நின்ற
நாலினே டொருபத்து நான்கொன்றுங்
கீரசவில் ஆடி நான்காம்
ஏலுநாள் எழில்ராய வேலூர்ச்சீர்ச்
சிறையதனில் எந்நாட் கண்ணி
கோலினன் காரைநகர் ராயசொக்க
லிங்கனுயர் கொள்கை மேவ.

வாய்த்த பெருங்காந்தி மன்னும் அறமுலகில்
பூத்து மணம்வீசிப் பொலியுநாள் எந்நாளோ? க

வீயாப் புகழோடு மேனாள் உலகாண்ட
தாயார் விலங்கு தகருநாள் எந்நாளோ? உ

சரிநிகராய் உலகதனில் தண்ணளிசேர் நம்மன்னை
அரியணையில் முடிதாங்கி அமருநாள் எந்நாளோ? ந

மண்குளிர எங்கள் மாதா அரசிருக்கக்
கண்குளிரக் கண்டு களிக்குநாள் எந்நாளோ? ச

நாட்டை மறந்துசுய நன்மை தனைநாடிக்
காட்டிக் கொடுப்போர் கண்பெறுநாள் எந்நாளோ? ரு

தகவறியா அதிகாரி சாரும் அடிவருடும்
பகதூர்கள் நல்லறிவு படருநாள் எந்நாளோ? சு

புனிதம் அறியாது பல்லடிமை போதுமென்பார்
மனிதர் எனஉலகில் வாழுநாள் எந்நாளோ? எ

ஒன்றறியா அதிகாரி உதைத்தகால் முத்தமிடும்
நன்றறியா மூடரெலாம் நலமுணர்நாள் எந்நாளோ? அ

ஆழி கிடக்குமிந்த அளவிலாப் பேருலகில்
ஏழை அடிமையெலாம் இலவாநாள் எந்நாளோ? கூ

வீறோ டரசாளும் வேற்றூர்முன் இந்தியர்கள்
ஏறுபோல் பீடுநடை ஏற்குநாள் எந்நாளோ? க0

கோடி படைத்தோரும் குடிப்பதற்குக் கூழின்றி
ஓடி யலைவரெனும் ஒன்றறுநாள் எந்நாளோ? கக

புலைமைத் தொழில்செயினும் புன்பிறப்பே காரணமாத்
தலைமை பெறவிழைவோர் சாய்ந்தொழிநாள் எந்நாளோ? கஉ

சாதியால் தீண்டாதார் என்னவொரு சாராரை
வாதிக்கும் மெய்யறியார் மதிபெறுநாள் எந்நாளோ கங

பழைய வழக்கமெனும் பகுத்தறிவில் செய்கைகளைக்
குழியில் புதைத்தழுந்தக் கோதறுநாள் எந்நாளோ கச

பித்துக்கொண் டொப்புயர்வில் பெண்மை தனைப்பழிப்போர்
செத்தஇடம் புல்முளைக்கச் செய்யுநாள் எந்நாளோ? கரு

காதல் புரியிருவர் கருத்தை இடைதடுக்கும்
சாதி சமயமெலாம் தகர்ந்திடுநாள் எந்நாளோ? கசு

குதலைச் சிறுமியரைக் கோதில் நலங்கெடுத்து
விதவைப் பெயர்தருவோர் வீழுநாள் எந்நாளோ? கஎ

எனக்குத் தமிழ்வாரா தென்றுரைக்கும் புன்றமிழர்
இனித்த தமிழ்பேசி எழிலுறுநாள் எந்நாளோ? கஅ

தூண்டும் அறியாமைத் தொடரான புன்மையெலாம்
மாண்டு மடிந்தழிந்து மண்ணுநாள் எந்நாளோ? ௧௯

உலகம் செழித்தோங்கி உயர்ந்த அறம்வளர்ந்து
கலைகள் நனிநிரம்பக் காணுநாள் எந்நாளோ? ௨௦

பூதான் அளப்பரிய புண்ணியத்தால் பெறுபாத
மாதா அரசெய்தி மகிழுநாள் எந்நாளோ? ௨௧

வசையின்றி வாழ்ந்திந்த வையகத்தில் எல்லோரும்
பசியாமல் உண்டுடுத்திப் படருநாள் எந்நாளோ? ௨௨

அலகிலாப் பெரும்பொருளும் அதிகாரம் போன்றனவும்
நிலையிலா என்றுணர்ந்து நேர்பெறுநாள் எந்நாளோ? ௨௩

கொத்தடிமை நீங்கியெங்கள் கோகிலப்பொன் மாதரார்
ஒத்தநலம் பெற்றோங்கி ஒளிருநாள் எந்நாளோ? ௨௪

எக்குலத்தில் எந்நாட்டில் எம்மதத்தில் இருந்தாலும்
மிக்கசெயல் பூண்டாரை மேவிடுநாள் எந்நாளோ? ௨௫

தேமாங் கனிபோலச் செப்புமொழி கண்டுநனி
ஏமாந்த சோணகிரி ஏறுநாள் எந்நாளோ? ௨௬

பல்லோரும் ஏத்தும் பாரதஇந்தப் பூவுலகில்
எல்லோரும் இன்புற்றிருக்குநாள் எந்நாளோ? ௨௭

பிறந்தார் இறந்திடுதல் பெரிதும் உறுதியெனும்
சிறந்த அறமுணர்ந்து சீர்பெறுநாள் எந்நாளோ? ௨௮

வைத்த பெருநிதியம் வாழ்வாசு மண்ணிழந்து
செத்த முடிமன்னர் திறமுணர்நாள் எந்நாளோ? ௨௯

முடிசூடி அரசாளும் மொய்ம்புள்ள மன்னவரும்
படிமீது மிடிகூரும் பண்புணர்நாள் எந்நாளோ? ௩௦

பிறர்க்குரியார் நலந்துய்க்கப் பேணவிரு சாரார்க்கும்
மறக்கரிய இன்னலெனும் மாண்பறுநாள் எந்நாளோ? ௩௧

பிறப்பில் உயர்விழிவு பேசும் அறிவோடு
சிறப்பில் சிறுமனிதர் திருந்துநாள் எந்நாளோ? ௩௨

ஆணுயர்வு பெண்ணிழிவென் றறையும் அறியாமைக்
கோணல் மனிதருயர் குணம்பெறுநாள் எந்நாளோ? ௩௩

இருவர் இணைந்துபெறும் இல்வாழ்வுக் கறிகுறியா
ஒருவர் பெறுந்தாலி ஒழியுநாள் எந்நாளோ? ௩௪

சின்னஞ் சிறுவயதில் திருமணங்கள் செய்தில்லின்
மன்னும் அறங்கெடுக்கும் மாசொழிநாள் எந்நாளோ? ௩௫

இத்தரையில் எல்லா எழிலார் இளையாரும்
புத்தகமும் கையுமாப் பொலியுநாள் எந்நாளோ? ௩௬

தேவர் குறள்போன்ற சீர்மையற நூலொன்று
யாவர் செயவல்லார் என்றுணர்நாள் எந்நாளோ? ௩௭

வேந்தன் இளங்கோ விரித்ததமிழ்ச் சிலம்பினிமை
மாந்தி இறுமாந்து மகிழுநாள் எந்நாளோ? ௩௮

உம்பர் அமிழ்தினிதென் றுரைத்திடுவார் உண்மையினில்
கம்பர் தமிழறியார் கண்டறிநாள் எந்நாளோ? ௩௯

கடமை தனைப்புரியும் கருணை செறிஅறிஞர்
உடைமை தனைப்பெற்றே உயருநாள் எந்நாளோ? ௪0

கண்டார் மருளக் கையிற் றடிகொண்டு
தொண்டர் தமையடித்தல் தொலையுநாள் எந்நாளோ? ௪௧

மூக்கடைக்கத் தொண்டர் மூச்சடைக்க நாற்றமுடைச்
சாக்கடையை ஊற்றுபுன்மை சாகுநாள் எந்நாளோ? ௪௨

நாடடை மறந்துசுய நன்மை தனைநாடிக்
காட்டிக் கொடுப்போர் கண்பெறுநாள் எந்நாளோ? ௪௩

நிலையில் பொருள்கொண்டு நீதிதவிர் ஆறதனால்
கொலைநேர் வினைபுரிவோர் குப்புறுநாள் எந்நாளோ? ௪௪

நுண்மணல்போல் வெண்டிரைபோல் நுவலரிய பல்லரசர்
மண்ணதனில் மாண்டொழிந்த வகையறிநாள் எந்நாளோ?

செல்லு மிடமெலாம் சிறப்பன்றி வேறுதாக்
கல்வி பெருகியே கசடறுநாள் எந்நாளோ? ௪௬

மாதடிமை யென்றுரைக்கும் மாண்பும் அறிவுமிலாப்
பேதை மனிசரெலாம் பித்தொழிநாள் எந்நாளோ? ௪௭

நலத்துடனே இல்வாழ்வு நடத்துமிரு காதலரும்
இலக்கியங்கள் பயின்றுநனி இன்புறுநாள் எந்நாளோ?

அரிய உலகனைத்தும் அறமார் அழகுசெறி
பெரிய இனியதமிழ் பிறங்குநாள் எந்நாளோ? ௪௯

நல்ல பொருளனைத்தும் நாடிக் கடனைக்கொள்
ஒல்காப் பெருமனிதர் ஓங்குநாள் எந்நாளோ? ௫௦

# 2. பேரிகை

பாடிய தேதி :—ஆங்கிரச ஆவணி ௬-௨

திசைகுலுங்க அலைபுலம்பச்
சேர்ந்துகொட்டு பேரிகை
செகங்கலங்க மலையெழும்பச்
சேர்ந்துகொட்டு பேரிகை க

ஏழையில்லை கோழையில்லை
என்றுகொட்டு பேரிகை
இந்தியா எழுந்துவிட்ட
தென்றுகொட்டு பேரிகை உ

அடிமைவாழ்வு படியிலில்லை
என்றுகொட்டு பேரிகை
மடிமையில்லை மிடிமையில்லை
என்றுகொட்டு பேரிகை ௩

எங்கள்நாட்டை நாங்கள்ஆள்வோம்
என்றுகொட்டு பேரிகை
பங்கவாழ்வு வாழமாட்டோம்
என்றுகொட்டு பேரிகை ௪

விடுதலைக்கு உயிருமீவோம்
என்றுகொட்டு பேரிகை
விடுதலையைப் பெற்றேதீர்வோம்
என்றுகொட்டு பேரிகை ௫

என்றைக்கேனும் இறப்பதுறுதி
என்றுகொட்டு பேரிகை
வென்றிகொள்வோம் மெய்ம்மைமெய்ம்மை
என்றுகொட்டு பேரிகை ௬

அச்சமென்ப தணுவுமில்லை
என்றுகொட்டு பேரிகை
இச்செகத்தில் எவர்க்குமஞ்சோம்
என்றுகொட்டு பேரிகை ௭

கொடுமையான சட்டமஞ்சோம்
என்றுகொட்டு பேரிகை
தடியுமஞ்சோம் அடியுமஞ்சோம்
என்றுகொட்டு பேரிகை ௮

எந்திரபீ ரங்கியஞ்சோம்
என்றுகொட்டு பேரிகை
தந்திரப்பேச் சினிப்பலிக்கா
தென்றுகொட்டு பேரிகை ௯

உரிமைதடுக்கும் எதையுமழிப்போம்
என்றுகொட்டு பேரிகை
உரிமையில்லா வாழ்வுவேண்டோம்
என்றுகொட்டு பேரிகை ௰

காந்திவந்தான் மாந்தருய்ய
என்றுகொட்டு பேரிகை
தீர்த்தபுன்மை யானயாவும்
என்றுகொட்டு பேரிகை ௧௧

உயர்வுதாழ்வு பிறப்பிலில்லை
என்றுகொட்டு பேரிகை
அயர்தல்செய்யோம் அன்னைபணியில்
என்றுகொட்டு பேரிகை கஉ

புலையர்என்று பிறப்பிலில்லை
என்றுகொட்டு பேரிகை
புலைமைகொண்டோர் புலையராவர்
என்றுகொட்டு பேரிகை கங

பெண்ணையிழிப்போர் பேதைமாக்கள்
என்றுகொட்டு பேரிகை
பெண்ணும்ஆணும் ஒக்குமறிவில்
என்றுகொட்டு பேரிகை கச

அறந்தழைக்க அவனிவாழ
அதிர்ந்துகொட்டு பேரிகை
திறஞ்செழிக்கத் தேசம்வாழத்
தேர்ந்துகொட்டு பேரிகை கரு

பட்டம்பதவி கெட்டமாயை
என்றுகொட்டு பேரிகை
விட்டுத்தொலைப்பீர் வீண்பட்டத்தை
என்றுகொட்டு பேரிகை கசு

சுத்தர்பெருக மற்றதொழிய
என்றுகொட்டு பேரிகை
பித்தர்வேறு நாட்டைவிழைவோர்
என்றுகொட்டு பேரிகை கஎ

தொழில்வளரச் சோர்வகல
  என்றுகொட்டு பேரிகை
இழிவுதொலைய யாவும்உயர
  என்றுகொட்டு பேரிகை ௧௮

துன்பம்செய்வோர் பொருளைவாங்கோம்
  என்றுகொட்டு பேரிகை
இன்பம்பெருக இன்பம்பெருக
  என்றுகொட்டு பேரிகை ௧௯

கொட்டுகொட்டு கொட்டிமுழக்கு
  கொட்டுகொட்டு பேரிகை
கொட்டிமுழக்கு கொட்டிமுழக்கு
  கொட்டுகொட்டு பேரிகை ௨௰

# 3. விடுதலை

பாடிய தேதி :—ஆங்கீரச ஆவணி ௧௧-௨

எங்கள்நாட்டை நாங்கள் ஆள
எவர்தடுக்க வல்லவர் !—அவர்
தங்கள்நாட்டை நாங்கள்ஆளத்
தந்துவாழ வல்லரோ ? ௧

எங்கள்நாட்டின் விடுதலைக்கு
இன்னுயிரும் ஈகுவோம் !—தாய்
பங்கம்நீங்க உயிர்கொடுத்தல்
பாக்கியமென் றேகொள்வோம் ! ௨

பிறந்தபொழுதே இறத்தல்திண்ணம்
என்றபீடு சாலுயர்—பேர்
அறத்தைஉலகுக் கறைந்தநாங்கள்
அஞ்சுவோமோ உயிர்விட ! ௩

எங்கள்உரிமை தன்னைப்பிடுங்க
எவர்க்கும்உரிமை இல்லையால் !—இனி
மங்கியடிமை வாழ்வுவாழ மாட்டோம் !
மாட்டோம் ! நிச்சயம் ! ௪

இந்தியாவை ஆளுமுரிமை
இந்தியர்க்கே உரியது !—இதை
எந்தஉலகில் யாவர்மறுத்தே
இயம்பவல்லார் ! சொல்லுவீர் ! ௫

எங்கள்நாட்டை ஏழையாக்கும்
ஏதிலாரின் பொருள்கொளீர் !—என
எங்களவரை நாங்கள் தடுக்கும்
இதுவும்குற்றம் ஆகுமோ ? ௬

வன்சிறைக்கு அஞ்சுகாலம்
மாண்டுமண்ணிற் புதைந்தது !—நல்
அன்னைவிலங்கை அறுத்தற்கஞ்சி
ஆவிகாப்போர் மனிதரோ ? ௭

தாய்விலங்கு தாங்கிநிற்கத்
தனயர்விலங்கு தாங்கலில்—வந்
தேயுங்குற்றம் என்னே!யீதை
அறியமாட்டார் இழிந்தவர் ! ௮

உணர்ச்சிதன்னைச் சிறைசெயற்கு
உலகில்வல்லார் உள்ளரோ ?—பெரும்
கணக்கில்வலிமை படைத்தவர்க்குங்
கருதலாகு மோஅது ! ௯

எந்திரபீ ரங்கியெங்கள்
உணர்ச்சிதன்னை என்செயும் ?—உடல்
வெந்துபோயின் வேற்றுடலில்
வீறுகொள்வ துறுதியால். ௧௦

# 4 இந்தியா

பாடிய தேதி :—ஆங்கீரச ஆவணி ௧௧-௨.

தொன்றுதொட்டுப் பூமிவாழத் தூய்மைமிக்க அறமெலாம்
மன்றஉணர்த்தி வளம்பெருக்கி வாழ்ந்ததெங்கள் இந்தியா ௧

அன்றுபுத்தன் தன்னைநல்கி அறம்வளர்த்தது இந்தியா
இன்றுகாந்தி தன்னைப்பெற்றே எழில்வளர்ப்பது இந்தியா ௨

வள்ளுவனென் றொப்புயர்வில் மாட்சிமிக்க புலவனால்
கொள்ளைநீதி குவலயத்துக் குரைத்ததெங்கள் இந்தியா ௩

உயிரினும் சிறந்துயர்வ தொழுக்கமென்றே உலகெலாம்
செயிரறத் திகழுமாறு செப்பியதெம் இந்தியா ௪

நாகரிகம் இன்னதென்று நளிர்கடல்சூழ் நாடெலாம்
வாகுடனே அறியவன்று வகுத்தளித்தது இந்தியா ௫

காதல்வீரம் கற்புமேன்மை கருணையாதி யாவையும்
ஆதிநாள் வகுத்துரைத்த தருமைகொண்ட இந்தியா ௬

வானமீன் அளக்கவல்ல மாண்புமிக்க அறிஞரை
ஏனைநா டளிக்குமுன்னர் ஈன்றதெங்கள் இந்தியா ௭

விலைமதிப்பில் பண்டைநாள் மேதினியோர் மெச்சிட
எலிமயிரால் ஆடைநெய்த தீடில்எங்கள் இந்தியா ௮

கலைவளர்த்தே யறம்பெருக்கிக் கருணைவாழ்வு கண்டெலாம்
நிலையிலாமை யென்றறிந்து நேர்மை கொண்டது இந்தியா ௯

உலகந்தன்னை இயக்குவிக்கும் உண்மையான ஒருபொருள்
அலகில்ஆற்றல் வல்லததுவென் றறிந்ததெங்கள் இந்தியா ௧௦

# 5 தமிழ்மொழி

பாடிய தேதி :—ஆங்கீரச ஆவணி உரு-௨.

இனிமைநீர்மை தண்மைமேன்மை
ஏய்ந்ததெங்கள் தமிழ்மொழி
தனிமைஇளமை பழமைபுதுமை
சார்ந்ததெங்கள் தமிழ்மொழி க

கன்னற்சாறும் கனியுமமுதும்
காய்ச்சுபாலும் கண்டுடன்
இன்னபொருள்கள் யாவும்புளிக்க
இனிக்குமெங்கள் தமிழ்மொழி ௨

ஆயிரம்பல் லாண்டுமுன்னர்
ஆக்கிவைத்த அருமைசால்
மாயிரும்பல் காப்பியங்கள்
வாய்ந்ததெங்கள் தமிழ்மொழி ௩

மண்ணிலெங்கும் நிகரிலாத
மாட்சிகொண்ட பேரற
எண்ணில்நீதி நூல்கள்கொண்ட
தெங்கள்கன்னித் தமிழ்மொழி ௪

பண்டைநாளில் சங்கமேறிப்
பாரில்நீடி லாயலே
அண்டர்போற்ற வீறுகொண்ட
தருமையான தமிழ்மொழி ரு

புலமைதன்னில் ஆண்களோடு
போட்டிகொண்டு பெண்களும்
தலைமைகொண்ட பாக்கள்யாக்கத்
தழைத்ததெங்கள் தமிழ்மொழி ௬

அகமும்புறமும் உணர்த்துபாக்கள்
அனந்தம்பண்டை நாளினில்
மகளிர்மைந்தர் பாடவாய்த்து
வளர்ந்ததெங்கள் தமிழ்மொழி ௭

இத்தரைக்குப் பழையதமிழர்
இயலைநன்கு விளக்கிடும்
பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும்
படைத்ததெங்கள் தமிழ்மொழி ௮

கரைபொருந்தக் கலையமைத்த
கவினுடைத்தொல் காப்பியப்
பெருமைமிக்க இலக்கணத்தைப்
பெற்றதெங்கள் தமிழ்மொழி ௯

மருவுகளவும் கற்புந்திணையும்
மரபுமற்றும் யாவுமார்
பொருளதிகாரம்படைத்த
தொப்பிலெங்கள் பொன்மொழி ௧௦

உலகநீதி தனையுலகுக்
கிடித்துரைக்கும் இணையிலா
நாலடியார் உடையதெங்கள்
நலந்திகழ்நீர் தமிழ்மொழி ௧௧

நலமனைத்தும் வடித்துரைத்த
நன்றுதீது நன்கறி
தலமதிக்கும் வள்ளுவனைத்
தந்ததெங்கள் தமிழ்மொழி கஉ

பெரிதும்வளரும் இற்றையுலகும்
பேணிக்கொள்ள அற்றைநாள்
அரியநீதி யுரைத்தகுறளை
அடைந்ததெங்கள் தமிழ்மொழி கங

அன்புமறத்தை அறுக்குமென்ற
அரியகாந்தி கொள்கையை
முன்புபொய்யில் வள்ளுவன்வாய்
மொழிந்ததெங்கள் தமிழ்மொழி கச

அருளையறத்தை அன்றுமின்றும்
அவனியென்றும் கொண்டிடப்
பெருகநல்கும் வள்ளுவனைப்
பெற்றதெங்கள் தமிழ்மொழி கரு

ஒக்கும்பிறப்பில் உயிர்களெல்லாம்
என்றஉண்மை உரைத்திடும்
தக்கபுலவன் தன்னைப்பெற்ற
தெங்களினிய தமிழ்மொழி கசு

அந்தணரென் போரறவோர்
என்றவுண்மை அறத்தினை
முந்தையொப்பில் புலவன்வாயில்
மொழிந்ததெங்கள் தமிழ்மொழி கஎ

நாடுபுகழும் ராமகதையை
நல்லவிருத்தப் பாவினால்
ஈடிலாமல் பாடினோனை
ஈன்றதெங்கள் தமிழ்மொழி கஅ

நனியிப்பூவில் இராமகாதை
நவின்றபுலவர் அனைவர்க்கும்
தனிமுடியாம் கம்பன்தன்னைத்
தந்ததெங்கள் தமிழ்மொழி ககூ

செவியில்தேனை விடுத்ததொப்பத்
திருத்திராமன் கதையினைக்
கவிபுனைந்த கவியையீன்ற
தெங்கள்கனிந்த தமிழ்மொழி உ௦

மூலநூலைத் தோற்கடித்த
மொய்ம்புமிக்க கம்பனை
ஞாலம்போற்ற நல்கியதெம்
நவையில்நல்ல தமிழ்மொழி உக

புதுமைகொண்ட பொருளெல்லாம்
புகுத்திவைத்த பொருவிலாச்
சதுரக்கம்பன் தன்னைப்பெற்றுத்
தழைத்ததெங்கள் தமிழ்மொழி உஉ

சாதிசிறிய நெறியென்றன்று
சாற்றுமுயர்ந்த கம்பனின்
நீதியுடைய தெங்களொப்பில்
நேர்மைகொண்ட தமிழ்மொழி உங

சொல்லிற்றேனும் அமுதுங்கொண்டு
தொடுத்தளித்த சீர்த்திகொள்
மல்லல்மிக்க சிலம்புபெற்று
வாழ்வதெங்கள் தமிழ்மொழி உச

கண்ணகிகோ வலனரிய
கதைவிரித்த சிலம்பெனும்
ஒண்மைச்சுவையை நல்குகோவை
உடையதெங்கள் தமிழ்மொழி உரு

குழலும்யாழும் குழைத்தெடுத்துக்
கோவலனற் கதையினை
அழகுத்தமிழில் அருளுவேந்தை
அளித்ததெங்கள் தமிழ்மொழி உசு

துறவுமணி மேகலையாள்
கொண்டபெரிய தூய்மைசேர்
அறமுரைத்த சாத்தனாரை
அளித்ததெங்கள் தமிழ்மொழி உஎ

புத்தனருள் மெய்யறமிப்
புவிமுழுதும் பொங்கிட
மெத்துமணி மேகலைநூல்
மேவியதெம் தமிழ்மொழி உஅ

மேவுமின்பங் கூறுநூலில்
மேதினியோர் காமுறும்
சீவகசிந் தாமணியைச்
செய்ததெங்கள் தமிழ்மொழி உகூ

திறமுணர்ந்து பெண்ணினத்தின்
சீர்த்திகாட்டிச் சீருடை
அறமுரைத்த ஔவையாரை
அளித்ததெங்கள் தமிழ்மொழி ௩௦

தேனவமாலைக் காதலித்துத்
திறமும்வீர மும்செறி
பாவைசெய்த பாவையாளைப்
பயந்ததெங்கள் தமிழ்மொழி ௩௧

ஆத்திசூடும் ஆனடியை
அடைந்துநின்றே அற்புதப்
பூத்தொடுத்த புனிதவதியைப்
பெற்றதெங்கள் தமிழ்மொழி ௩௨

அன்புகடவுள் என்றுணர்ந்த
அருமைபெருமை யாவுமார்
என்புருக்கும் வாசகத்தை
ஈன்றதெங்கள் தமிழ்மொழி ௩௩

கல்லும்மாவும் மண்ணும்மாவும்
கசிந்துகசிந்து கனிந்திடச்
சொல்லுமணி வாசகனைப்
பெற்றதெங்கள் தொன்மொழி ௩௪

தேவைப்பாடும் அரியநாவல்
சீர்த்திமிக்க நற்றிருக்
கோவைபாடும் கோவையீன்ற
குளிர்வதெங்கள் தமிழ்மொழி ௩௫

மூவரன்று வாரங்கொண்டு
        மொழிதொடுத்துச் செஞ்சடைத்
தேவுக்கிட்ட ஆரங்கொண்டு
        திகழ்வதெங்கள் தமிழ்மொழி ௩௬

இறைசிவனென் றுளத்திருத்தி
        இசைத்தமிழி லெண்ணிலாக்
குறைவில்சீர்த்தி மூவர்பாடல்
        கொண்டதெங்கள் தமிழ்மொழி ௩௭

மாலின்பாதத் தாழ்பெரியோர்
        வாயிலாக மாண்புடை
நாலுகொண்ட ஆயிரப்பா
        நவின்றதெங்கள் தமிழ்மொழி ௩௮

பெரியமாலே கடவுளென்று
        பேசுகின்ற பெருமைசால்
அரியகீர்த்தி ஆழ்வார்பாடல்
        அணிந்ததெங்கள் தமிழ்மொழி ௩௯

யார்க்கும்நாங்கள் குடியல்லோம்
        என்றநாவுக் கரையன்பாக்
கீர்த்திகுடி மிளிர்வதெங்கள்
        கேடில்வீரத் தமிழ்மொழி ௪௦

தெய்வமணக்கச் செய்யுள்செய்த
        சேக்கிழானை என்றுசீர்
எய்துதொண்டர் புராணங்கொண்ட
        தெங்கள்தண்மைத் தமிழ்மொழி ௪௧

சீர்திருத்தம் பலபுகுத்திச்
சிறக்கவன்று சேக்கிழான்
பார்மதிக்கச் செய்தகாதை
படைத்ததெங்கள் தமிழ்மொழி சஉ

ஆயுமறிவி னுரையுருக்கும்
அரியகொள்கைப் பாவுரை
தாயுமானப் பெருமையோனைத்
தந்ததெங்கள் தமிழ்மொழி சங

உளமிருக்கும் அறிவேதெய்வம்
என்றுணர்ந்த உண்மைசேர்
களங்கமற்ற தாயுமானுற்
கண்டதெங்கள் தமிழ்மொழி சச

பாவுதமிழில் பாலும்தேனும்
பாகுங்கைக்கப் பாவுரை
இராமலிங்கன் தன்னைப்பெற்ற
தெங்களினிய தமிழ்மொழி சரு

உருகியுருகி ஓதுவார்தம்
உள்ளங்கரைக்கும் ஒண்மைசேர்
திருவருட்பா உடையதெங்கள்
சிறந்தவரிய தமிழ்மொழி சசு

மதியினர்கள் போற்றியேற்கும்
மாட்சிகொண்ட மனோன்மணிப்
புதியஅணியும் பெற்றுநன்கு
பொலிவதெங்கள் தமிழ்மொழி சஎ

வீரங்காதல் இனிமைபுதுமை
　　மேவநாட்டைப் போற்றிடும்
பாரதிபாப் பெற்றுயர்வு
　　படைத்ததெங்கள் தமிழ்மொழி ௪௮

நல்லதமிழில் பாக்கள்கோத்த
　　நாடுமதிக்கும் பாவுக்கோர்
செல்வனென்னும் பாரதியை
　　ஈன்றதெங்கள் தேமொழி ௪௯

கரும்பும்தேனும் கண்டும்பாலும்
　　கனியுமென்னப் புலமையோர்
விரும்புபாக்கள் எண்ணில்கொண்டு
　　விளங்குமெங்கள் தமிழ்மொழி ௫௦

# 6. காதல் மறுமணம்

பாடிய தேதி :—ஆங்கிரச புரட்டாதி க-உ

## வாராமைக்கு இரங்கல்

மணம் பேசி முடிவு செய்த காதலன்
வாராமைக்கு வருந்தி, காதலி
தோழியிடம் கூறுவது.

என்னகந் தொட்டஅவன்—சகியே!
ஏனோவந் தானிலையே;
சொன்ன படிபுரிவார்—மோகனன்
தொண்டரென் பதுபொய்யோ!
"கன்னலே தெள்ளமுதே!—உனையே
காதல் மணம்புணர்வேன்;
உன்துயர் தீர்த்திடுவேன்—கைம்மையை
உடைத்திடுவே" னென்றிட்டான். க

காந்திமேல் ஆணைவைத்து—சகியே!
கருத்துரு கிமொழிந்தான்.
"ஏந்தும் எழிலிளமை—உடைய
இன்கனி கள்அழுதே
வீழ்ந்திடல் நான்சகியேன்—கனியே!
விதிக்கும் விதியாவேன்;
காந்தையர் பேரொளியே!—கருத்திற்
கவலை யொழித்தி"டென்றான். உ

வாரா தொழியானே—சகியே !
　　வந்ததெத் தீத்துயரோ ?
போா இடும்பையையும்—புரியப்
　　பின்வாங்கு வாரோ ; பெற்ற
தீராத காதலுடைத்—திருவைச்
　　சித்ர வதைபுரிவோர்.
ஆரடி செய்திசொல்வார்—சகியே !
　　ஆற்றிட என்றனக்கே. ௩

பச்சிளங் கன்னியரைச்—சகியே !
　　பருவம் உறுமுன்னமே
இச்செகத் தின்பமின்றிப்—புவியில்
　　ஏங்கிப் புரண்டழச்செய்
நச்சை நிகர்கொடிய—சகியே !
　　நல்லறம் நன்றறியா
அச்சமி லாமனிசர்—எதுவும்
　　ஆற்றத் துணிவாரடி ! ௪

ஆய சுதருடுத்தி—அடி ! யென்
　　சுந்தரன் பண்டொருநாள்,
மேய பொழிலிடையே—அமுதை
　　வீசும் முழுநிலவில்,
நாயகன் மேலாணை—உரைத்தென்
　　நற்றிருக் கையடித்து,
நாயகி நீயென்றிட்டான்—சகியே !
　　நாள்பல சென்றதடீ ! ௫

இன்னும் வரக்காணேன்—சகியே!
என்செய்வ தென்றறியேன்;
அன்னமும் செல்லவில்லை;—அடி!யென்
ஆவி துடிக்குதடி!
மன்னவன் வாரானோ—சகியே!
வாழ்வெற்குத் தாரானோ?
என்னசெய் வேனடிநான்—சகியே!
யார்துணை என்றனக்கே! ௪

அமிழ்தும் புளிக்குதடி!—சகியே!
அதனிலும் மிக்கசுவைத்
தமிழும் கசக்குதடி!—சகியே!
சந்திரன் கொல்லுகிறான்!
கமழு தென்றலெனும்—மலையக்
காற்றும் வெதுப்புதடி!
சுமையும் பொருள்களெலாம்—சகியே!
தையலை வாட்டுதற்கோ! ௫

ஓதத் திரைக்கடல்தான்—சகியே!
உறங்கித் தொலைக்காதோ!
மாதுயர் நல்குமிந்த—சகியே!
மதியும் தொலையாதோ!
தீதை எனக்களிக்க—அடியே!
தென்றலேன் வந்ததடி!
காதலென் பதுநல்ல—உயிரைக்
கவரும் எமனோடீ! ௬

செந்தமிழ்த் தீங்குழலும்—சகியே !
　　செவிக்கு விடமெனக்கே !
அந்தி வருமாலை—அடி !யென்
　　ஆவி குடிக்குதடி !
அந்தக் குயிலோசை—அகத்தை
　　ஆட்டி அலைக்குதடி !
எந்த விதஞ்சகிப்பேன் !—சகியே !
　　என்னுயிர் வாராக்கால். ௯

மாழைக் கருவிழிகள்—உறங்கும்
　　வகையை யானறியேன் ;
ஏழை படுந்துயரை—அடி !யென்
　　இன்னுயிர்க் கியாருரைப்பார் ?
தோழி உரையாயோ !—சொலியென்
　　சுந்தரற் கூட்டாயோ !
வாழிநீ பல்லூழி—அடி !யென்
　　மருந்தை அழைத்திடுவாய். ௰



# 7. கிளிவிடு தூது

பாடிய தேதி :—ஆங்கீரச புரட்டாசி ௧-௳

**காதலி காதலனிடம் கிளியைத் தூது அனுப்புவது.**

பல்லவி

சொல்லி அழையாயோ!—கிளியே!
சொல்லிநீ கூவாயோ!

அனுபல்லவி

சிந்தை புகுந்தஎன் கண்—மணிக்குச்
சேயிழை யாள்நிலை செப்பிக் கலந்திடச் (சொல்லி)

கட்டழகி உனைநான்—கடல் மண்
காற்றுவின் உள்ளவரை—கனியே
விட்டுப் பிரிவதில்லை—எனவே
விண்டிட்ட பண்டை மொழியை மனங்கொளச் (சொ)

எடுக்கும் பிறவிதொறும்—இனியாய்
இணைபிரி யேனுனைநான்—எனவன்
நியம்பிய இன்னுரையை—எடுத்தே
ஏல மொழிந்திவண் எய்திக் கலந்திடச் (சொ)

நீலக் கடற்கரையில்—பாலை
நேரம் நிலவினிலே—அடியென்
சோலைக் குயிலேயுன்—கொடிய
துயர்களை வேனெனச் சொன்ன மொழியினைச் (சொ)

இளமையும் நலனுமையோ—வறிதே
இன்ப நுகர்ச்சியின்றி—அழுதே
கழிந்திடல் நன்றலப்புன்—கைம்மையைக்
கண்டதுண் டஞ்செய்வோம் என்றிட்ட வாய்மையைச் (சொ)

வழிகாட்டு வோம்நமர்க்கு—இதில்நீ
மனப்பயம் கொள்ளாதே—அழகே!
இழிவிதிற் சிறிதுமில்லை—எனவன்
நியம்பிய இன்னுரை தன்னை எடுத்துநீ (சொ)

அன்றென் அகங்கவர்ந்தே—இற்றைநாள்
அன்னியர் போலிருத்தல்—சிறிதும்
நன்றலச் சொன்னபடி—கனியை
நண்ணி நலங்குடித் துய்ந்திட வாவென்று (சொ)

அந்தி நிலவொளியில்—அலைக்கை
அடித்து நனிமுழக்கி—அலறிக்
கொந்தளிக் குங்கடலின்—கரையில்
கூறிய வாறிங்கு கூடிட வாவென்று (சொ)

சோலை யிடையொருநாள்—மலர்க்கை
தொட்டதன் மீதடித்து—தோகையே!
ஞாலம் நடுங்கமணம்—புரிவேன்
நாயகி நீஇனி என்றிட்ட நல்லுரை (சொ)

என்னலம் நாடியல—மகளிர்
இனம்நனி வாழ்ந்திடவே—எனஉள்
மன்னிய காதலற்கென்—மறுவில்
வாய்மை யுணர்த்தி மணம்புணர் வாவென்று (சொ)

காந்தியின் மெய்யடியார்—கழறும்
கட்டுரை கடத்தலில்லை—எனயான்
மாந்துமென் காதலனும்—களிற்றை
வந்துன் கரும்பினை உண்டு மகிழென்று (சொ)

# 8. கோவில் திறவு

பாடிய தேதி :—ஆங்கீரச புரட்டாதி உஉ-ௗ

எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

எங்குநிறை ஒருபொருளைச் சிலையிற் காணும்
இயல்புடையீர் நீரென்னில், இறையின் அன்பீர்!
பங்கமிலா இறைபடைப்பு,இப் பாரனைத்தும்
பல்லுயிரென் றறிவீரேல், பரமன் தன்னைப்
பொங்குபெரும் காதலொடு போற்றப் போதும்
புதல்வர்தமைப் பிறப்பதனால் புலையர் என்று
தங்குமிறை கோவிலிலே புகவி டாது
தடுத்திடுதல் அறமாமோ! தகவு தானோ!! க

'அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோய் கொண்ட
ஆவுரித்துத் தின்றுழலும் புலையர் ஏனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பர் ஆகில்"
கடவுளவர் கணெனன்ன, நாவின் வேந்தப்
புங்கவனன் றருளுமொழி மறந்தீர் கொல்லோ!
பொய்தீரன் பொடுபணியப் போவார்க் கெல்லாம்
திங்களிளங் குழவிவளர் செய்ய வேணிச்
சிவனுறையும் திருக்கோவில் திறப்பீர்! சீர்!! உ

அன்புசிவம் என்றுரைத்தார் அறிஞர் எல்லாம்;
அதுமெய்யே எனநீவீர் அறிவீர் ஆகில்,
என்பணிந்து கூத்தாடும் இறைவன் அன்பீர்!
இறையுருவம் கண்டுதொழ விரும்பு வோரைப்
புன்பிறப்பே காரணமாத் தடுத்தி டாதீர்!
புலையரெனப் பிறப்பிலுண்டோ? புனிதன் வாழும்
மன்பெரிய திருக்கோவில் வணக்கம் எல்லா
மக்களுக்கும் பொதுவாக வைப்பீர்! வாழ்வீர்!! ௩

கொண்டல்வணன் அடியவரைப் பழிப்போர் தாமே
குவலயத்துப் புலையரெனக் குறித்துப் பண்டு
தொண்டரடிப் பொடியாழ்வார் வாய்ம லர்ந்து
சொன்னவறம் தனைமறந்தீர்! தூய மாலைத்
தெண்டனிடச் செலுமடியார்த் தடுத்தி டாதீர்!
தீயபுலைப் பெயர்தாங்கீர்! திருமால் பாதத்
தொண்டுடையீர்! தடையின்றி அடியார்க் கெல்லாம்
தூயதிருக் கோயில்களைத் திறந்து தாரீர்! ௪

வம்பவிழ்தா மரையாளை மார்பில் வைத்த
வனப்புடைய உலகமெலாம் காக்க வல்ல
செம்பவள வாய்த்திருமால் அடியீர்! இந்தச்
செகமுழுதும் காக்குமொரு மாலே, நீங்கள்
நம்புபெரும் கோவிலிலே உள்ளான் என்னில்,
நாடாமல், பொருளின்றி அவன்ப யந்த
தம்புதல்வர் தமைத்தடுத்தல் தகுதி யாமோ?
தாழ்க்காது தடையெடுப்பீர்! சால்பு வேண்டின். ௫

கிள்ளைமொழிச் செய்யவாய் முல்லை மூரல்
கெண்டைவிழித் திங்கள்நுதற் கேடி லாத
வள்ளியெனும் குறக்கொடியைக் காதல் கொண்டு
மணம்புணர்ந்தான் மால்மருகன் ஆனார் தந்த
புள்ளிமயில் வேலனெனப் புராணஞ் சொல்வீர்!
பொற்கொடிவள் ளியைவைத்துப் பூசை செய்வீர்!
எள்ளியவள் தனைவளர்த்தோர் அவளைக் காண
ஏலாமல் தடைபுரிதல் இனிதோ சொல்வீர்! ௬

மோதுபெரும் வடிவேலைக் கையில் தாங்கி
முருகனவன் நிற்பதற்குப் பொருள்நீர் காணீர்!
தீதுடையார் தமையொறுக்க அன்றோ அந்தத்
திருக்கோலம்! தீண்டாதார் என்றே அன்னான்
காதலியின் சுற்றத்தார் முதலி னோரைக்
கருதிநீர் வீணாக ஆல யத்துள்
போதாற்குத் தடைபுரியும் தன்மை தன்னைப்
பொறுத்திடான்; விடுமிதனைப் புகழும் உண்டாம். ௭

உலகமெலாம் பெற்றெடுத்தாள் அன்னை யென்றே
உரைத்திடுவீர்! அவள்பயந்த மக்கட் குள்ளே
சிலரவள்வாழ் கோவிலுக்குள் சென்று தாயைத்
தெரிசித்தல் கூடாதென் றுரைப்பீர்! ஐயோ!
நலமொன்றும் அறியீர்கொல் நல்கு மாதா,
நடத்துவளோ வேறுபட மக்கள் தம்மை?
தலமேற்கா துமதுமொழி! தேவி கோவில்
தமைத்திறப்பீர்! எல்லோர்க்கும் தடையி லாமல் ௮

நந்தனா ரைத்தொழுவீர்! பாணாழ் வாரை
    நல்லரங்க நாதரொடுத் தாண்டார் என்று
சொந்தமாச் சொல்லிடுவீர்! அன்பு மேனித்
    தூயபெரும் கண்ணப்பர் ஆதி யோரை
வந்திப்பீர்! அன்னபெரி யோர்க ளெல்லாம்
    வந்துதித்த மரபினரைத் தீண்டார் என்பீர்!
இந்தமொழி ஏலாது! கோயில் எல்லாம்
    இனித்திறக்கத் தாழ்க்காதீர்! இறைவன் அன்பீர் ௯

பிறப்பதனால் தீண்டாதார் என்று கொண்டு
    பெரியதிருக் கோவிலெலாம் புகவி டாது
மறுத்திடுதல் அறமன்று! தீண்டல் ஆகா
    மாண்பில்செயல் வாய்ந்தோர்எக் குலத்தார் எனும்
புறக்கணிப்பீர்! மிக்கசெயல் பூண்டோர் யாண்டுப்
    போதரினும் புகவிடுமின்! பொருளில் செய்கை
அறக்களைமின்! பிறப்பதனால் தீண்டார் என்னல்
    அறிவுலகம் ஏறுதால்! அறிவை ஆள்வீர். ௧௦

# 9. சாதி

பாடிய தேதி:—ஆங்கீரச ஐப்பசி ௫-௨

நிலைமண்டில ஆசிரியப்பா

உலகினர் உயர ஒப்புயர் வில்லா
நலநிறை அறம்பொருள் நல்லின் பமெனும்
முப்பால் வகுத்து முழுதையும் அளந்த
செப்பருஞ் சீர்த்தித் திருவள் ளுவனெனும்
வையகம் போற்றும் மாண்பமை நல்லோன்!
பொய்யில் புலவன்! செய்தவன்! சீலன்!
கன்னலும் தேனும் காய்ச்சிய பாலும்
மன்னுதெள் ளமுதும் வளந்தரு கனியும்
இன்னிசைக் குழலோ டியாழின தொலியும்
அன்னதீஞ் சுவையுடை அனைத்தையும் வென்ற
சுந்தரம் இளமை தொன்மை நிறைந்த
செந்தமிழ் அன்னை இருவிழி இரண்டுள்,
அருள்பொழி ஒருவிழி அனையவன்! அன்னான்
தருதிருக் குறளெனும் தமிழ்மறை தன்னுள்
பிறப்பினில் ஒக்கும் பிறங்கும் உயிரெலாம்
சிறப்பினில் ஒவ்வா செய்தொழி லாலென
வழுத்தினன். இப்பெரும் மாநிலம் முழுதும்
தொழத்தகு புகழுடைத் தொன்மை காட்டி
இனிமையும் நீர்மையும் இயன்ற தமிழ்த்தாய்
தனதுமற் றொருகண் தானென நின்றோன்;

மாநிலம் போற்றும் வள்ளல் இராமன்,
நாநிறை கீர்த்தி நாமவேல் மன்னன்,
தயரதன் மனைவியர் தம்முள் கோசலைப்
பெயரிய பெருந்தவப் பெண்கொடி வயிற்றில்
அவதரித் தருளி யாண்டும் இணையிலாத்
தவமுடைத் தம்பியர் மூவரைப் பெற்று,
நலமுழு தார்ந்த நன்மலர்க் கொம்பை
புலநிறை மிதிலைப் பொன்னகர் மன்னன்
அருந்தவக் கொழுந்தை அனநடை மாதைக்
கரும்பினைப் பாகைக் கட்டியைக் கனியை
கிளியைப் பழித்த கேடிலா மொழியை
அளிமீன் வேல்மான் ஆர்ந்த கண்ணியைத்
திலகத் திங்கள் திருநுதல் அமுதை
இலையென் றுரைக்கும் இடைச்சிறு மானைச்
சிந்தூரப் பவளச் செய்யவா யாளைச்
சிந்தையொத் துக்கடன் செயுமிளை யாளை
ஆய்மயில் தன்னை அணங்கினை அணியைக்
காய்கனி நிறைந்த கானகக் குயிலைச்
சீதையென் பெயரிய செழுமலர்த் திருவைக்
காதலித் துயர்ந்த கனவில் லொடித்து,
மணம்புணர்ந் தயோத்தி மாநகர் வந்து,
துணையொடு வாழ்நாள் திருமுடி சூடக்
கொற்றவன் குறித்தமை நீக்கிடக் கருதிய
சிற்றவை கூற்றைச் சிரமேல் தாங்கி,
மற்றவள் பெற்ற மாமணி யனையான்
குற்றமொன் றற்றான் கோமுடி சூட

முன்னவன் இராமனே முழுமையும் உரியான்!
மன்னவன் அவனென மனமகிற் கொண்டான்!
தன்னுயிர் அனையதன் தமயனைப் பிரிந்தே
இன்பெதும் நுகரான்! இராசபோ கத்தை
முற்றிலும் வெறுத்து முடிச்சடை தாங்கி
நற்றவம் புரிந்த நானிலத் தீடிலாத்
தம்பி பரதனே தன்னுடை உரிமை
அம்புவி முழுமையும் ஆளுமா றளித்து,
பிரிவினுஞ் சுடுமோ பெருங்கா டெனச்சொலி
விரைவில் எழுந்து மென்திரு மேனியில்
மாவுரி தரித்து வந்தநற் றுணையொடும்
அருகக லாததன் அரும்பிறப் பான
இளையோன் என்னும் இலக்குவன் தன்னொடும்
உளைதல் தாயுற ஒருவன் வான்புக
வெங்கான் அடைந்து, வேடனைக் குரங்கை
மங்கையைப் பிரித்த வஞ்சகன் பின்வரும்
அரக்கன் ஒருவனை அகனமர் காதலின்
பெருக்கால் ஆண்டு, பிறப்பினில் வேற்றுமை
சிறிதுங் கொளாது, சீதையென் அணங்கை
உறுதுயர் ஓரா தொருதலைக் காமப்
பித்துக் கொண்டு பேதித் தெடுத்துக்
கொத்துக் குழலாள் கத்தக் கத்தத்
தன்னகர் கொடுபோய்த் தருவார் சோலையில்
புன்சிறை வைத்த பேர்த்தகம் அன்னான்!
அருநிலம் முழுதும் வென்றபேர் ஆற்றல்
பெருவரை யனையான்! பேரறம் அறியான்!

இலங்கையை ஆண்ட இராவணன் தன்னை
நலங்கெட வீழ்த்தி, நல்லுயிர் குடித்து,
தந்திரம் வலிமை சார்ந்த அவன்மகன்
இந்திர சித்தனை இரண்டுதுண் டாக்கி,
கிளையெலாம் மடித்துக் கேடிலாக் கிளியை
உளைவெலாம் ஓருரு வெடுத்ததை ஒத்துக்
கொடியவன் சிறைக்குள் சூழுறிய குயிலை
நெடியவன் இராமன் நேயனை யன்றி
ஆவிவே றில்லா அருங்கடல் அமுதை
ஓவியத் தெழுத ஒண்ணு உருவைப்
பூண்புகழ் பொறுத்த புண்ணிய மூர்த்தியைக்
காண்தவக் காதலால் உயிர்பிடித் திருந்த
தேவியை ஆவியைச் சீதையைத் திருவைப்
பாவியின் சிறைமீட்டு, அரியதம் பதிபோய்
மாகத மலையோர் மயிலுடன் பொலிந்து
விரவிய தென்ன மேவிய துணையோ
டரியணை அமர்ந்தே அரும்புவி போற்றத்
திருமுடி சூடிய சீர்த்திசால் இராமன்,
பெருங்கதை தன்னைப் பேசிய புலவோர்
இரும்புவி தன்னில் எத்துணை யோபலர்!
பற்பல மொழியிற் பகன்ற பண்புடை
நற்பெரும் புலமை நாவலர் திறனெலாம்
ஒருங்குடன் கவர்ந்தே ஒப்புயர் வின்றி
அருங்கவி புனைந்தோன்! அருமருந் தன்ன
உயர்பெருங் கொள்கை உறுமிடம் அறிந்து
தயரதன் மைந்தன் கதையினுள் சமைத்தோன்!

போதமார் சீர்த்திப் பொருவிலாக் கம்பன்
சாதியென் பதுசிறு நெறியெனச் சாற்றினன்.
பூமகள் உயிரெனப் பொலிந்திடு தமிழ்த்தாய்
நாமகள் மணிமுடி ஆகிய நற்றாய்
தாமரை யாளுறை தமிழகச் சீர்த்தாய்
மாமணி யானதன் மக்களில் சான்ற
புலமைமிக் குயர்ந்த பொருவறு சீர்த்திக்
கலைவல பெரியதம் காதலர் பல்லோர்
நாவினாற் றொடுத்த நன்மண மாலைப்
பாவினா ரங்கொள் பண்ணார் தமிழ்த்தாய்
அணிமணி வயிற்றில் அவதரித் தருளிப்
பணியே கடனெனக் கொண்டிடு பாங்கினர்
பல்லோர் பகர்ந்தனர் பிறப்பினில் சாதி
இல்லை யெனவே ஏலுமா றெடுத்து.
சக்தியைச் சுமந்த சைவக் கடவுளைப்
பக்திச் சுவைநனி சொட்டப் பாடிய
சேக்கிழான் என்னும் சீர்த்திசால் புலவன்
ஆக்கிய தொண்டர் அரும்புரா ணத்துள்
இறைவன் அடியார் யாரும் ஒன்றெனக்
குறைவறக் கொண்டனன்; நிறைவறி யாதார்
கூறிடு சாதி கொண்டு தொண்டரை
வேறு படுத்திலன்; வேறு வேறாப்
பலப்பல வகுப்பில் தோன்றிய பலரையும்
நலத்தொடு பாடினன் நல்லோன் பெரிதும்;
பொதுவகை யாவவன் புகன்றது நிற்க,
வதுவையும் உணவுமே வகுப்புப் பிரிவில்

தலைசிறந் துலகில் தாண்டவ மாடும்
நிலைகொல என்றே நெஞ்சம் நினைந்துகொல்!
அருமையில் அன்னான் ஆக்கிய தொண்டர்
பெரிய புராணம் என்னும் பெயரிய
உறுதிக் குயிர்விட ஒருப்படு பல்லோர்
நிறைகதை நூலுள் நேத்திரம் அன்ன
சான்றோர் இருவர் தனிக்கதை தன்னுள்
வான்றோய் புகழுடை வதுவையும் உணவும்
பிறப்பினாற் கொள்ளும் பேதைமை நீக்கி
அறப்பெருங் கொள்கையை அறுதி யிட்டனன் ;
தேவா ரந்தரு சிவமதத் தலைவர்
மூவருள் இருவர் மொய்புகழ் ஆளர்
ஒருவனா வரையன் ஒருவன் சுந்தரன்
இருவருள் முன்னோன் எண்பத் தோராண்
டிப்புவி வாழ்ந்துஇவ் இருநிலம் போற்ற
ஒப்புயர் வின்றி ஒழுக்கங் காத்து
நாமார்க் குங்குடி யல்லோம்! நண்ணோம்!
கோமாற் குறையும் கூற்றும் அஞ்சோம்!
பாராள் வேந்தர் பணிகொள மாட்டோம்!
சீரார்க் கஞ்சும் செயலெதும் இல்லை!
செப்புமின் றும்பிறைக் கெனச்சொலிச் செலுத்
அப்பனென் றுரைகெழு மவ்வே ளாளன் [திய
அப்பூ தியெனும் அந்தணன் அகத்தில்
ஒப்புடன் இல்லாள் ஊட்டிய அமுதை
மைந்தரின் நடுவில் மறையோன் மருங்கில்
பந்தியில் அமர்ந்து பாங்குடன் உண்டான்!

என அழ கொழுக இருங்கலப் புணவை
மனமது குளிர வழுத்தினன் ; நிற்க
மிடுக்குடன் இறையின் மெய்ப்புகழ் பாடும்
துடுக்குடைத் தம்பிரான் தோழன் சுந்தரன்
இருபெரும் மயிலே ஏற்றனன் திருமணம்
மருமலர்க் குழலுடை மாதரார் இருவரும்
சாதியில் அயலார்! தானோ மறையோன்!
காதலி இருவருள் கணிகையர் குலத்தில்
தோன்றினள் ஒருத்தி! மற்றொரு சுந்தரி
ஆன்றவே வேளாளர் அருங்குலம் வந்தாள்!
கற்பகக் கொம்பைக் காமனின் வாழ்வைப்
பொற்புடைப் புண்ணியப் புயற்குழ லாளை
விற்புரை பவளவாய் விரைமலர்க் கொடியை
அற்புதப் பாவையை அகங்கா தலித்துத்
திருமணம் புணர்ந்து, சின்னாள் சென்றபின்
ஒருபகல் ஆலயத் துற்றகட் டழகார்
கோவா மூத்தும் கூடும் சுரும்பார்
மேவாக் கொழுநகை மென்முகை யும்பொரு
யாழிசை மொழியாள் இருகுழை பிறழும்
மாழைநல் விழியாள் வனப்புடைச் சங்கிலி
தனைமணங் கண்டு, தையலார் கண்ணே
மனமகிழ் ஐம்புல வகையுடை இன்பம்
ஒருங்குண் டென்ன உலகுய அறம்புகல்
பெருங்கவி இன்பிற் பேசிய வாறு
கண்டும் கேட்டும் கட்டியும் உயிர்த்தும்
உண்டும் வாழ்ந்தான், உளனமர் காதல்

மாரனேர் வனப்புடை ஆரூர் நம்பி!
ஆரம்சிவனுக் களித்த புகழோன்!
ஆதிசைவரெனும் அந்தணர் குலத்தின்
சோதியா வந்து துலங்கிய அறிஞன்!
தம்பிரான் வலியத் தடுத்தாட் கொண்ட
நம்பன்! பாவை சங்கிலி நங்கையர்
ஆகிய தன்னுடை அருமைசால் காதலிப்
பாகினைப் பழிக்கும் பணிமொழி யாரை
இறைவனைப் பாடும் ஏதமில் பாக்களில்
மறவா துரைக்கும் மாண்குணம் மிக்கோன்!
எனுங்கருத் தமைந்த எழிலுறு நிகழ்ச்சியை
வனைந்தனன் சேக்கிழான் மாபுரா ணத்துள் ;
இவைகள் கிடக்க, இறையைப் பாடிய
தவமுடை மூவரில் சம்பந் தனெனும்
இயற்கையைப் பாடும் எழிலார் புலவன்!
நயப்பமை பெரியோன் மறைக்குலம் நண்ணினோன்!
தனக்கெனத் தான்தவம் முயன்று பெற்ற
வனக்கிளி யனையபூம் பாவை மானை
வளர்த்தனன் சிவநே சன்னெனும் வணிகனென்
கிளத்தினன் சேக்கிழான். கிளருமிவ் உலகின்
சாதிகள் சமைத்தது சார்தொழி லானும்
பேதுறு குணங்களி னாலுமென் பேசினன்
போரினில் நாற்குப் புகன்ற கீதையில்
காரியம் ஆர்ந்த கண்ணனென் றுரைப்ப.
பிறந்தமை கொண்டு மேல்கீழ் பேசல்
அறம்பொருள் காணா அறிவிலார் கொள்கை.

அந்தணர் என்போர் அறவோர் என்றே
செந்தமிழ்ப் புலவன் செப்பினன் பண்டு.
அந்தணர்க் குரிய அருங்கடன் ஆற்றா
திந்தமா நிலத்தில் யாவரும் அந்தணர்
எனச்சொலித் திரிவார்! இதுபொருள் பெறுமோ?
இனப்பெரு மைசொலும் எவருமவ் வாறே!
தாய்வயி றுதித்த தொன்றைச் சார்ந்தே
ஆய்வறி வின்றி அறைகுவர் சாதி!
உயர்ந்தவர் செய்கடன் ஒன்றையும் அறியார்!
உயர்ந்தவர் தாங்களென் றுரைப்பார் வாயால்!
படிப்படி யாகச் சாதிகள் பகர்ந்து
கெடுத்தனர் கீழோர் கேடிலா நாட்டை!
நானுயர் நற்குலன்! நீகீழ்ச் சாதி!
நானெது செயினும் நற்குலம் தாழேன்!
கேட்டார் வெறுக்கும் கீழ்த்தொழில் செயினும்
வாட்டமொன் றில்லை! வகுப்பு வகுப்பே!
என்றறி வின்றி இந்நிலத் தொருசார்
மன்றினில் ஏறியும் வழுத்துதல் வியப்பே!
தக்கவை அறியாத் தகையிலா ஒருகுழு
மக்கட் பிறவி வாய்த்தவர் தம்முள்
தீண்டா தாரெனச் சிலரைத் தள்ளலும்
காண்டலும் தீதெனச் சிலரைக் கழறலும்
அறிவோ! அறமோ! ஆற்றலோ! அழகோ!
இறைகோ வினுள் ஏகலும் ஆகாது
ஊர்ப்பொதுக் கேணி ஊருணி வீதி
சார்ந்திடல் ஆகா தவரெனத் தடுத்தல்

மெய்யறி விழந்த வீண்செயல் அன்றோ!
செய்தொழில் இழிவெனச் செப்புதல் உண்டேல்
தீண்டா தாரெனச் செப்பு குலத்தில்
மாண்குணம் மிக்க மக்களும் உள்ளார்!
பிறப்பினில் உயர்வெனப் பேசு குலத்தில்
மறத்தொழி லேசெய் மதியிலார் உள்ளார்!
புலைத்தொழில் செய்வோர் புலையரென் றிசைத்தால்
புலைத்தொழி லேசெய் புல்லோர் பல்லோர்
எல்லாக் குலத்தினும் இருப்பதை மறைத்தல்
ஒல்லா தாகலான் உறுதொழில் கருதிச்
செயல்நனி நாடிச் செய்கடன் ஆற்றின்
உயர்ந்தோர்க் கொள்ளலும் ஒழிந்தோர்த் தள்ளலும்
வேண்டுமப் பேச்சு வீண்பேச் சன்றோ!
தீண்டல் தகாதெனச் சிறிதும் ஓராது
வீணே மொழிதல் விந்தையுள் விந்தை!
காணும் கடல்சூழ் காசினி தன்னில்
ஆதியில் வகுப்பிலை! ஆர்தொழில் கொண்டு
சாதி வகுத்தனர் சார்சிலர் இடையில்!
பின்பு தொழிலெலாம் பிறழ்ந்தது! அஃதியற்கை!
இன்றதைக் கொண்டே இடர்ப்பட் டுழலாது
உறுமணம் உணவெலாம் வகுப்புரைத் தொழியாது
அறந்தலை நிற்றல் அறிஞரின் கடனே.

# 10. வீர நாடு

பாடிய தேதி:—ஆங்கீரச ஐப்பசி ௧௩-௨

## காவடிச் சிந்து

பூமகள் மாமுடி யாகமுன் னாளில்
        பொலிந்த வளநாடு—புகழ்
நாமகள் நன்னடம் ஆடக் கலைசெறி
        நம்தவ நன்னாடு. ௧

நினைப்பதற் குமெட்டா நீணெடு நாள்முனர்
        நிகரொன் றிலாதுவளர்—புவி
அனைத்தும் வியந்திட வீரம் உலகுக்கு
        அளித்த வளநாடு. ௨

மக்களுக் காகவே மன்னவர் வாழ்வென
        மனமதிற் கொண்டபுகழ்ப்—பெரு
மன்னவர் பற்பலர் ஆண்டிட வாய்ந்தது
        மாண்புடை நம்நாடு. ௩

வாட்டடங் கண்ணியர் இன்பம் துறந்துதம்
        வாழ்வுமண் தந்தைக்கா—விட்ட
வீட்டுமன் என்றபேர் வீரம் செறிதவ
        மேலவன் சீர்நாடு. ௪

சிறுமை பலப்பல செய்த சிறியவர்
தீமையன் னாட்பொறுத்த—நிறை
பொறுமை யுடைய தரும னெனும்புகழ்ப்
புண்ணியன் பொன்னாடு. ரு

தொட்டுத் துரோபதை மாதைத் துகிலுரி
துச்சா தனக்கொடியோன்—உடல்
பட்டிடச் செய்துசெந் நீர்குடிப் பேனெனும்
பார்த்திபன் வாழ்நாடு. சு

காதலி பேரெழில் கண்டவ ளைப்பெறக்
கடமைச் செயல்களெல்லாம்—செய்த
பாதகர் தங்களை மோதி அழித்தநற்
பற்குனன் வாழ்நாடு. எ

தொடையில் இருத்திடச் சொன்ன சுயோதனன்
துண்டு படுங்களத்தே—அவன்
உடலுகு நீர்கொடு குழல்முடிப் பேனெனும்
ஒருமறப் பெண்ணாடு. அ

வஞ்சனை செய்துதன் தேவி தனைச்சிறை
வைத்த இராவணனை—ஒரு
தஞ்ச மறமடித் திட்ட தயாதன்
தன்மகன் சீர்நாடு. கூ

தாயுரை கொண்டுதந் தைதரு தாரணி
தன்னை வெறுத்துமுன்னோன்—தனை
மேயவன் நல்லடி மாமுடி சூடிய
மேற்பா தன்னாடு. க0

சோரனுக் குத்துணை செய்த வவன்மகன்
தொல்லிந் திரசித்தன்—எனும்
வீரன் தலைதனை வீழ்த்தும் இளையவன்
வீரம் செறிநாடு. ௧௧

தன்னொரு மைந்தனின் மார்பத னிற்றேர்
தான்விடுத் தேமடித்த—நீதி
மன்னவன் மாமுறை கண்ட மநுவெனும்
மாண்புடை யானாடு. ௧௨

பெற்ற மகனுயிர் விட்ட களம்போய்ப்
பிணக்குவை தான்புரட்டி—மகன்
இற்ற உயர்ச்சிகண் டின்றதி னும்மகிழ்
ஏந்திழை யாணாடு. ௧௩

தன்கண வன்தவ றில்லா தவனெனச்
சபையில் வழக்குரைத்துத்—தமிழ்
மன்னவ னைப்பழி வாங்கிய கண்ணகி
மங்கை பெருநாடு. ௧௪

குற்றமில் கோவலன் தன்னைக் கொலைசெய்
கொடுமை உணர்ந்தவுடன்—உயிர்
சற்றுந் தயங்கா தழித்த பெரும்புகழ்த்
தமிழ்க்கோன் அருநாடு. ௧௫

புறவின் பொருட்டுத் தசையரிந் திட்ட
புகழுடை மன்னவனும்—சிபி
அறமுடைத் தண்மையன் ஆண்ட சிறப்புடை
அணிப்பா தநாடு. ௧௬

காதல் யசோதரை இன்பக் கடலைக்
கடந்த பெருந்திருவை—விட்டுப்
போதி யிருந்தறம் ஓதியநாதனெம்
புத்தன் தவநாடு. ௧௭

பிறப்புரி மைசுய ஆட்சி யெனுமறை
பேசிய போறிஞன்—உயர்
சிறப்புடைப் பாலகங் காதரன் என்றவெம்
திலகனின் தாய்நாடு. ௧௮

ஒன்றுமின் றமென்றும் அவனி தனிலிணை
அருமை எனஉயர்ந்த—அறம்
நன்றறி நாயகன் மோகனதாசனெம்
நற்றவன் வாழ்நாடு. ௧௯

எல்லையில் குண்டுகள் இல்லாப் பழையநாள்
எவரும் நடுங்கிடவே—போரில்
வில்லில் சரந்தொடுத் துலகு கலக்கிய
வீரர் மலிநாடு. ௨௦

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.



| தொடர் எண். | பாட்டு. | பதிகம். | பக்க எண். |
|---|---|---|---|
| க | அகமும் புறமும் | தமிழ்மொழி | கச |
| உ | அங்கமெலாம் | கோவில் திறவு | உகூ |
| ௩ | அச்சமென்ப | பேரிகை | எ |
| ச | அடிமைவாழ்வு | பேரிகை | சு |
| ரு | அந்தணரென் | தமிழ்மொழி | கரு |
| சு | அந்திநில | கிளி விடுதூது | உஎ |
| எ | அமிழ்தும் | காதல் மறுமணம் | உச |
| அ | அரியஉல | எந்நாட் கண்ணி | ரு |
| கூ | அருளைய றத்தை | தமிழ்மொழி | கரு |
| க0 | அலகிலா | எந்நாட் கண்ணி | ௩ |
| கக | அறந்தழைக்க | பேரிகை | அ |
| கஉ | அன்பு கடவுள் | தமிழ்மொழி | கஅ |
| க௩ | அன்பு சிவம் | கோவில் திறவு | ௩0 |
| கச | அன்பு மறத்தை | தமிழ்மொழி | கரு |
| கரு | அன்று புத்தன் | இந்தியா | கஉ |
| கசு | அன்றுமின்றும் | வீரநாடு | சசு |
| கஎ | அன்றென் | கிளி விடுதூது | உஎ |
| கஅ | ஆணுயர்வு | எந்நாட் கண்ணி | ச |
| ககூ | ஆத்திசூடும் | தமிழ்மொழி | கஅ |
| உ0 | ஆயிரம்பல் | தமிழ்மொழி | க௩ |
| உக | ஆயுமறிவி | தமிழ்மொழி | உ0 |
| உஉ | ஆழிகிடக்கு | எந்நாட் கண்ணி | உ |
| உ௩ | இத்தரைக்கு | தமிழ்மொழி | கச |
| உச | இத்தரையில் | எந்நாட் கண்ணி | ச |
| உரு | இந்தியாவை | விடுதலை | க0 |
| உசு | இருவர் இணைந்து | எந்நாட் கண்ணி | ச |

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.


| தொடர் எண். | பாட்டு. | பதிகம். | பக்க எண். |
|---|---|---|---|
| ௨௭ | இளமையும் | கிளி விடுதூது | ௨௭ |
| ௨௮ | இறை சிவனென் | தமிழ்மொழி | ௧௯ |
| ௨௯ | இனிமை நீர்மை | தமிழ்மொழி | ௧௩ |
| ௩௦ | இன்னும் வரக் | காதல் மறுமணம் | ௨௪ |
| ௩௧ | உணர்ச்சிதன்னை | விடுதலை | ௧௧ |
| ௩௨ | உம்பர் | எந்நாட் கண்ணி | ௪ |
| ௩௩ | உயர்வு | பேரிகை | ௮ |
| ௩௪ | உயிரினும் | இந்தியா | ௧௨ |
| ௩௫ | உரிமை | பேரிகை | ௭ |
| ௩௬ | உருகியுருகி | தமிழ்மொழி | ௨௦ |
| ௩௭ | உலகந்தன்னை | இந்தியா | ௧௨ |
| ௩௮ | உலகமெலாம் | கோவில் திறவு | ௩௧ |
| ௩௯ | உலகம் செழித் | எந்நாட் கண்ணி | ௩ |
| ௪௦ | உலகினர் | சாதி | ௩௩ |
| ௪௧ | உளமிருக்கும் | தமிழ்மொழி | ௨௦ |
| ௪௨ | எக்குலத்தில் | எந்நாட் கண்ணி | ௩ |
| ௪௩ | எங்கள் உரிமை | விடுதலை | ௧௦ |
| ௪௪ | எங்கள் நாட்டின் | விடுதலை | ௧௦ |
| ௪௫ | எங்கள் நாட்டை | விடுதலை | ௧௧ |
| ௪௬ | எங்கள் நாட்டை | விடுதலை | ௧௦ |
| ௪௭ | எங்கள் நாட்டை | பேரிகை | ௬ |
| ௪௮ | எங்கும் நிறை | கோவில் திறவு | ௨௯ |
| ௪௯ | எடுக்கும் பிறவி | கிளி விடுதூது | ௨௬ |
| ௫௦ | எந்திர பீ | பேரிகை | ௭ |
| ௫௧ | எந்திர பீ | விடுதலை | ௧௧ |
| ௫௨ | எல்லையில் | வீர நாடு | ௪௬ |
| ௫௩ | எனக்குத் தமிழ் | எந்நாட் கண்ணி | ௨ |
| ௫௪ | என்றைக்கேனும் | பேரிகை | ௭ |

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.


| தொடர் எண். | பாட்டு. | பதிகம். | பக்க எண். |
|---|---|---|---|
| ௫௫ | என்னகம் தொட்ட | காதல் மறுமணம் | ௨௨ |
| ௫௬ | என்னலம்நாடி | கிளி விடு தூது | ௨௮ |
| ௫௭ | ஏலநீதி | தமிழ்மொழி | ௧௪ |
| ௫௮ | ஏழை இல்லை | பேரிகை | ௬ |
| ௫௯ | ஒக்கும் பிறப்பில் | தமிழ்மொழி | ௧௫ |
| ௬௦ | ஒன்றறியா | எந்நாட் கண்ணி | ௨ |
| ௬௧ | ஓதத் திரைக்கடல் | காதல் மறுமணம் | ௨௪ |
| ௬௨ | கடமை | எந்நாட் கண்ணி | ௪ |
| ௬௩ | கட்டழகி | கிளி விடு தூது | ௨௬ |
| ௬௪ | கண்டார் மருள | எந்நாட் கண்ணி | ௪ |
| ௬௫ | கண்ணகி கோ | தமிழ்மொழி | ௧௭ |
| ௬௬ | கத்தர் பெருக | பேரிகை | ௮ |
| ௬௭ | கரும்பும் தேனும் | தமிழ்மொழி | ௨௧ |
| ௬௮ | கரைபொருந்த | தமிழ்மொழி | ௧௪ |
| ௬௯ | கலை வளர்த்தே | இந்தியா | ௧௨ |
| ௭௦ | கல்லும் மரனும் | தமிழ்மொழி | ௧௮ |
| ௭௧ | கன்னற்சாறும் | தமிழ்மொழி | ௧௯ |
| ௭௨ | காதலி | வீர நாடு | ௪௪ |
| ௭௩ | காதல் புரி | எந்நாட் கண்ணி | ௨ |
| ௭௪ | காதல் யசோ | வீர நாடு | ௪௬ |
| ௭௫ | காதல் வீரம் | இந்தியா | ௧௨ |
| ௭௬ | காந்திமேல் | காதல் மறுமணம் | ௨௨ |
| ௭௭ | காந்தியின் | கிளி விடு தூது | ௨௮ |
| ௭௮ | காந்தி வந் | பேரிகை | ௭ |
| ௭௯ | கிள்ளை மொழி | கோவில் திறவு | ௩௧ |
| ௮௦ | குதலைச் சிறு | எந்நாட் கண்ணி | ௨. |
| ௮௧ | குழலும் யாழும் | தமிழ்மொழி | ௧௭ |
| ௮௨ | குற்றமில் | வீர நாடு | ௪௫ |

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.


| தொடர் எண். | பாட்டு. | பதிகம். | பக்க எண். |
|---|---|---|---|
| அ௩ | கொடுமையான | பேரிகை | எ |
| அ௪ | கொட்டுகொட்டு | பேரிகை | கூ |
| அரு | கொண்டல்வண்ணன் | கோவில் திறவு | ௩0 |
| அ௬ | கொத்தடிமை | எந்நாட் கண்ணி | ௩ |
| அஎ | கோடிபடைத் | எந்நாட் கண்ணி | உ |
| அஅ | சரிநிகராய் | எந்நாட் கண்ணி | க |
| அகூ | சாதி சிறிய | தமிழ்மொழி | க௬ |
| கூ0 | சாதியால் | எந்நாட் கண்ணி | உ |
| கூக | சாலிவா | எந்நாட் கண்ணி | க |
| கூஉ | சிறுமை | வீர நாடு | ௬௪ |
| கூ௩ | சின்னஞ் சிறு | எந்நாட் கண்ணி | ௪ |
| கூ௪ | சீர்திருத்தம் | தமிழ்மொழி | உ0 |
| கூரு | செந்தமிழ்த் | காதல் மறுமணம் | உரு |
| கூ௬ | செல்லுமிட | எந்நாட் கண்ணி | ரு |
| கூஎ | செவியில் தேனை | தமிழ்மொழி | க௬ |
| கூஅ | சொல்வில் தேனும் | தமிழ்மொழி | கஎ |
| கூகூ | சோறுனுக்கு | வீர நாடு | ௪ரு |
| க00 | சோலையிடை | கிளி விடுதூது | உஅ |
| க0க | தகவறியா | எந்நாட் கண்ணி | க |
| க0உ | தன் கணவன் | வீர நாடு | ௪ரு |
| க0௩ | தன்னொரு | வீர நாடு | ௪ரு |
| க0௪ | தாயுனை | வீர நாடு | ௪௪ |
| க0ரு | தாய்விலங்கு | விடுதலை | கக |
| க0௬ | திசை குலுங்க | பேரிகை | ௬ |
| க0எ | திறமுணர்ந்து | தமிழ்மொழி | கஅ |
| க0அ | திறவுமணி | தமிழ்மொழி | கஎ |
| க0கூ | துன்பம் செய்வோர் | பேரிகை | கூ |
| க௧0 | தூண்டும் அறி | எந்நாட் கண்ணி | ௩ |

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.


| தொடர் எண். | பாட்டு. | பதிகம். | பக்க எண். |
|---|---|---|---|
| ௧௧௧ | தூய கதருடுத்தி | காதல் மறுமணம் | ௨௫ |
| ௧௧௨ | தெய்வ மணக்க | தமிழ்மொழி | ௧௯ |
| ௧௧௩ | தேமாங்கனி | எந்நாட் கண்ணி | ௩ |
| ௧௧௪ | தேவர் குறள் | எந்நாட் கண்ணி | ௪ |
| ௧௧௫ | தேவைப் பாடும் | தமிழ்மொழி | ௧௮ |
| ௧௧௬ | தேவை மாலை | தமிழ்மொழி | ௧௮ |
| ௧௧௭ | தொடையில் | வீர நாடு | ௪௪ |
| ௧௧௮ | தொட்டுத் | வீர நாடு | ௪௪ |
| ௧௧௯ | தொழில் வளர | பேரிகை | ௯ |
| ௧௨0 | தொன்றுதொட்டு | இந்தியா | ௧௨ |
| ௧௨௧ | நந்தனாரை | கோவில் திறவு | ௩௨ |
| ௧௨௨ | நலத்துடனே | எந்நாட் கண்ணி | ௫ |
| ௧௨௩ | நலமனைத்தும் | தமிழ்மொழி | ௧௫ |
| ௧௨௪ | நல்ல தமிழில் | தமிழ்மொழி | ௨௧ |
| ௧௨௫ | நல்ல பொரு | எந்நாட் கண்ணி | ௫ |
| ௧௨௬ | நனியிப் பூவில் | தமிழ்மொழி | ௧௬ |
| ௧௨௭ | நாகரிகம் | இந்தியா | ௧௨ |
| ௧௨௮ | நாடு புகழும் | தமிழ்மொழி | ௧௬ |
| ௧௨௯ | நாட்டை மறந்து | எந்நாட் கண்ணி | ௧ |
| ௧௩0 | நிலையில் | எந்நாட் கண்ணி | ௫ |
| ௧௩௧ | நினைப்பதற் | வீர நாடு | ௪௩ |
| ௧௩௨ | நீலக்கடல் | கிளி விடுதூது | ௨௭ |
| ௧௩௩ | நுண் மணல் | எந்நாட் கண்ணி | ௫ |
| ௧௩௪ | பச்சிளங்கன்னி | காதல் மறுமணம் | ௨௩ |
| ௧௩௫ | பட்டம்பதவி | பேரிகை | ௮ |
| ௧௩௬ | பண்டைநாளில் | தமிழ்மொழி | ௧௩ |
| ௧௩௭ | பராவு தமிழில் | தமிழ்மொழி | ௨0 |
| ௧௩௮ | பல்லோரும் | எந்நாட் கண்ணி | ௩ |

# செய்யுள் முதற்குறிப்பு அக்ராதி.


| தொடர் எண். | பாட்டு. | பதிகம். | பக்க எண். |
|---|---|---|---|
| கஙகூ | பழய வழக்க | எந்நாட் கண்ணி | உ. |
| கச௦ | பித்துக்கொண் | எந்நாட் கண்ணி | உ |
| கசக | பிறந்தபொழுதே | விடுதலை | க௦ |
| கசஉ | பிறந்தார் | எந்நாட் கண்ணி | ௩ |
| கசங | பிறப்பதனால் | கோவில் திறவு | ௩உ |
| கசச | பிறப்பில் | எந்நாட் கண்ணி | ச |
| கசரு | பிறப்புரி | வீர நாடு | சசு |
| கசசு | பிறர்க்குரியார் | எந்நாட் கண்ணி | ச |
| கசஎ | புதுமைகொண்ட | தமிழ்மொழி | கசு |
| கசஅ | புத்தனருள் | தமிழ்மொழி | கஎ |
| கசகூ | புலமைதன்னில் | தமிழ்மொழி | கச |
| கரு௦ | புலைமைத் தொழில் | எந்நாட் கண்ணி | உ |
| கருக | புலையரொன்று | பேரிகை | அ |
| கருஉ | புறவின் | வீர நாடு | சரு |
| கருங | புனிதமறியாது | எந்நாட் கண்ணி | உ |
| கருச | பூதான் அளப் | எந்நாட் கண்ணி | ௩ |
| கருரு | பூமகள் | வீர நாடு | ச௩ |
| கருசு | பெண்ணை யிழிப் | பேரிகை | அ |
| கருஎ | பெரிதும் வளரும் | தமிழ்மொழி | கரு |
| கருஅ | பெரியமாலே | தமிழ்மொழி | ககூ |
| கருகூ | பெற்ற மகன் | வீர நாடு | சரு |
| கசு௦ | மக்களுக் | வீர நாடு | ச௩ |
| கசுக | மண் குளிர | எந்நாட் கண்ணி | க |
| கசுஉ | மண்ணிலெங் | தமிழ்மொழி | க௩ |
| கசுங | மதியினர்கள் | தமிழ்மொழி | உ.௦ |
| கசுச | மருவுகளவும் | தமிழ்மொழி | கச |
| கசுரு | மாதடிமை | எந்நாட்கண்ணி | ரு |
| கசுசு | மாலின்பாதத் | தமிழ்மொழி | சக |

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி.



| தொடர் எண். | பாட்டு. | பதிகம் | பக்க எண். |
|---|---|---|---|
| ௧௬௭ | மாழைக் கரு | காதல் மறுமணம் | ௨௫ |
| ௧௬௮ | முடிசூடி | எந்நாட் கண்ணி | ௩ |
| ௧௬௯ | மூக்கடைக்க | எந்நாட் கண்ணி | ௪ |
| ௧௭௦ | மூல நூலை | தமிழ்மொழி | ௧௬ |
| ௧௭௧ | மூவரன்று | தமிழ்மொழி | ௧௯ |
| ௧௭௨ | மேவு மின்பம் | தமிழ்மொழி | ௧௭ |
| ௧௭௩ | மோதுபெரும் | கோவில் திறவு | ௩௧ |
| ௧௭௪ | யார்க்கும் நாங்கள் | தமிழ்மொழி | ௧௯ |
| ௧௭௫ | வசையின்றி | எந்நாட் கண்ணி | ௩ |
| ௧௭௬ | வஞ்சனை | வீர நாடு | ௪௪ |
| ௧௭௭ | வம்ப விழ்தா | கோவில் திறவு | ௩௦ |
| ௧௭௮ | வழி காட்டுவோம் | கிளி விடுதூது | ௨௭ |
| ௧௭௯ | வள்ளுவனென் | இந்தியா | ௧௨ |
| ௧௮௦ | வன்சிறைக்கு | விடுதலை | ௧௧ |
| ௧௮௧ | வாட்டடங் | வீர நாடு | ௪௩ |
| ௧௮௨ | வாய்த்த | எந்நாட் கண்ணி | ௧ |
| ௧௮௩ | வாராதொழி | காதல் மறுமணம் | ௨௩ |
| ௧௮௪ | வானமீன் | இந்தியா | ௧௨ |
| ௧௮௫ | விடுதலைக்கு | பேரிகை | ௮ |
| ௧௮௬ | விலைமதிப்பில் | இந்தியா | ௧௨ |
| ௧௮௭ | வீயாப் புக | எந்நாட் கண்ணி | ௧ |
| ௧௮௮ | வீரங்காதல் | தமிழ்மொழி | ௨௧ |
| ௧௮௯ | வீறோடா | எந்நாட் கண்ணி | ௨ |
| ௧௯௦ | வேந்தன் | எந்நாட் கண்ணி | ௪ |
| ௧௯௧ | வைத்தபெரு | எந்நாட் கண்ணி | ௩ |

# முன்னுரை.

தீந் தமிழ்ச் செல்வர்களே!

எனக்கு அரசாங்கம் கருணை கூர்ந்து அளித்த அமைதி வாழ்க்கையில் வேலூர்ச் சிறையில் செய்த பாக்களில் "தாலாட்டும் கும்மியும்" என்ற ஒரு நூலை முதலாவதாகவும் "காந்தி பதினெண்பா" என்று இன்னொரு நூலை இரண்டாவதாகவும் "புதுமைப் பாக்கள்" என்னும் மற்றொரு நூலை மூன்றாவதாகவும் வெளியிட்டேன். இந்த நூல் சிறைப்பாக்களின் நான்காவது வெளியீடு. இதற்குக் "காந்தி இருபா" எனப்பெயர் தந்திருக்கின்றேன்.

காந்தியைப் பற்றிய இருபாக்கள் இதில் அடங்கியுள்ளன. 1. "கலித்துறை அந்தாதி" 2. "நான்மணி மாலை" பண்டையோர் முறைப்படி முன்னையது நூறு பாட்டு; பின்னையது நாற்பது பாட்டு. முன்னது முற்றும் கட்டளைக் கலித்துறை கொண்டது; பின்னது வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் நான்கும் கொண்டது. பாக்களுள் கட்டளைக் கலித்துறை பாடுவது கொஞ்சம் கடினம். அதற்கு யாப்பிலக்கணப்படி கணக்குகள் நிறைய உண்டு. அது காரணமாக எளிய சொற்களிலேயே ஆக்க எவ்வளவோ முயன்றுங்கூடக் கொஞ்சம் அருஞ்சொற்களும் ஆங்காங்கு விழுந்திருக்கலாம். அதற்கு மன்னித்தல் புதுமைத் தமிழர் கடன்.

காந்தி கலித்துறை அந்தாதி என்பதற்குக் காந்தியின் மேற் சொல்லப்பட்ட கலித்துறை வடிவமான அந்தாதிப் பா என்பது பொருள். அந்தத்தை ஆதியாக உடையது அந்தாதி. இவ் அந்தாதியில் துறைப் பாக்கள் நிறைய வைத்திருக்கிறேன். பழைய துறைகளைப் புதுப்பித்தும் புதிய துறைகளைப் புகுத்தியும் இருக்கின்றேன். "துறை" என்பதற்கு வழி என்று பொருள். பிறர் கூற்றாகப் பாடும் பாக்கள் துறைப் பாக்கள் என்னும் பெயர் பெறுகின்றன. நான்மணி மாலை என்பது, வெண்பா கலித்துறை விருத்தம் அகவல் என்ற நான்கு மணிகளால் தொடுக்கப்பட்ட மாலை என விரியும். இதுவும் அந்தாதித் தொடரான பாக்களே. இந்த நான்மணி மாலையையும் காந்தியடிகட்கு அணிகின்றேன். "இவன் காந்திக் கிறுக்கன்" என்று நினைப்போர் நினைக்க! இந்த உலகத்தில் பாமாலை சூட்டத் தகுதியுள்ளார் ஒருவராவது உண்டு என்றால் அவர் காந்தியடிகளே என்பது என் கருத்து.

சிறியேன் அந்தாதி என் இனிய தமிழர் உள்ளத்தை இன்பக் கடலாட்ட வேண்டும் என்பதும் ஏழையின் நான்மணி மாலை எல்லாத் தமிழர் நாவினும் அணி செய்யப்பெற வேண்டும் என்பதும் எளியேனின் பேராசை. தமிழ்த் தாய் வாழ்க! தமிழர் வாழ்க!

பவ மாசி உருவ
சென்னை.

ராய. சொக்கலிங்கன்.

# உள்ளுறை


| தொடர் எண். | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| | **௧. காந்தி கலித்துறை யந்தாதி** | |
| ௧. | பாயிரம் | ௩ |
| ௨. | நூல் | ௫ |
| ௩. | செய்யுள் முதற் குறிப்பு | ௨௫ |
| ௪. | துறைகளின் விளக்கம் | ௨௭ |
| ௫. | துறைகளின் விபரம் | ௨௯ |
| | **௨. காந்தி நான்மணி மாலை** | |
| ௬. | பாயிரம் | ௩௩ |
| ௭. | நூல் | ௩௫ |
| ௮. | செய்யுள் முதற் குறிப்பு | ௪௯ |

# காந்தி கலித்துறை யந்தாதி

## பாயிரம்

### அறுசீர் ஆசிரிய விருத்தம்.

நிலத்திலுயர் தனிக்காந்தி நிலைத்தபுகழ்
    தனைநாட்டி நெடுநீர் சூழ்இத்
தலத்திலுயர் இனித்தசுவைத் தமிழ்மொழியில்
    கட்டளைகொள் தனிப்பா தன்னில்
கலித்துறையந் தாதியினைக் கட்டுரைத்தான்
    தண்ணளிசேர் காந்தி பாதம்
தலைக்கொளுநற் காரைநகர் ராயசோக்க
    லிங்கன்அருந் தமிழன் மாதோ. க

செய்தளித்த நாள்சகமா யிரத்தெண்ணூற்
    றைம்பத்தைந் ததனிற் சேர்ந்த
பெய்தவத்துப் பாரதத்தாய் விடுதலைக்குப்
    போராடிப் பெரியோர் எல்லாம்
கைதவத்தார் சிறையுறையும் கவினுங்கீ
    ரசஆடி கடைசி வாரம்
செய்தளித்த இடம்வேலூர்ச் சிறந்தபெரும்
    காவலமை சிறையே யம்மா. உ

# காந்தி கலித்துறை அந்தாதி

## கட்டளைக் கலித்துறை

### காப்பு

ஏய்ந்த பெருமை இனிமை செறிதமிழ் இன்னுமிக
வாய்ந்த அருளுரு வாகி நிலம்வரு வள்ளல்புகழ்க்
காந்தி கலித்துறை அந்தாதி பாடக் கருத்திலுறை
ஆய்ந்த அறிவிறை யான கடவுள் அருளுகவே.

### நூல்

அருளை அறத்தை அருமையை அன்பை அணிபெறவே
இருள்பொய் களவு இழிவு கொலைகள் இணையுலகில்
பெருக அருளு பெரிய புகழார் பெருமைசெறி
கருணை யுருவெனும் காந்தி பதத்தைக் கருதுவனே. க

கருது வனவுயர் காந்தி யறமெனில் காசினியில்
பெருகு வனநலம் யாவும்; இலைதடை; பீடுடனே
உருகி உளங்கசிர் தொண்மை நிலைபெற உத்தமனின்
மருவு செயல்வழி மன்னல் பெருமித வாழ்வதுவே உ

மன்னும் உலகில் வலிய அரசுறு மன்னரையும்
இன்னல் தருமவர் எண்ணில் பரிசனர் யாவரையும்
மின்னல் எனஎரி வீசு படையையும் மேன்மைநிறை
கன்னல் மொழிபகர் காந்தி யடியார் கருதிலரே ங

அடிமை எனுங்குறை ஆழி கிடக்கும் அகன்றிடுமிப்
படியில் ஒழிந்திடப் பாரதத் தாயரிப் பீடமுற்று
முடிசுமந் தின்னிசை மொய்க்க அரசு முறைபுரியக்
கடுந்தவம் செய்திடும் காந்தித் தொடர்பு கடனதுவே ௪

## கடமையிற் பிரிதல்

கடனறிந் தேன்;காந்தி கண்ட அறப்போர் தனிற்கலந்து
திடனுடன் நின்று திருப்பணி செய்வன்; சிறைபுகுவன்;
உடனுறைந் தன்பரோ டொன்றிய காதல் புரிந்திடுதற்
கிடனிலை இந்நாள்! இதுபொறுப் புக்கடன் ஏந்தலுக்கே ௫

## கிளி விடு தூது

ஏந்தல் பணிதலை ஏற்றனன்; அன்னை இடர்துடைக்கப்
போந்தன் அருஞ்சிறை; புண்ணிய வாழ்விங்கு பூணுகின்றேன்.
காந்தள் வளைக்கரக் காதல் செயுமென் கரும்பினிடம்
ஏய்ந்த எனதுநல் லின்சுகம் சொல்க! இளஞ்சுகமே ௬

இளங்கிளி பாடிட எம்மான் பெரும்புகழ் இன்சுவைத்தேன்
அளைந்தசொற் பூவை அணிபெறக் கேட்டிட ஆடுமயில்
உளங்கனிந் தாடிட ஒண்சிறை வண்டுகள் உம்மெனவே
வளங்கெழு மென்பாண் மிழற்றிடு நாட்டெழில் மல்குகவே ௭

## வண்டோச்சி மருங்கணைதல்

காடு செழித்திட நண்ணும் முரட்டுக் கதர்சுமந்து
வாடிய சிற்றிடை நொந்தரும் என்கண் மணிவருந்தக்
கூடி யவர்நறுங் கூந்தல் மலர்மொய்த்துக் கொல்லுகின்றீர்!
கேடு வருமினி ஓடுமின்! வண்டீர்! கிளிமொழிக்கே ௮

கிளிபோன் மொழியார்! மழைநேர் குழலார்! கிளருமெழில்
வளைபோன் மிடற்றார்! மயில்நேர் இயலார்! வரைதனக்கும்
இளையார்! கணக்கில் இளையார் சிறைக்குள் எழில்வருந்தி
ஒளியே! கடமை உணர்ந்து பெருந்தவம் ஒன்றினரே ௯

## தென்றலை வினுதல்

ஒன்றிக் கடமை உணர்ந்து சிறைவாழ் ஒருசிறியேற்
கென்றன் இனிய இருந்தமிழ்ப் பாண்டி தனிலுயர்ந்த
மன்றப் பொதியில் மலைச்சாரந் தளைந்து மணம்பரப்பும்
தென்றற் சிறுகால் திருவே! எமர்நலஞ் செப்புகவே ௰

## தென்றற்குக் கட்டளை

செப்புக தென்றலஞ் செல்வா! சிறந்த உடன்பிறந்த
ஒப்புயர் வில்லா ஒருதனி ஒண்டீஞ் சுவைத்தமிழில்
மெய்ப்புகழ் இப்புவி யெங்கணும் வீசிடு காந்திதனை
அப்புக! அன்பருக் காவி யனைய அருமருந்தே கக

அருமருந் தன்னவன் அன்பின் உலகம் அடைபிணிக்கு!
பெருமகன் புத்திரி பாய்க்குயர் பாரதப் பேரனைக்கே
ஒருமகன்! கஸ்தூரி ஒள்ளிய காதலன்! என்னனையார்
கருதிட மன்னிடு கத்தரின் கர்த்தனற் காந்தியரோ கஉ

## கலைமான் வினுதல்

கத்தருடுத்தியே கைராட் டுருட்டுநற் காரிகையீர்!
இத்தரை காண உளங்குடி ஏறுமென் மோகனன்வாழ்
சித்தங் குலைப்பது! நுங்கண் பழிப்பது! சீர்பெறுமென்
முத்தம் பெறுவது! மொய்கலை மானிங்கு வந்ததுண்டோ? கங

### இதுவுமது

மானேர் விழியீர்! மயில்நேர் எழிலீர்! மலையுறையும்
தேனேர் மொழியீர்! புயல்நேர் குழலீர்! திருவளரும்
தானேர் தமிழ்நேர் இயலீர்! தனியருள் காந்தியெனும்
கோனே தலைவன் எனுநீர் எனமான் கொடுத்திலிரே! க௪

### மனத்திற்குக் கட்டளை

தலைவன்! தனிக்கதர் தாங்கும் அழகினன்! தண்ணளியன்!
மலைகள் துளங்கினும் மண்கம்ப மாகினும் வான்விழினும்
அலைகள் தமையெறிந் தாழ்கடல் பொங்கினும் யாதுறினும்
நிலையிற் குலைதலில் நீள்காந்தி தன்னை நினைமனமே! க௫

### இதுவுமது

மனமே! உயரும் வழிகேள்! அருந்தவக் காந்திபுகழ்
திளரும் துதித்தவன் செய்கை அறிந்தவன் செப்பறத்தை
நளியாய்த் தெடுத்தக் நளிர்கடன் தன்னை நடையினிற்கொண்
டினிதே புரியின் உயர்வாய்! இதுமெய்! இடரிலையே! க௬

### பாலனைப் பழித்தல்

மெய்சொந் துணைப்பெற்றியான்பெற்ற இன்பமிம் மேதினியில்
அய்யா! பெரிதே! எனினும் அருந்தவக் காந்திகளத்
தெய்யா துழைத்தின் றினிய பெருநலம் எய்தவின்றித்
துய்யாய்! சிலநாள் வறிதே கழித்திடத் தோன்றினையே க௭

### நாணிக் கண் புதைத்தல்

தோன்று புகழுடைக் காந்தி யறம்வளர் தோகையரே!
சார்ந்து விடுமெனை என்று கருதிகொல்! எல்வளைகள்
சேர்ந்த கரங்கொடு தீய விடஞ்சேர் சினவடிவேல்
போன்ற பெருவிழி பேணி இறுகப் புதைத்ததுவே க௮

## இதுவுமது

பேணி அருந்தவக் காந்தி யறம்புரி பெண்ணணங்கீர்!
மாணும் அவனறம் போற்றும் அடியனை மாமழைக்கண்
காணில் உமக்குக் கருது குறையெது? கண்திறவீர்!
நாணிக் கருங்கயற் கண்புதை கையெடும்! நாரியரே! ககூ

## கலைமான் வினுதல்

கருங்கயல் நீண்டகட் காரிகை யீருங்கள் கண்பொருமென்
இருங்கண் மணிநிகர் என்னுளங் கொண்ட எனக்கினிய
அருங்கலை மானுங்கள் ஆயத் துளதோ? அருள்வடிவப்
பெருங்காந்தி யாணை! திருவாய் மலர்ந்துண்மை பேசுமினே

## கிளியை வினுதல்

திருவாய் திறந்து சிறகார் கிளியே! சிறையுறையும்
பெருவாழ் வுடையேன்! பிறிதோர் சிறைவாழ் எனக்கினிய
மருவார் குழலென் மனையாள் சுகமோ? மதில்கடந்து
வருவார் நினையன் றிலரோ எவரும்; வழுத்துவையே உக

## வண்டு விடு தூது

எவரும் விரும்ப இசையிடு வண்டே! எழுந்துயர்ந்த
சுவருள் இருக்குமென் சுந்தரன் தன்னிடம் தூதுசென்று
கவரும் நினது கரும்பு சிறையிற் கலைபயின்று
தவரும் வியந்திட வாழுகின் றுளெனச் சாற்றுகவே உஉ

சாற்றுக காந்தி அறத்தைத் தரணி தழைப்பதற்கு!
போற்றுக அன்னன் திருவடிப் போதினைப் பூசிறைத்து!
மாற்றுக நோயினை! மாதா உரிமை மணிக்கொடியை
ஏற்றுக! இந்திய நாட்டினில் எங்கணும் ஏற்றுகவே! உங

இந்தியத் தாய்சமம் எய்தா துலகில் இடாரடைந்து
நொந்திடல் கண்டுடன் செய்கடன் வேறிலை நுங்கட்கெனை
மைந்துடன் விண்டவள் மக்களைச் சேர்த்தொரு மாபெரும்
முந்தையர் காணு முறைவகுத் திட்டவன் மோகனனே[போர்

மோகன தாசனைப் பாடுமின் மொய்த்திடு வண்டினங்காள்!
வேகம தாயெறி மாருத மேயவன் வீசுபுகழ்!
பாகன வாய்மொழிப் பாங்கிசைப் பீர்மணிப் பைங்கிளிகாள்!
மாகலை யானவன் மாணடம் செய்பொழில் மாமயிலே! உ௫

## நாணிக் கண் புதைத்தல்

மயிலே! மணியே! மணமே! மருந்தே! மனத்தில்வளர்
குயிலே! கொடியே! குணமே! கொழுந்தே! குழலொடுயாழ்
பயிலின் மொழியே! விழிதிற வாயெனில் பாவியெதும்
அயிலேன்! இதுமெய்! அருங்காந்தி ஆணை! அறிகுவையே உ௬

## இதுவுமது

ஆணை யுரைத்தனன்! காந்தி யறத்தை அநுதினமும்
பேணி வளர்ப்பன்! பெரிதும் இதுமெய்! பிணைத்தநறும்
பாணி விலக்கிப் பருத்த அருள்பொழி கண்திறந்து
காணல் புரிவாய்! கரும்பே! விரும்புமென் காதலியே உ௭

## கடமையிற் பிரிதல்

காதலி யே!நாம் கலந்தது காந்தி யறம்வளர்க்க;
ஆதலி னுலின் றரிய பெருவாழ் வவனிதனில்
மேதக நந்தாய் விளங்கப் பிரிதலும் வேண்டுமெனில்,
பாதகம்இல்லை! வருந்தேல்! பழகிய நலணங்கே! உ௮

### அமுதங் கேட்டல்

நூலொடு நுண்ணறி வேறிய நுண்ணிய நூலிடையே!
வேலருங் கண்கொலுங் காந்தி திருப்புகழ் மேவிடுமுன்
பாலொடு தேன்கலந் தன்ன பணிமொழி வாயமுதம்
மாலற நீதரின் வாழ்குவன்! அன்றெனின் மாழ்குவனே! உக

### திருமணம் வேண்டல்

நீதிகை யாதே! நெறியை உணர்ந்தவென் நெஞ்சுநிறை
காதலி யே!நற் கடனுணர் காந்தி யறவுலகில்
'சாதி சமயம் மொழிந்து மணத்தைத் தடுத்திடுவோர்
பேதையர் அன்றோ? இவையினிச் செல்லலில் பெண்ணரசே!

### கடமையிற் பிரிதல்

செல்லாமை யுண்டேல் எனக்குரை மற்றுநின் சீர்த்திகெழு
வல்வர வாழ்வார்க் குரையெனச் செங்கனி வாய்திறந்து
மல்குகண் ணீர்சொரி மாமருந் தே!யனே மாப்பணியில்
செல்லுத லிற்பிரி வாற்றுதல் வேண்டுமென் சேயிழையே ௩க

### இதுவுமது

சேயிழை யே!நம தாய்ச்சீர் விடுதலை தேர்பணியில்
மேயுயர் மேதினி மீதுயர் வொப்பினல் மோகனப்பேர்
நாயகன் சொல்வழி நண்ணுவம்; ஏனே நலனுகர் தற்
கேயினு நாளிது வல்ல!வென் கண்ணுறை இன்னமுதே! ௩உ

### தலைவன் புகழ் வினுதல்

இன்னமு தே!யென தில்லின் பெருவாழ் வியைந்தஎழிற்
கன்னலும் தேனும் கனியும் புளிக்கும் கடற்பிறந்த
மென்மல ரே!யுன் திருவாய் திறந்தெழில் மேவுமணி
சிந்திடு மோஉயர் காந்தி பெரும்புகழ் செப்பிடினே. ௩௩

பெரும்புக ழாண்டிப் புவியிற் பிறந்தவர் யாவரினும்
அரும்புக ழாண்டவன்! ஆமதப் பாத்தணி யார்நகரில்
விரும்பும் சபர்மதி மேயவன்! மேதினி வாழவந்தோன்!
கரும்பின் இனியனெங் காந்தி பதத்தைக் கருதுமினே ௩௪

கருதுமின் காந்தி பதமலர்! அன்னவன் காதலறம்
மருவிய கஸ்தூரி மாதா தனைமணி வாய்திறந்து
பெருக உரையுமின்! பீடுடைக் காந்தியைப் பெற்றெடுத்தே
அருளிய புத்திரி அன்னை தனைத்துதித் தாடுமினே! ௩௫

ஆடுமின்! பாடுமின்! அண்ணல் தனிக்கதர் ஆண்டிடுமின்!
வாடிய நற்பயிர் நீடிட மாமழை பெய்வதுபோல்
வீடிய நாடுயர் மேன்மை அடைந்திட மெல்லமுதம்
கூடிய சொல்லுரை காந்தியின் செந்நெறி கூடுமினே! ௩௬

### கடமையிற் பிரிதல்

கூடிய அந்நாள் குறித்தநற் பேருரை கொல்வதெவன்!
நீடிய காதல! நேரிய உள்ளுறை மாமருந்தே!
நாடிது நாட்படும் அல்லலைக் கண்டினி நாம்நலத்தில்
ஆடுதல் நன்றோ? புறப்படு காந்தி அமர்க்களமே ௩௭

### இதுவுமது

நன்றல நாம்நம தாருயிர்த் தாய்நேர் நலிவகற்றா
தின்றுறை வோமெனில் யாருளர் நம்போல் இழிவுடையார்!
ஒன்றிய காதல! உள்ளத் தமர்ந்த ஒருபெரியோய்!
சென்றிடு வோம்வா! திருவளர் காந்தி திருப்பணிக்கே ௩௮

### நற்றாய் இரங்கல்

காந்தி யறமெனும் கண்டார் நடுங்கும் கடுந்தவத்தென்
ஏந்தெழில் வாய்ந்த இனிய ஒருமகள், எற்படைகொள்
வேந்தர் விறலும் மதியா வெறுங்கை யமர்க்களத்தே
சேர்ந்தன ளே!யருந் தோழி! இனிநான் செய்வதென்னே ௩௯

இதுவுமது

சோரன் இசைத்த சிலம்பணி வாள்!செழுந் தீங்கரும்பின்
சாரம் அனையான்! சரமெனக் கம்பன் தமிழ்புனைவாள்!
மாரன் விரும்பும் வனப்புடை யாள்!கண் மணிநிகர்வாள்!
சோ விழைந்தனள் காந்தி யறத்தினில்! செய்வதென்னே சo

இதுவுமது

என்னே! இனிய மகளிவ் வழியில் எதிர்ந்தனள்கொல்!
அன்னே! அடியனின் ஆவி அனையாள்! அவளுணரச்
சொன்னேன்!மறுத்தாள்!தரித்தாள் முரட்டுத் துணிக்கதரைப்
பின்னே நடந்தாள்! பிடித்தனள் காந்தியென் பித்தனையே சக

இதுவுமது

நடந்தாள் தனியே! தொடர்ந்தேன் அடியனும்! நங்கையுறை
இடந்தான் எதுவென் றறியேன்! இனியென் செய்குவனோ!
விடந்தாழ் விழியுடை மென்மகள் காந்திக் கிறுக்குமுற்றிக்
கிடந்தாள்!எழுந்தாள்!புகுந்தாள்!அறிவிர்கொல்! கிள்ளைகளே!

இதுவுமது

கிள்ளைக ளே!யென் கிளிமொழி இன்னிசை வேயொடுயாழ்
கொள்ளாள்! அழகை மறந்தாள்! குழலில் மலர்முடியாள்!
அள்ளாள் அமுதும்! அணியாள் இழையும்! அநுதினமும்
வள்ளால்! மறுவறு காந்தி!யென் பாளிது மாதுயரே சரு

இதுவுமது

மாதவள் காந்தியின் போர்குறித் தோடி மதியிலிகள்
தீதுடைக் கையடி செம்மை வடிவுபட் டெய்த்தனளோ!
வேதனைச் சாக்கடை நீர்மண மேனியில் மேவினளோ!
ஏதிரும் வன்சிறை எய்தின ளோ!என் தலைவிதியே சச

### மயில் வினாதல்

எந்தை இரும்புகழ் என்கிளி பாடுதற் கேற்பநடம்
திந்திம் எனவிடும் சீரிய என்னரும் பச்சைமயில்
சிந்தை களிக்கத் திருநடஞ் செய்திங்கு சேர்ந்ததுண்டோ?
பந்து பயிலிளம் பாவைய ரே!மெய் பகருமினே சரு

### கலைமான் வினாதல்

பந்து பயிலிளம் பாவைய ரே!யான் பணிப்பதற்கு
முந்தி வருமான்! முனிமதி மோகனன் பேருரைக்கில்
என்றன் கதுப்பினில் முத்தம் இடுமான்! எழில்நிறைமான்!
சிந்தைக் கினிய சிறுமான்! உளதோ? சிறுமியரே! சசு

### குயலிடம் கேட்டல்

சிறுமான் விழியீர்! சிறிய இடையீர்! திருமகள்போல்
இறுமாந் திருப்பீர்! எளிய கதரோ இனிதுடுப்பீர்!
நிறையே அணிவீர்! நிறைந்திடு நேயமென் பாற்செலுத்தும்
சிறியாள் இயலுமச் சீராள் உறையுளும் செப்புமினே! சஎ

### நற்றாய் இரங்கல்

சீரார் எனது திருமகள் என்னைத் தனியிருத்திப்
பாராள் குலமுமிவ் ஊரார் பழிப்பும்! பரிபவமும்
ஓராள் சிறிதுமென் உத்தமி! காந்தி வழியொழுகும்
யாரோ ஒருவனைப் பின்தொடர்ந் தாளிஃ ததிசயமே சஅ

### தோழி தூது உரைத்தல்

தமிழே பயின்று கதரே சுமந்து தளருமிடை
அமிழ்தே அயிலாள்! அணையே கிடந்தே அயருகிறாள்!
கமழ்வாய் திறந்தெழில் காதல! வென்றே கதறுகிறாள்
உமிழா தவன்வயின் ஒன்று! பிணக்கை உடன்மறந்தே! சகூ

## திருமணம் வேண்டல்

ஒன்றுரைப் பேன்காந்தி உண்மை யறத்தை உலகறியச்
சென்று பரப்பும் செயலுடை யேனிதிற் சேர்ந்துழைப்பல்
என்றவன் மீதினில் ஆணை யிடுவாய்! எனிலுனைநான்
மன்றல் புரிவன்! விரும்பிடின் வேறு வழியிலையே. ரு௦

## வண்டோச்சி மருங்கணைதல்

இலதென் றிடுவர்! உளதென் றுரைப்பர்! இடையிவர்க்குப்
பலசொல் வதென்ன! அனிச்சம் பெயினற் பறையிலதென்
கலைவள் ளுவர்சொல் நுசுப்புக் கதர்பெறல் காண்கிலிரோ!
தொலைவீர் சுரும்பீர்! உயிர்போம் இடைபடில் தோகையர்க்கே

## இதுவுமது

சுரும்பீர்! அகலுமின்! சுந்த ரியைவிடுத் தோடிடுமின்!
கருங்குழற் கற்றையும் கத்தர் உடையும் கனத்தழுத்த
மருங்குல் சகித்திட மாட்டா தினியவட் காதலித்து
நெருங்கப் பொறேனுன்! நவியீர்! நெடுவழி நீங்குமினே. ருஉ

## வண்டு விடு தூது

நீங்கிய யானென்றன் நேயம் கவருயர் காந்தியறம்
தாங்கி யினிய தமிழ்ச்சுவை தான்குடித் தன்பருடன்
வாங்கு பெருஞ்சிறை வாழுகின் றேனென வன்பிரிவால்
ஏங்கிடும் என்றன் இளங்கொடிக் காறுதல் கூறுவண்டே. ருங

## இதுவுமது

வண்டே! புகல்வாய்! பிரிவுப் பிணிகொடு வாடிடுமென்
கண்டே தருமென் மொழியாள்! கயனேர் விழியினட்குக்
கொண்டோன் பிரிதல் கொடுமை யெனினும் குழம்புமனை
தொண்டிற் பிரியின் துடைத்தல் இனிதென் தொகுத்தெளி
[தே.

## இதுவுமது

தொண்டிற் சிறந்தவச் சுந்தரன் தன்னிடம் தூதுசென்று
வண்டினமே!யென் மணமதை நீவிர் மதிக்கவலீர்!
கண்டன யான்வீழ் கரும்பிடம் கூறுவீர்! காந்தியறம்
கொண்டவள் நானென் பதனைக் குறித்தவற் கூட்டுவீரே. ருரு

## அன்ன விடு தூது

கூட்டுவிர்! செங்கால் அனங்காள்! குறித்தென் நடையழகைக்
காட்டுவிர்! யான்வீழ் கனியைநற் காந்தியைச் சேர்ந்தவளவ்
வாட்டமில் மங்கை யெனச்சொலி ஏழை வடிவழகும்
தேட்டமும் மற்றைத் திறங்களும் செப்பியச் செல்வனையே

## மயில் விடு தூது

செல்வனை என்னுளம் சேர்தரு செம்மலைச் சீர்வடிவு
மல்கு மழகனை மன்னி வழுத்துவிர் மாமயில்காள்!
பல்கிய காதலுன் பாலடைந் தாள்காந்தி பாதமுறை
எல்வளை எங்களை வென்றாள் இயலினில் என்றெடுத்தே ருஎ

## குயில் விடு தூது

இயலெடுத் தோதுமின் ஏ!குயில் காளென் இனித்தசுவைக்
கயல்விழி வாழ்தரு காதலற் கென்னுடைக் காந்திவழி
முயலலில் ஒன்றும் கருத்துடை யாளவள் மொய்குழல்தேன்
குயிலெனும் நாங்களக் கொம்பைவெல் லோமெனக் கூறுமினே

## திருமணம் வேண்டல்

கொம்பே! அருமைக் கொழுந்தே! மகாத்மனின் கொள்கை
வம்பே! மருந்தே! அடியனைவாழ மணம்புணர்வீர்! [நிறை
நம்ப னறம்கொடு நாமிருவோமுநல் லின்புறலாம்!
செம்ப வளவாய் திறந்துநற் சம்மதி செப்புமினே! ருகூ

## இதுவுமது

கற்றவன் காந்தி யறம்வளர் காதல் நலமுடையாய்!
பெற்றவர் உற்றூர் பிதற்றிடல் கொள்ளேன் பெரியவனே!
கற்றவர் போற்றிடும் நின்னொடு வாழக் கருதுகின்றேன்!
எற்றிடல் இன்றி எடுத்தருள் செய்வாய் இனியவனே! ௬0

இனியவன் எற்கும் எனையனை யார்க்கும் எழிலனைக்கும்;
தனியவன் இந்தத் தருங்கட லாடைநற் றூரணிக்கே;
கனியமு தோடுநற் கண்டெனச் சொற்புகல் காந்தியரும்
பனிய அனிச்சமென் பாத மலர்தலை சூடுவனே ௬௧

## நற்றாய் இரங்கல்

அனிச்சமும் அன்னமென் தூவியும் முள்ளென அஞ்சிடுமென்
குனித்த புருவக் கொழுமதிச் சீர்நுதற் கோதையந்தோ!
தனித்தெனை விட்டுத் தனிவழிச் சென்றனள்! காந்திதனை
மனத்தெணி யாரும் நடுங்க வயங்கவன் வன்களமே ௬௨

## கிளி விடு தூது

வன்களம் வாளொடு சென்று மகன்புறந் தந்திறந்தால் [துன்
அன்னவன் உண்டவென் அங்கம் அறுப்பனென் றப்பிணத்
பின்னும் உடல்கொடு பெற்றஅந் நாளிற் பெரிதுவந்த
என்தமிழ்ப் பெண்ணின் இயலினைக் காந்திக் கிசைகிளியே!

## பெண்ணுயர்வு கூறல்

காந்தி யறந்தலை தாங்கிக் கடுஞ்சிறை போந்தஉயர்
ஏந்தெழில் மாதருக் காடவர் என்று பெருமைசொலித்
தாந்தம காரியம் ஆற்றிடு வோர்சம மாவர்கொலோ?
காந்தையர் தாழ்ந்தவர் என்றே கழறிற் பொருளுளதே? ௬௩

## இதுவுமது

பொருவெது பெண்ணைப் பழிப்பதில்! பூவில் இழிந்திடுவோர்
அருளொடு சேர்வ வறியா தவரவர் ஆண்பெணெனும்
இருவகை யாரினும் உள்ளார்! இதையறி யாமனிசர்
இருநிலப் பாரம் தவிர இலக்காந்தி எர்நிலத்தே • ௬௫

## மாதர் மறுமணம் வேண்டல்

இலையுமைப் போற்கொடும் வன்கணர்!இப்பெரும் மாநிலத்தே
தலைவிதி யென்றொரு பேர்சொலிப் பச்சைத் தனிக்கொடி
கலைமதி சேர்முகக் கட்டுடற் கன்னி இளநலத்தைக் [நேர்
கொலைசெயல் நன்றல! காந்தி அறமுமைக் கொன்றிடுமே ௬௬

## இதுவுமது

காந்தி யறம்சேர் கருணை யுலகினைக் கண்டிலிரோ?
எந்தும் எழிலும் இளங்கட் டுடலும் இணைந்தகொடி
வீழ்ந்து நிலத்தில் விடுத்தகண் ணீருங்கள் மெய்க்குலத்தைப்
போழ்ந்து தொலைக்கும் வடிவாள்! பொருந்தும் அறிவிலிரோ!

## திருமணம் வேண்டல்

பொருந்தும் அறிவும் குணமும் நலங்களும் பூத்திடுமென்
மருந்தை மணக்கத் தடைபுரி வீரிது மாண்பல;நீர்
வருந்தி யுரைக்கும் மதமும் வகுப்புநற் காதலின்முன்
எரிந்த துரும்பாம்! இருங்காந்தி ஆணை! இழிவெதற்கே ௬௮

## மதனைப் பழித்தல்

எரிந்தனை யந்நாள் எனச்சொலு வாரதை யானறியேன்!
விரிந்தமெய்ச் சீர்த்திகொள் மேதினிக் கேதனி மேன்மை
அருந்தவக் காந்தி யமர்குறித் தேபிரி வாற்றுமெனை [தரும்
வருந்திடல் மாளுவை! வள்ளலின் ஆணைமெய் மன்மதனே! ௬௯

## அமுதம் கேட்டல்

வள்ளுவன் நூற்ற மதிதரு நூலும் மகாத்மனெனும்
தள்ளருங் காந்தி தருபெரு நூலும் தவமுமுன்றன்
கொள்ளை நலமார் குமுதந் திறந்தமு தீந்திடுவாய்!
பிள்ளை மொழி!யென் பிணிக்குப் பிறிது மருந்திலையே எ0

## தென்றலைப் பழித்தல்

மருந்து தளர்ந்த உயிர்க்கென் வழுத்துதல் மாத்திரமோ!
விரிந்த புலமையி னேருனை வேணமட் டும்புகழ்வார்!
பொருந்து புகழுடைக் காந்தியின் போரிற் பிரிந்தவெனை
வருந்தல் தருமோ! மலையத் திழிந்ததென் மாருதமே! எக

## திங்களைப் பழித்தல்

இழிவு பிறன்மனை எய்தல் எனுமறி வின்றி,யுறு
பழியு முணர்கிலை! பண்டு குருபெரும் பன்னியைநீ
அழிதல் வினைசெய்தை என்பர்! அதுகொடு மோகனின்
வழுவில் தவமுடை என்னை மதியே! சுடவலையே! எஉ

தவமே! தமியனின் வாழ்வே! தனியருள் பூத்தகொம்பே!
அவமே யுலகினில் ஆவதறியா அறமுணரா
எவமே புரிந்திடும் ஏதிலர் தம்மையும் இன்செயலால்
பவமே யொழிக்கப் பணிக்கும் அருட்டிறம் பாடுவனே எ௩

பாட அறிகிலன் உன்னை யொழியப்! பாரந்திடுவிண்
மூடு புகழ்ச்சந் நிதியினில் இன்றி முடிவணங்கேன்!
ஓடும் உளத்தினில் உன்வடி வன்றியொன் றும்மிருத்தேன்.
நாடு மதிக்குநல் மோகன னே!தனி நாயகனே! எச

நாயக னே!யெனே நல்வழி காட்டிய நற்றவனே!
தூயவ னே!யொரு தூசு மிலாத சுடர்மணியே!
பாயொளி யே!யெழிற் பண்பே! பழுத்த பசுங்கனியே!
தாயனை யர்!நற் சபர்மதி மோகன தாவருளே! எரு

அருளே! இனித்த கனியே! கரும்பே!யென் ஆருயிரே!
இருளே பிடித்த எனையனை யாரும் இடாகலப்
பொருளோர் அறங்கள் புகன்று சபர்மதி போந்தபெரும்
திருவே! அடியேன் சிறுபணி யேற்றருள் செய்குவையே எசு

அடியேன் தனைப்பிற வாம்துறைச் செல்லா தருள்சுரந்து
படியில் உயர்ந்தநின் பாதம் பொருந்திடும் பாங்குரைத்த
மடியில் பெருந்தவம் மன்னு மகாத்ம! மழையனையாய்!
பிடியில் தளராப் பெரும! நினைநாள் பெருகுகவே! எஎ

பெருகுக காந்திப் பெரியோன் பெருமறம் பூமிமுற்றும்;
அருகுக காமம் களவு கொலைபொய் அனைத்துலகும்;
கருகுக தீண்டார் எனவே மனித்தர்க் கழறுபுன்மை;
வருகுக பாரத மாதா அரியணை மன்னிடவே எஅ

### மாதர் மறுமணம் வேண்டல்

மன்னு புகழுடைக் காந்தி யறத்தை மனம்பதித்தே
பன்னற் கருந்துயர் பட்டுத் தவித்துப் பரிதபிக்கும்
சின்னஞ் சிறுசெல் வியர்க்கு மறுமணம் செய்துவிடின்
என்ன குறைவரும் ஐயோ! மனந்தான் இரும்புகொலோ! எகூ

### இதுவுமது

ஐயோ! மனந்தான் இரும்போ! கருங்கல் அதுவுங்கொலோ!
வையம் முழுவதும் இல்லாக் கொடிய வழக்கதனைக்
கையாண் டழிகிலிர்! காந்தியின் ஆணை!நுங் கன்னியரைச்
செய்வீர்! மறுமணம்! சேரும் இயற்கை தெரிந்திலிரே அ0

### இதுவுமது

இயற்கை யறியீர்! எழிலும் இளமையும் ஈண்டெவரும்
நயக்கும் நலத்திற் பொருந்தா தழித்தநும் நங்கையரை
மயக்கி வருத்தியிம் மண்ணிற் புரண்டழச் செய்திடுவீர்
வியப்பே இது!வெம் மெய்க்காந்தி ஆணை! விடுமிதையே அக

### இதுவுமது

ஆணை அருந்தவக் காந்தியின் மீதே! அருமையுடன்
பேணி உயிரிற் பெரிதா வளர்த்தநற் பெண்மணிகள்
வீணே இளமை விடுத்துக் குமுறியுள் விம்மியழ
காணு கிலிரலீர்! நன்றுந்துய்ப் பீர்நீர்! நலமிதுவே! அ௨

### இதுவுமது

நலமோ மகட்பெறு நாரிய ரே!காந்தி நண்ணுலகில்
இலைவயிற் றீரைந்து திங்கட் சுமந்தே இருந்துயரம்
பலபட் டரிதினில் ஈன்றநற் பச்சைப் பசியஇளங்
குலையை உயிருடன் கூறு படுத்துமிக் கொள்கையதே அ௩

### இதுவுமது

உயிரினும் போற்றத் தகுவ தொழுக்கமென் றுரைப்பில்புலச்
செயிரறு வள்ளுவன் செப்பினன் கொண்டனன் காந்தியதைக்
கயல்விழிக் கன்னிகள் காத்திட வேண்டின் கடிபுரிந்து
துயர்புரி யாதவர் இன்னலந் துய்க்கத் துணைசெய்விரே அ௪

### கடமையிற் பிரிதல்

இன்னல மே!என தாருயி ரே!கண் ணிருமணியே!
கன்னலும் கண்டும் கசக்கும் அருஞ்சொற் கனியமுதே!
தன்னலம் பேணல் தகவல! காந்தி சமரதனில்
பின்னி வருவல்! பிரிவுக் கிரங்கிடல்! பெண்ணரசே! அ௫

### இதுவுமது

பெண்ணரசே!என் பிரிவுக் கிரங்கல் பெருமையல!
கண்ணொளி யே!யுயர் காந்தி களத்திற் கலந்திடவே
எண்ணி யுளேனுன் வரும்வரை நீநம் இனித்ததமிழ்
நண்ணும் இலக்கியத் தேன்குடித் தாறுக! நாயகியே அசு

### இதுவுமது

நாயக! நம்முடைக் காரியம் ஆற்றுக! நானமது
தாயவள் தொண்டிற் றலைமைகொள் காந்தி சமர்க்களத்தே
ஏயன ஆற்றி இருஞ்சிறை காணுவல்! என்பிரிவால்
நீயிரு வாட்டம் அடைந்திடல்! மாசறு நேர்மையனே அஎ

### இதுவுமது

மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! மணிமருந்தே!
காசறு தேனே! கரும்பே! விரையே! கனியமுதே!
ஆசறு காந்தி அமர்க்களஞ் சேர்வல்! அழுங்கலைநீ!
தேசுறு செல்வீ! திகழ்கற் புடையென் சிறுகொழுந்தே! அஅ

### இதுவுமது

கற்பின் திருவே! கமழ்பூங் கொடியே! கருத்தில்வளர்
பொற்பின் கொழுந்தே! புனைமலர்க் கோதாய்! புவியிலுயர்
அற்புதக் காந்தி அமர்க்களஞ் சேர்வேன்! அருமருந்தே!
கற்பக மே!விடை ஈவாய்! கனிவாய் திறந்தினிதே அகூ

### தோழியை வினுதல்

கனிவாய் திறந்தெங்கள் காந்தியைப் பாடும் கருத்துயர்ந்த
பனிவாய் மொழியாள்! பவள நிறத்தாள்! பருவிழியாள்!
இனியாள் எனக்கே! இதுவென் உலகத் தியற்கையந்தோ!
தனியே இருந்து நலங்கொலல்! தோழி! சரியலவே கூO

## இதுவுமது

நலத்துறை நண்ணும் நளிர்கடல் ஞாலம் நனிவியக்கும்
கலைச்செறி மாதவக் காந்தி யறம்கொடு கத்தர்தரி
கொலைத்துறைக் கூரிய வேல்புரை ஆவி குடிக்குமிந்த
வலைச்சிறு மான்விழி யாலழி வெய்தி மயங்கினனே கக

மயக்கங் கெடுத்தே வலிந்தெனை யாட்கொண்ட வள்ளல்புவி
நயக்கக் கரும்பும் நலந்தரு தேனும் நறுங்கனியும்
வியக்கக் கருத்தமை சொல்லருள் காந்தி கருதரிய
இயக்கத் தலைமைகொள் ஏந்தல் பதமலர் ஏத்துவமே கஉ

ஏந்தல் இருந்தவப் புத்திரி பாயின் எழில்வயிறும்
தோய்ந்த துணைவியென் கஸ்தூரி அன்னைநல் தோளிணையும்
வாய்ந்த சபர்மதி நீருமோர் வாடா மணிச்சிறையும்
பாய்ந்த எனதுள மும்குளிர் வித்த, பனிவடிவே கங

## கிளி விடு தூது

பனிமலர்க் காவிற் பயன்கனி உண்டுறை பைங்கிளிகாள்!
கனிவுடைக் காந்தி கருத்திற் கலந்தே கடன்புரிந்த
தனியென நட்சிறை நன்மை வெளிச்சிறை நண்ணிடுமென்
இனியருக் கேல எடுத்துரைத் தின்னலம் எய்துவிரோ கச

## இதுவுமது

ஏலந் தருகுழல்! எம்பெருங் காந்தி இசைமறவாச்
சீல மிதுவென் றருந்ததி யாள்பெறச் செப்பிடுமென்
கோல மயிலைக் குறுகிச் சிறையுள் கொழுநனுயர்
ஞால மதித்திட வாழுகின் றானென் நவில்கிளியே கரு

## கடமையிற் பிரிதல்

ஞாலம் மதித்திட நன்மணம் ஆற்றிய நாள்முதலிக்
காலம் வரையும் பிரிவறி யாதுயர் காதலறம்
ஏல நடத்தினம்; இன்று பிரிவுவந் தெய்தியதால்!
சால உரைத்தென்! தருவது காந்தி சமரமதே! ௯௬

காந்தி! கருணைக் கடலே! கடல்சூழ் நிலமுழுதும்
ஏய்ந்த அறிவினர் யாவரும் ஏற்றும் எழிற்பெரியோய்!
சாந்த மலையே! தலமே பொறையில்! சபர்மதியில்
வாய்ந்த மணியே! மனம்புகு மாதவ! வாழியவே ௯௭

மனப்பிணி போக்கும் மருந்தே! மதிக்குநல் மாண்புடையார்
இனத்தினில் ஈடில் எழிற்சீர்த் தலைமை இயைத்தவனே!
சினத்தினை வென்ற செரு,இச் செகத்தினுக் கேபுதிதா
வினைத்தவ! வான்வரை நீள்புகழ் மோகன! வாழியவே! ௯௮

வானேற நீண்ட புகழான! காந்தி மணிவிளக்கே!
பானுறு செவ்வாய்ப் பரம!நல் லன்பென் பகர்கயிற்றால்
கானேற நின்னை நலமார்ந்த சொற்பூ நனிதொடுத்துத்
தேனூற தீஞ்சொற் றமிழ்மாலை சேர்த்தினன் வாழியவே!

வாழிய மோகன தாஸ்கரம் சந்திரன் வாழியவே!
வாழிய இந்திய மாதா! விடுதலை வாழியவே!
வாழிய காந்தியின் மன்னறம்! மாநிலம் வாழியவே!
வாழிய இத்தமிழ் மாலைபல் லூழிநல் வாழியவே! ௧௦௦

## காந்தி கலித்துறை யந்தாதிச் செய்யுள் முதற் குறிப்பு


| தொடர் எண். | பாட்டு. | பக்க எண். | தொடர் எண். | பாட்டு. | பக்க எண். |
|---|---|---|---|---|---|
| ௧ | அடிமையெனும் | ௬ | ௨௭ | எய்ந்த பெருமை | ௫ |
| ௨ | அடியேன்தனை | ௨௦ | ௨௮ | ஏலங் தருகுழல் | ௨௩ |
| ௩ | அருமருந்தன்ன | ௭ | ௨௯ | ஐயோ மனந்தான் | ௨௦ |
| ௪ | அருளேயினித்த | ௨௦ | ௩௦ | ஒன்றிக் கடமை | ௭ |
| ௫ | அருளையறத்தை | ௫ | ௩௧ | ஒன்றுரைப்பேன் | ௧௫ |
| ௬ | அனிச்சமும் | ௧௭ | ௩௨ | கடனறிந்தேன் | ௯ |
| ௭ | ஆடுமின் பாடுமி | ௧௨ | ௩௩ | கத்தருடுத்தியே | ௭ |
| ௮ | ஆணையருந்தவ | ௨௧ | ௩௪ | கருங்கயல் நீண்ட | ௯ |
| ௯ | ஆணையுரைத்த | ௧௦ | ௩௫ | கருதுமின்காந்தி | ௧௨ |
| ௧௦ | இந்தியத்தாய் | ௧௦ | ௩௬ | கருதுவனவுயர் | ௫ |
| ௧௧ | இயலெடுத்தோது | ௧௬ | ௩௭ | கற்பின்திருவே | ௨௨ |
| ௧௨ | இயற்கையறியீர் | ௨௧ | ௩௮ | கனிவாய்திறந்து | ௨௨ |
| ௧௩ | இலதென்றிடுவர் | ௧௫ | ௩௯ | காதலியேநாம் | ௧௦ |
| ௧௪ | இலையுமைப்போ | ௧௮ | ௪௦ | காந்தி கருணை | ௨௪ |
| ௧௫ | இழிவுபிறன்மனை | ௧௯ | ௪௧ | காந்தி யறஞ்சேர் | ௧௮ |
| ௧௬ | இளங்கிளிபாடிட | ௬ | ௪௨ | காந்தி யறந்தலை | ௧௭ |
| ௧௭ | இனியவன் எற்கு | ௧௭ | ௪௩ | காந்தி யறமெனும் | ௧௨ |
| ௧௮ | இன்னமுதே | ௧௧ | ௪௪ | கிளிபோன் மொ | ௭ |
| ௧௯ | இன்னலமே | ௨௧ | ௪௫ | கிள்ளைகளே | ௧௯ |
| ௨௦ | உயிரினும் | ௨௧ | ௪௬ | கூடியவந்நாள் | ௧௨ |
| ௨௧ | எந்தையிரும்புகழ் | ௧௪ | ௪௭ | கூட்டுவிர் செங் | ௧௬ |
| ௨௨ | எரிந்தனையந்நாள் | ௧௮ | ௪௮ | கொம்பேயருமை | ௧௬ |
| ௨௩ | எவரும் விரும்ப | ௯ | ௪௯ | சாற்றுக காந்தி | ௯ |
| ௨௪ | என்னேயினிய | ௧௩ | ௫௦ | சிறுமான் விழியீர் | ௧௪ |
| ௨௫ | ஏந்தல் இருந்தவ | ௨௩ | ௫௧ | சீரார் எனது | ௧௪ |
| ௨௬ | ஏந்தல் பணிதலை | ௯ | ௫௨ | சுரும்பீர் அகலு | ௧௫ |

## காந்தி கலித்துறை யந்தாதிச் செய்யுள் முதற் குறிப்பு


| தொடர் எண். | பாட்டு. | பக்க எண். | தொடர் எண். | பாட்டு. | பக்க எண். |
|---|---|---|---|---|---|
| ௫௩ | செப்புக தென்ற | ௭ | ௭௯ | பனிமலர்க்காவில் | ௨௩ |
| ௫௪ | செய்தளித்த | ௩ | ௮௦ | பாடவறிகிலன் | ௧௯ |
| ௫௫ | செல்லாமையுண் | ௧௧ | ௮௧ | பெண்ணரசே | ௨௨ |
| ௫௬ | செல்வனையென் | ௧௬ | ௮௨ | பெருகுக காந்தி | ௨௦ |
| ௫௭ | சேயிழையே | ௧௧ | ௮௩ | பெரும்புகழாண் | ௧௨ |
| ௫௮ | சேரனிசைத்த | ௧௩ | ௮௪ | பேணியருந்தவக் | ௯ |
| ௫௯ | ஞாலம் மதித்திட | ௨௪ | ௮௫ | பொருந்துமறிவும் | ௧௮ |
| ௬௦ | தமிழே பயின்று | ௧௪ | ௮௬ | பொருளொது | ௧௮ |
| ௬௧ | தலைவன் தனிக் | ௮ | ௮௭ | மயக்கங் கெடுத் | ௨௩ |
| ௬௨ | தவமே தமிய | ௧௯ | ௮௮ | மயிலே மணியே | ௧௦ |
| ௬௩ | திருவாய் திறந்து | ௯ | ௮௯ | மருந்து தளர்ந்த | ௧௯ |
| ௬௪ | தொண்டிற் சிறந் | ௧௬ | ௯௦ | மனப்பிணிபோக் | ௨௪ |
| ௬௫ | தோன்று புகழு | ௮ | ௯௧ | மனமே யுயரும் | ௮ |
| ௬௬ | நடந்தான் தனி | ௧௩ | ௯௨ | மன்னுபுகழுடை | ௨௦ |
| ௬௭ | நலத்துறை | ௨௩ | ௯௩ | மன்னுமுலகில் | ௫ |
| ௬௮ | நலமோ மகட் | ௨௧ | ௯௪ | மாசறுபொன்னே | ௨௨ |
| ௬௯ | நற்றவன் காந்தி | ௧௭ | ௯௫ | மாதவள் காந்தி | ௧௯ |
| ௭௦ | நன்றல நாம் | ௧௨ | ௯௬ | மானேர் விழியீர் | ௮ |
| ௭௧ | நாடு செழித்திட | ௬ | ௯௭ | மெய்ந்நொந்துனை | ௮ |
| ௭௨ | நாயக நம்முடை | ௨௨ | ௯௮ | மோகனதாசனை | ௧௦ |
| ௭௩ | நாயகனே | ௨௦ | ௯௯ | வண்டே புகல் | ௧௫ |
| ௭௪ | நிலத்திலுயர் | ௩ | ௧௦௦ | வள்ளுவன் | ௧௯ |
| ௭௫ | நீங்கியயான் | ௧௫ | ௧௦௧ | வன்களம் | ௧௭ |
| ௭௬ | நீதிகையாதே | ௧௧ | ௧௦௨ | வாழிய | ௨௪ |
| ௭௭ | நூலொடுநுண் | ௧௧ | ௧௦௩ | வானேற | ௨௪ |
| ௭௮ | பந்துபயிலினம் | ௧௪ | | | |


...

# துறைகளின் விளக்கம்.

---

அமுதங் கேட்டல் :—காதலியை வாயமுதம் கேட்கும் முறையிற் பாடுவது.

அன்ன விடுதூது, கிளி விடுதூது, குயில் விடுதூது, மயில் விடுதூது, வண்டு விடுதூது :—இப்பொருள்களைத் தங் கருத்துரைத்துத் தூதுபோக்கும் முறையில் பாடுவது.

இயலிடங் கேட்டல்:—தான் விரும்பிய காதலி இருக்குமிடம் எது? அவள் தன்மை என்ன என மகிழ்ச்சி காரணமாகக் கேட்கும் முறையில் பாடுவது.

கடமையிற் பிரிதல் :—கடமை காரணமாக நேரும் பிரிவு பற்றி வருந்தாதிருக்குமாறு கூறும் முறையில் பாடுவது.

கலைமான் வினுதல், மயில் வினுதல் :—தன் காதலியை மானுகவும், மயிலாகவும் வர்ணித்து அவற்றைக் கண்டதுண்டோ எனக்கேட்கும் முறையிற் பாடுவது.

கிளியை வினுதல், தென்றலை வினுதல் :—இப்பொருள்களைப் பார்த்து எனது காதலர் அன்றி எனது தோழர் சுகமோ எனக் கேட்கும் முறையிற் பாடுவது.

தலைவன் புகழ் வினுதல் :—தலைவன் புகழ்கூறு என்று காதலியைக் கேட்கும் முறையிற் பாடுவது.

திங்களைப் பழித்தல், தென்றலைப் பழித்தல், மதனைப் பழித்தல் :—பிரிவுத் துயர்கொண்ட காதலர் இப்பொருள்களைப் பழிக்கும் முறையிற் பாடுவது.

திருமணம் வேண்டல் :—மணம் புணருமாறு காதலர் வேண்டும் முறையிற் பாடுவது.

# துறைகளின் விளக்கம்

**தென்றற்குக் கட்டளை, மனத்திற்குக் கட்டளை**:—இப்பொருள்களைப் பார்த்து நீங்கள் இவ்வாறு செய்யுங்களென்று கூறும் முறையிற் பாடுவது.

**தோழி தூதுரைத்தல்**:—பிரிந்த காதலனுக்குக் காதலியின் தோழி அவள் வருத்தத்தைத் தூதுசென்று உரைக்கும் முறையிற் பாடுவது.

**தோழியை வினுதல்**:—தோழியைப் பார்த்து அவள் நாயகியைக் காதல்கொண்ட காதலன் கேட்கும் முறையிற் பாடுவது.

**நற்றய் இரங்கல்**:—நல்ல தாய், தன் மகள் பிரிவுக்கு வருந்தும் முறையிற் பாடுவது.

**நாணிக் கண் புதைத்தல்**:—வெட்கிக் கண்ணைப் பொத்திக்கொண்ட காதலியைக் கண்ணைத் திறக்குமாறு காதலன் வேண்டும் முறையிற் பாடுவது.

**பாலனைப் பழித்தல்**:—தொண்டு செய்யுங் கடமையை, பிறந்த மகன் தடுத்து விட்டதாகப் பிள்ளையைப் பெற்றதாய் பாலனைப் பழிக்கும் முறையிற் பாடுவது.

**பெண்ணுயர்வு கூறல்**:—பெண்கள் தாழ்ந்தோர் என்று சாற்றுவார்க்கு, அவருயர்வு எடுத்துக்கூறும் முறையிற் பாடுவது.

**வண்டோச்சி மருங்கு அணைதல்**:—தான் விரும்பிய காதலியை நெருங்குவதற்கு அவள் கூந்தலில் மொய்த்த வண்டுகளை ஓட்டுதலை ஒரு காரணமாகக்கொண்டு அவற்றை ஓட்டும் முறையிற் பாடுவது.

**மாதர் மறுமணம் வேண்டல்**:—கணவனை இழந்த மங்கையர்க்கு மறுமணம் செய்விக்கவேண்டும் முறையிற் பாடுவது.

# துறைகளின் விபரம்.

| தொடர் எண். | துறை | பா எண் | மொத்தம் |
|---|---|---|---|
| ௧ | அமுதம் கேட்டல் | ௨௯, ௭௦. | ௨ |
| ௨ | அன்ன விடுதூது | ௫௬ | ௧ |
| ௩ | இயல் இடங்கேட்டல் | ௪௭ | ௧ |
| ௪ | கடமையிற் பிரிதல் | ௫, ௨௮, ௩௧, ௩௨, ௩௭, ௩௮, ௮௫, ௮௬, ௮௭, ௮௮, ௮௯, ௯௬ | ௧௨ |
| ௫ | கலைமான் வினாதல் | ௧௩, ௧௪, ௨௦, ௪௬, | ௪ |
| ௬ | கிளியை வினாதல் | ௨௧ | ௧ |
| ௭ | கிளி விடுதூது | ௬, ௬௩, ௯௪, ௯௫ | ௪ |
| ௮ | குயில் விடுதூது | ௫௮ | ௧ |
| ௯ | தலைவன் புகழ் வினாதல் | ௩௩ | ௧ |
| ௧௦ | திங்களைப் பழித்தல் | ௭௨ | ௧ |
| ௧௧ | திருமணம் வேண்டல் | ௩௦, ௫௦, ௫௯, ௬௦, ௬௮ | ௫ |
| ௧௨ | தென்றலைப் பழித்தல் | ௭௧ | ௧ |
| ௧௩ | தென்றலை வினாதல் | ௧௦ | ௧ |
| ௧௪ | தென்றற்குக் கட்டளை | ௧௧ | ௧ |
| ௧௫ | தோழி தூதுரைத்தல் | ௪௯ | ௧ |
| ௧௬ | தோழியை வினாதல் | ௯௦, ௯௧ | ௨ |
| ௧௭ | நற்றாயிரங்கல் | ௩௯, ௪௦, ௪௧, ௪௨, ௪௩, ௪௪, ௪௮, ௬௨ | ௮ |
| ௧௮ | நாணிக்கண் புதைத்தல் | ௧௮, ௧௯, ௨௬, ௨௭ | ௪ |
| ௧௯ | பாலனைப் பழித்தல் | ௧௭ | ௧ |
| ௨௦ | பெண்ணுயர்வு கூறல் | ௬௪, ௬௫ | ௨ |

## துறைகளின் விபரம்

| தொடர் எண். | துறை | பா எண் | மொத்தம் |
|---|---|---|---|
| ௨௧ | மதனைப் பழித்தல் | ௬௯ | ௧ |
| ௨௨ | மயில் விடுதூது | ௫௭ | ௧ |
| ௨௩ | மயில் வினாதல் | ௪௫ | ௧ |
| ௨௪ | மனத்திற்குக் கட்டளை | ௧௫, ௧௬ | ௨ |
| ௨௫ | மாதர் மறுமணம் வேண்டல் | ௬௬, ௬௭, ௭௯, ௮௦, ௮௧, ௮௨, ௮௩, ௮௪ | ௮ |
| ௨௬ | வண்டு விடுதூது | ௨௨, ௫௩, ௫௪, ௫௫ | ௪ |
| ௨௭ | வண்டோச்சி மருங்கணைதல் | ௮, ௫௧, ௫௨ | ௩ |

ஆகத்துறை இருபத்தேழுக்குத் துறைப்பா—(௭௪)

# காந்தி நான்மணி மாலை

நான் மாணிமாலைப் பாயிரம்

## அறுசீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

ஒடுக்கப்பட் டாரெனவே உரைக்குமொரு
    பெருங்குழுவார் உரிமை பெற்றின்று
இடுக்கண்டீர்ந் திடுவதற்கே ஏலாது
    தனித்தொகுதி என்று கொண்டு
நடுக்கின்றி அந்தமுறை ஒழியீரேல்
    நான்ஆவி வாழேன் என்று
திடுக்கிட்டிவ் உலகமெலாம் என்வருமோ
    என்றெண்ணித் தியங்கி நிற்க, க

உண்ணாமை கொண்டநாள் உற்றசகம்
    ஆயிரத்தெண் ணூற்றைம் பத்தோடு
எண்ணான்கொன் றியைந்தஆங் கீரசவில்
    புரட்டாதி எட்டாம் நாளில்
கண்ணான காந்திக்கு நான்குமணிக்
    கவிமாலை கனிந்தளித்தான்
மண்ணார்ந்த புகழ்வேலூர்ச் சிறையதனில்
    ராயசோக்கலிங்கன் மாதோ. உ

# காந்தி நான்மணி மாலை

---

காப்பு—வெண்பா

வெண்பாக் கலித்துறை மேல்விருத்தம் ஆசிரியம்
பண்பாரும் நான்குமணிப் பாமாலை—கண்பார்க்கும்
நாயகன்எங் காந்திக்கு நல்குதற்குக் கட்புலனில்
நாயகத்தை வாழ்த்துவேன் நான்.

நூல்

வெண்பா

நான்என தென்னும் செருக்கறுத்த நற்றவனே!
ஏனையர்க்கே வாழுகின்ற எம்மானே!—வானவனே!
தீண்டாமை போக்கச் செகங்கலங்க ஆவிவிட
மூண்டபுகழ் மோகன! வாழ்க! க

கலித்துறை

வாழ்ந்திடு நாட்டினில் மக்களில்
ஓர்குழு வாரையந்தோ!
தாழ்ந்தவர் தீண்டத் தகாதார்
எனச்சொலிச் சண்டையிடும்
தாழ்ந்தவர் கூற்றைத் தகர்த்திடத்
தன்னுயிர் தான்கொடுக்க
வீழ்ந்தவ! காந்தி விறலோய்!
வியன்புவி மேலவனே. உ

## விருத்தம்

மேலவனே! மேதினியை மெய்யன்பால்
ஆண்டுபுகழ் மேவி னோனே!
நூலொடுநன் னறிவுடையாய்! நுவலரிய
பெருங்காந்தி! நோயே செய்யும்
போலிகள்சொல் தீண்டாமைப் புன்மைதனைப்
புறங்காட்டில் புதைப்ப தற்கு
வானுயிரும் வழங்குதற்கு வாய்த்தபுகழ்
மாமணியே! வாழ்பல் லாண்டு! ௩

## அகவல்

பல்லாண்டு வாழ்க! பல்லாண்டு வாழ்க!
பொல்லா தாரால் புறக்கணிக் கப்படும்
பல்லோர்க் குயிர்விடப் பரிந்திடு காந்திநீ! ௪

## வெண்பா

காந்திநீ வாழ்கநன்மைக் கார்த்துளியிற் பற்பலநாள்!
சேர்ந்தஇம் மாநிலத்தில் தீண்டாமை—மாய்ந்தொழிய
ஆருயிரும் ஈய அமைந்துசெயல் பூண்டபுகழ்
வாரொளியே! மாதவவாழ் வே! ௫

## கலித்துறை

மாதவ வாழ்வே! மருந்தே
பிணிக்கு! மகாத்மனெனும்
கோதில் குணத்தவ! கூர்ஜரம்
வந்தோய்! குவலயத்தோர்

காதற் குரியவ! தீண்டா
தவரெனக் கண்டொதுக்கும்
மாதுயர்க் கீடா உயிரினை
வைத்தவ! வாழியவே! ௬

## விருத்தம்

வாழியநீ! வாழியநீ! மன்னுமிந்த
மாநாட்டார் வளர்த்து வைத்த
பாழுடைய தீண்டாமைப் பழிதொலைக்க
நல்லுயிரும் பரிந்து நல்கும்
ஏழையர்தம் பெருவாழ்வே! இந்தியரின்
இன்னுயிரே! எந்தாய் காந்தி!
மாழைதரு நீர்த்துளியில் மணற்குவையில்
பன்னெடுநாள் மன்னி மாதோ! ௭

## அகவல்

மன்னிய பாரத மணித்திரு நாட்டில்
துன்னிய தீண்டாத் துயரை அகற்றத்
தன்னுயிர் தரவும் சமைந்த காந்தி
உன்னெணம் முடிய!நீ ஊழிநாள் வாழ்கவே! ௮

## வெண்பா

நாள்பெருக காந்திநிற்கு! நல்கியநம் மன்னையவள்
ஆள்க அரசுமுடி சூடியே!—தேள்பொருவு
தீண்டாமை என்னும் சிறுமை சிதைந்திடுக!
மூண்டநின தெண்ணம் முடிக! ௯

## கலித்துறை

முடிக நினதருள் முற்றிய
எண்ணம்! முறையறியா
மடியர் பிறப்பினில் கீழோர்
எனச்சொலும் மாண்பில்செயல்
இடிய! இந் நாட்டைப் பிரித்துப்
பிரித்தே இடும்பைசெயும்
கொடுமை யொழிந்திடக்! காந்திநின்
கொள்கைகை கூடுக வே! ௧௦

## விருத்தம்

கூடிடுக காந்தியுயர் கொள்கையெலாம்!
தீண்டாமைக் கொடுமை யாவும்
ஓடிடுக! ஒடுக்கப்பட் டாரெல்லாம்
ஓங்கிடுக! ஒழிந்து வாழ்க
நாடுதனைப் பிரித்தாள நல்குதனித்
தொகுதிமுறை! ஞானி லத்தில்
ஈடுடையை காந்தியுயிர் இலங்கிடுக
பன்னெடுநாள் எங்கட் காக! ௧௧

## அகவல்

எங்கட் காகவே இப்புவி வந்தோன்!
எங்கட் காகவே இதுவரை வாழ்ந்தோன்!
எங்கட் காகவே இன்னும் பன்னாள்
துங்கக் காந்தியின் தூய நல்லுயிர்
மங்கள மாக வாழ்க வாழியவே! ௧௨

### வெண்பா

மங்களத்தேர் வாடா மணியார் சிறையதனில்
தங்கக் கொலுவிருக்கும் தூயபுகழ்—எங்கள்
பெருமான்! அருங்காந்திப் பெம்மான்! பெரியான்!
உரமார் உயிர்வாழ்கவே! ௧௧

### கலித்துறை

உயிர்வாழ் திறமறி யாதுழல்
இந்த உலகமதில்
செயிரில்நல் வாழ்வைத் திணித்த
அருந்தவச் செம்மலை
துயர்கொல் கடன்கொளும் தூயவன்
தீண்டார் துனியகற்ற
உயிரையும் வீச ஒருப்படு
காந்தி உயருகவே! ௧௨

### விருத்தம்

உயர்கொள்கை நிறுவுதற்கு உயிரினையும்
உதவுதற்கு உரமே கொண்டு
தயிரியமாய் முன்வருவோர் மிகஅரியர்;
தீண்டாதார் தளைத கர்க்க
அயர்வின்றி ஆக்கரிய ஆவிவிடத்
துணிந்துநிற்கும் அண்ணலே!யுன்
செயல்வாழ்க! புகழ்வாழ்க! திண்மையுயிர்
சேர்த்திடுசிற் றுடலம் வாழ்க! ௧௩

### அகவல்

சிற்றுடல் அதனில் சேர்ந்துள பேரொளி
நற்றிருக் காந்தி நல்லுயிர் வாழ்க!
வெற்றிபெற் றிடுக விரும்பிய வாறு!
குற்றமே செய்யும் கூர்த்த மதியிலார்
சொற்றிடு தீண்டாத் துயர்தொலைந் திடுக!
பெற்றியில் மாக்கள் பித்தொழிந் திடுகவே! ௧௬

### வெண்பா

ஒழிந்திடுக தீமையெலாம்! ஓங்கிடுக நன்மை!
அழிந்திடுக தீண்டாமை ஆதி!—வழிந்த
கருணை பொறைவாய்மைக் காந்தி பெருமை
நிரந்தரமா வாழ்க நிலத்து! ௧௭

### கலித்துறை

நிலத்துப் பெரியார் எவரென
நீணிலம் முற்றிலுமே
புலத்துப் பெரியார் பலரும்
துருவிப் புவியிலெலாம்
நலத்துப் பெரியான் ஒருதனிக்
காந்தியென் நல்கியசீர்த்
தலத்துப் பெரியான் தனியுடல்
நாள்பல தங்குகவே! ௧௮

## விருத்தம்

தங்குபுகழ்ச் சத்தியமே! தண்ணளியே!
சபர்மதிவாழ் தவமே! தாவில்
எங்களரும் இன்னுயிரே! ஏர்வாடா
எழில்வாழ்வே! எந்தாய்! எண்ணில்
புங்கவனே! புண்ணியனே! பொருவரிய
போர்த்தலைமை பூண்டோய்! பூநீர்
திங்களரி செங்கதிர்விண் தீயுளநாள்
திருக்காந்தி திகழ்க சீரோய்! ௧௯

## அகவல்

சீருடைப் பெரியோய்! தீண்டா மைதனை
வேரறக் களைய வேண்டிய வழியை
நாரொடு நவின்று நடையினிற் காட்டி
ஏருடை நாட்டை இரண்டு படுத்தச்
சாருதீப் பகுதித் தனிமுறை தகர்க்க
ஆருயிர் அருள அமைந்திடு காந்தி!
பாருள மட்டும் பகல்வா ணாளே! ௨௦

## வெண்பா

வாணாள் பெருக மணவிற் பலவாக!
வீணவார் தாங்களுமே மேலறிவு— பேண
ஒடுக்கப்பட் டாருக்கு உயிர்தாங்கு காந்தி!
வடுக்களிலா மாத்தும நிற்கு! ௨௧

கலித்துறை

நிற்கும் நிலையறி யாது
நிதிக்கு நிகழ்கருத்தை
விற்கும் கொடியவர் வேறு
நினைந்து வினைபுரிவோர்
சொற்கும் செயற்கும் தொடர்பு
பொருந்தார் நிறைபுவியில்
நிற்கும் நெடும்புகழ்க் காந்திபன்
னுள் நீ நிலவுகவே! உஉ

விருத்தம்

நிலவுதரும் தண்மதியைத் தண்ணளியால்
வென்றபெரும் நேயம் மிக்க
குலவுபுகழ்ச் சபர்மதியெங் கோவே! ஏர்
வாடாவிற் கொலுவி ருக்கும்
தலமதிக்கும் தனிப்பெரியோய்! தீண்டாமைத்
தவிடுபொடி யாக்கு தற்குப்
பலமுழுதும் ஆளுமுயர் பண்போய்நீ
பல்லாண்டிப் பாரில் வாழ்க! உங

அகவல்

பல்லோர் தம்மைப் பாந்தஇந் நாட்டில்
பொல்லா மக்கள் பொருளெதும் இன்றிக்
கல்லா தாக்கிக் கண்டதும் மருண்டு
செல்வீர்! செல்வீர்! தீண்டார் நீரென

வல்லிருட் தள்ளி மாய்க்கும் கொடுமை
கொல்ல உள்ளங் கொண்டு தனது
நல்லுயிர் விடவும் நயந்துமுன் வந்த
எல்லார் காந்தி! என்றும்வா ழியவே! உச

### வெண்பா

என்றென்றும் வாழ்ந்திடுக! இந்து மதம்பிடித்தோர்
நன்றின்றித் தீண்டாமை நல்கியே—கொன்றன்ன
இன்னு மிகப்பலருக் கீகொடுமை போக்குதற்குத்
தன்னுவி தாக்குகாந் தி! உரு

### கலித்துறை

தன்னுவி தீண்டார் தனிமுறைப்
போக்கைத் தவிர்ப்பதற்கு
எந்நாடும் வங்கிட ஈவதற்
கேய்ந்த இருங்குணத்துத்
தன்னேர் இலாத தலைவனெங்
காந்தித் தனிப்பெரியான்
எந்நாளும் வாழ்க! இருஞ்செயல்
வாழ்ந்தே இலகுகவே! உசு

### விருத்தம்

இலகுபுவி தனில்முன்னுள் எண்ணற்றூர்
அறம்வளர்த்தார் எனினும் உன்போல்
உலகறிஞர் திறமனைத்தும் ஒருசேரக்
கவருசெயல் உடைமை பூண்ட

பலர்புகழும் பெருமையுளார் இலேசாதம்!
பாரதர்தம் வாழ்வே! காந்தி!
நிலவிடுக நீஉலகில் நெடுங்கடலோ
டிரவிமதி நிற்கு மட்டும்! உஎ

அகவல்

மட்டில் புகழ்சேர் மணித்திரு நாடு
கட்டழ கிழந்து கடமை மறந்து
பட்டினி யோடு பகைபிணி ஆதிய
இட்டிப் பண்டைக் கெழுதகை யெல்லாம்
விட்டுப் பிறப்பில் மேல்கீழ் என்னக்
கட்டிக் கதைபல கையால் சிலரைத்
தொட்டால் முழுகித் தொலைந்திடும் குடியெனும்
வெட்டிப் பேச்சை வீண்செய லோடு
வெட்டிக் காந்திநீ வேணநாள் வாழ்கவே! உஅ

வெண்பா

வாழி மணிப்பாரத மாநாட்டார் மன்னுயிரே!
வாழி உறவிவ் உலகதனில்—வீழப்புன்
தீண்டாமை சேர்ந்த சிறுமைச் செயலெல்லாம்
காண்டகுசீர்க் காந்தியடி கள்! உக

கலித்துறை

காந்தி! உலகிற்குக் கண்ணே
அறிவே கருத்தில்வளர்
சாந்த குணமே! சபர்மதி
வாழ்வே! தனியமுதே!

வீழ்ந்த துணைவர் தமக்கா
உயிரும் விடமுனைந்த
எந்தாய்! எழிற்றிரு மேனியொ
டிப்புவி வாழியவே! ௩௦

விருத்தம்

திருமேனி சிறியதுவென் றெள்ளாமை
வேண்டுமுயர் தேரைத் தாங்கி
உருளுபெரும் ஆழியுறும் அச்சாணி
யொப்பாருண் டுலகில் என்று
வருவாய்நீ எனஎணியே வள்ளுவனார்
வழுத்தினர்கொல்! வள்ள லே!யுன்
அருமேனி தனையிழந்தின் றுற்றுள்தாய்
ஆண்டுபல வாழ்க காந்தி! ௩௧

அகவல்

பலபல வாகப் பரந்தஇவ் உலகம்
நலமிகு நின்னுடை நன்செயல் போற்றும்;
கலகமே புரிவோர் கயவரும் கூட
விலையிலா நின்செயல் வியவா தொழியார்;
புலையரென் றொருகுழு பிறப்பினில் உண்டெனப்
புலையர்கள் கூறும் புன்மொழி வென்றும்
நிலவிடச் செய்யும் நெடுந்தனித் தொகுதியைத்
தொலைத்திடக் கருதித் தொல்லுல கனைத்தும்
மலைத்திடு மாறு மன்னுயிர் வைத்த
புலம்நிறை காந்திப் புண்ணிய! வாழ்கவே! ௩௨

## வெண்பா

புண்ணியனே! புத்திரிபாய் புத்திரனே! பூவிலுயர்
கண்ணியனே! கஸ்தூரி காதலனே!—எண்ணில்புகழ்
மேயவனே! மேலவனே! மெய்க்காந்தி! மேலோர்தம்
நாயகனே! நண்ணுகபன் னாள்! ௩௫

## கலித்துறை

நாயக! நற்புவி நண்ணிடு
நன்றறி நல்வர்க்கே.
தூயவ! தூசு துளியுமில்
தூண்டாச் சுடர்விளக்கே!
ஏயநல் எண்ணம் இனிதே
இயைந்திட இன்னுயிரும்
காயக் கருதிய காந்திக்
கதிர்வாழ் கடலுலகே ௩௬

## விருத்தம்

கடலாடைக் காசினியோர் கருத்தனைத்தும்
கவர்ந்தபுகழ்க் காதற் காந்தி!
மடங்கொன்று மறம்போக்கி மக்களுக்கு
வாழ்வுதர மண்ணில் வந்தோய்!
திடமறியார் செயல்வெள்கத் தீண்டாதார்
சீரடையச் சிறந்த சீர்த்தி
உடல்விடவும் உன்னியநின் உளம்வாழி!
உடல்வாழி! ஊழி! ஊழி! ௩௭

## அகவல்

உடலினை உற்றோர்க்கு உலகினில் உள்ள
மடமை மடித்து மாண்பு வகுத்துக்
கடனெலாம் காட்டும் கருணைக் கடலே!
திடப்புத் திரிபாய்த் தேவிசீர்ச் செல்வா!
கடற்கண் கஸ்தூரி காதற் கனியே!
வடமலை மன்னும் வான்கேழ் மணியே!
அடலமர்க்கு அருளே ஆயுதம் ஆக்கொள்
விடத்தினும் மிக்க வெடிக்கும் வெருளாத்
தடப்போர்த் தலைவா! சபர்மதிச் சான்றோய்!
வடத்தினில் மருண்ட மதியில் மாக்களும்
உடன்பணி உரவோய்! ஊழிவாழ் ஊழியே! ௩௬

## வெண்பா

ஊழிநாள் வாழ்க! உலகந் தனிலென்றும்
ஆழி யுருட்டுங்கை அண்ணலே!—நாழிகையில்
மோத வருவோர் முடிசாய்க்கும் மோகனனே!
ஏதமில்லர் வாடாவாழ் வே! ௩௭

## கலித்துறை

ஏதும் அறியா எளியோர்
சிறிய இயல்பினரைத்
தீதில் வழியிற் செலுத்தி
அருளு திறமுடையாய்!

காதற் கனியே! கருத்தில்
வளர்பெருங் கற்பகமே!
நாத! நலம்நிறை காந்தி!
பெருகுக நாள்நினக்கே! ௩௮

### விருத்தம்

நினக்கரிய செயலிந்த நிலத்திலிலை;
நீள்காந்தி! நீயின் றுற்ற
மனக்கருத்து நிறைவேறி வாழ்ந்திடுக
பன்னெடுநாள் மண்ணின் மீதே!
உனைப்பயந்த பாரதத்தாய் உனையிழந்தும்
உய்வாளோ? உச்சி மீது
கனத்தமணி முடிசூடும் கடன்கழியா
தொழியவிடாள்! கருணை வள்ளால்! ௩௯

### அகவல்

வள்ளலே வாழியபல் லாண்டு மண்ணில்!
தள்ளரும் சத்தியமே! தரும வாழ்வே!
எள்ளும் குணமில்லாய்! இனிதே செய்வாய்!
தெள்ளும் அறத்தைச் சீர்த்தமிழிற் செய்த
வள்ளுவர் நூற்கிலக்கா வந்த மணியே!
கள்ளக் கருத்தினர்கள் காணு மலையே!
உள்ளத் தெளியுடையார் உளமன் உத்தம!
எள்ளத் துணைதுயரும் ஏனோர்க் கியற்றாக்
கொள்ளை நலமுடையாய்! கோதில் அறம்வாழ்க!
கிள்ளை மொழிவாழ்க! கேடில் கதர்வாழ்க!
அள்ளும் அமுதனைய அருமைச் செயல்வாழ்க!
வள்ளலே காந்திநீ பல்லூழி வாழ்கவே! ௪௦

# நான்மணிப் பாமாலைச் செ JAN 1950

## முதற் குறிப்பு அகராதி


| தொடர் எண். | பாட்டு | பா எண் | பா வகை | பக்க எண். |
|---|---|---|---|---|
| ௧ | இலகுபுவி | ௨௮ | விருத்தம் | ௪௩ |
| ௨ | உடலினை | ௩௬ | அகவல் | ௪௭ |
| ௩ | உண்ணுமை | பாயிரம் | விருத்தம் | ௩௩ |
| ௪ | உயர்கொள்கை | ௧௫ | விருத்தம் | ௩௯ |
| ௫ | உயிர்வாழ் | ௧௪ | கலித்துறை | ௩௯ |
| ௬ | ஊழிநாள் | ௩௭ | வெண்பா | ௪௭ |
| ௭ | எங்கட்காகவே | ௧௨ | அகவல் | ௩௮ |
| ௮ | என்றென்றும் | ௨௫ | வெண்பா | ௪௩ |
| ௯ | ஏதுமறியா | ௩௮ | கலித்துறை | ௪௭ |
| ௧௦ | ஒடுக்கப்பட் | பாயிரம் | விருத்தம் | ௩௩ |
| ௧௧ | ஒழிந்திடுக | ௧௭ | வெண்பா | ௪௦ |
| ௧௨ | கடலாடை | ௩௫ | விருத்தம் | ௪௬ |
| ௧௩ | காந்தி | ௩௦ | கலித்துறை | ௪௪ |
| ௧௪ | காந்தி நீ | ௫ | வெண்பா | ௩௬ |
| ௧௫ | கூடிடுக | ௧௧ | விருத்தம் | ௩௮ |
| ௧௬ | சிற்றுடல் | ௧௬ | அகவல் | ௪௦ |
| ௧௭ | சீருடை | ௨௦ | அகவல் | ௪௧ |
| ௧௮ | தங்குபுகழ் | ௧௯ | விருத்தம் | ௪௧ |
| ௧௯ | தன்னுவி | ௨௬ | கலித்துறை | ௪௩ |
| ௨௦ | திருமேனி | ௩௧ | விருத்தம் | ௪௫ |
| ௨௧ | நாயக | ௩௪ | கலித்துறை | ௪௬ |

# நான்மணிப் பாமாலைச் செய்யுள்


| தொடர் எண். | பாட்டு | பா எண் | பா வகை | பக்க எண். |
|---|---|---|---|---|
| ௨௨ | நாள்பெருக | ௯ | வெண்பா | ௩௭ |
| ௨௩ | நான்என | ௧ | வெண்பா | ௩௫ |
| ௨௪ | நிலத்து | ௧௮ | கலித்துறை | ௪௦ |
| ௨௫ | நிலவுதரும் | ௨௩ | விருத்தம் | ௪௨ |
| ௨௬ | நினக்கரிய | ௩௯ | விருத்தம் | ௪௮ |
| ௨௭ | நிற்கும் | ௨௨ | கலித்துறை | ௪௨ |
| ௨௮ | பலபல | ௩௨ | அகவல் | ௪௫ |
| ௨௯ | பல்லாண்டு | ௪ | அகவல் | ௩௬ |
| ௩௦ | பல்லோர் | ௨௪ | அகவல் | ௪௨ |
| ௩௧ | புண்ணியனே | ௩௩ | வெண்பா | ௪௬ |
| ௩௨ | மங்களத்தேர் | ௧௩ | வெண்பா | ௩௯ |
| ௩௩ | மட்டில் | ௨௮ | அகவல் | ௪௪ |
| ௩௪ | மன்னிய | ௮ | அகவல் | ௩௭ |
| ௩௫ | மாதவ | ௬ | கலித்துறை | ௩௬ |
| ௩௬ | முடிக | ௧௦ | கலித்துறை | ௩௮ |
| ௩௭ | மேலவனே | ௩ | விருத்தம் | ௩௬ |
| ௩௮ | வள்ளலே | ௪௦ | அகவல் | ௪௮ |
| ௩௯ | வாணாள் | ௨௧ | வெண்வா | ௪௧ |
| ௪௦ | வாழிமணி | ௨௯ | வெண்பா | ௪௪ |
| ௪௧ | வாழிய நீ | ௭ | விருத்தம் | ௩௭ |
| ௪௨ | வாழ்ந்திடு | ௨ | கலித்துறை | ௩௫ |
| ௪௩ | வெண்பா | காப்பு | வெண்பா | ௩௫ |

# மகாத்மா காந்தி

உலகத்தின் எல்லாப் பாகத்திலிருந்தும் காந்தியடிகளைப் பற்றி 63 அறிஞர்கள் எழுதியுள்ளார்கள். பல கோணங்களி லிருந்தும் காந்தியடிகள் ஆராய்ச்சி செய் யப்படுகிறார் இந்த நூலிலே.

◆

தமிழாக்கியவர் :

அறிஞர் வெ. சாமிநாத சர்மா.

◆

வெளியிட்டோர்,

கமலா பிரசுராலயம்

◆

விலை ரூ. 10.

கிடைக்குமிடம் :

**தமிழ்ப் புத்தகாலயம்**

மயிலாப்பூர் :: சென்னை 4.

WRAPPER PRINTED AT JOTHI PRESS, MADRAS 5.